# இந்துமதம் என்ன சொல்கிறது?

## பாகம் - 2

## மங்கலப் பொருட்களின் மகத்துவம்



'கலாபூஷணம்' திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்துமதம் என்ன சொல்கிறது?

## பாகம் - 2

# மங்கலப் பொருட்களின் மகத்துவம்


'கலாபூஷணம்'

திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்

B.A. (Cey.), Dip. in Edu.

இந்து சமயபாட முன்னாள் இணைப்பாளர்,

ஆசிரிய ஆலோசகர், மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி, இலங்கை.



ஞானம் பதிப்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: இந்து மதம் என்ன சொல்கிறது? பாகம் - 2 மங்கலப் பொருட்களின் மகத்துவம்
ஆசிரியர்: 'கலாபூஷணம்' திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்
பதிப்பு: மூன்றாம் பதிப்பு - 2018
பதிப்பகம்: ஞானம் பதிப்பகம்

**Book: Indhumatham Enna Solgirathu? Prt - 2 'Mangalap Porudkalin Mahathuvam'**
**Author: 'Kalabooshanam' Mrs. Gnanam Gnanasekara Iyar**
**Edition: 3rd Edition - 2018**
**Published By: Gnanam Pathippakam**
**3B, 46th Lane, Colombo 06, Sri Lanka**
**Tel: 0094 11 2586013. Fax: 0094 2362862. Email: editor@gnanam.info**
**Web: www.gnanam. info**

Price: SL Rs. 500/= US $ 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெண்பா

சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்
பத்தி யுறுவார் பயனுறுவார் - அத்திமுக
முன்னவனை யைங்கரனை முத்திதரும் புன்னைநகர்
மன்னவனை முன்போற்று வார்

## குலதெய்வ வழிபாடு

(கடவுள் வாழ்த்து - கீரிமலை நகுலேஸ்வரர்)

வையமீதினி லுயிர்களுக் கிகபரம் வழங்கத்
தையலாணகு லாம்பிகை தணந்திடா தமரச்
செய்ய மேனிகொண் டமர்ந்தரு ளுதவுதெய் வீகத்
துய்யதோர்நகு லேசன் திருபதந் துதிப்பாம்

**புகுந்த வீட்டில்**
**என்னைத் தமது அன்பு மகளாக ஏற்று**
**அன்பு சொரிந்து**
**என் மனதில் தெய்வங்களாக வாழ்ந்து**
**அமரர்களான**
**எனது மாமனார், மாமியார்**
**புன்னாலைக்கட்டுவன்**
**பிரம்மஸ்ரீ து. தியாகராசா ஐயர்**
**பாலாம்பிகை அம்மாள்**
**தம்பதியினருக்கு**
**இந்நூல்**
**சமர்ப்பணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

இறைவனின் படைப்பில் பயனற்றவை என்று எதுவுமேயில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் பயன் தருகின்றது. நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என பஞ்சபூதங்களும் மனித வாழ்விற்கு அடிப்படைக் காரணிகள். அதுபோல மரங்கள், மனித வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பதோடு அமையாமல் இறை வழிபாட்டிற்குரிய சமித்துக்கள், காய், கனி, மலர் முதலியவைகளைத் தந்து நிற்கின்றன. விலங்குகளில், பசுவைத் தாயாகப் போற்றி 'கோமாதா' என்ற மிக உயரிய நிலையில் காண்கின்றோம். கொடிய புலியின் தோல் கூட ஆசனமாகப் பயன்படுகின்றது. மானின் தோல், கொம்பு முதலியவை ஆசனமாகவும், அழகுப் பொருளாகவும், மருந்தாகவும் பயன்படுகின்றன. காண்டாமிருகத்தின் கொம்பு அபிஷேக கலசமாகின்றது. பசுவிடமிருந்து பெறுகின்ற கோரோசனை, மானிட மிருந்து பெறுகின்ற கஸ்தூரி இறைவனுக்குரிய அபிஷேகச் சேர்க்கை யாகவும், மக்களுக்கு மருந்தாகவும் அமைகின்றது. ஏன்.... புனுகுப் பூனையின் கழிவு கூட வாசனைப் பொருளாகின்றது.

இப்படி அனைத்துப் பொருட்களையும் இறைமயமாக்கியே சிந்திக்கின்றது நமது சைவசமயம். பாலையும், தயிரையும், தேனையும், சந்தனத்தையும் பஞ்சாமிர்தத்தையும் அவனுக்கு அபிஷேகம் செய்து கண்குளிர, மனங்குளிரக் கண்டு மகிழ்கின்றோம். சிலர் நினைக்கலாம் இப்பொருள்கள் வீணாகின்றதே என்று. அப்படி அல்ல. மரத்தின் வேரில் விடும் நீரால் அம்மரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை, தளிர், பூ, காய், கனி செழித்துச் சிறப்பது போல் இறைவனுக்குச் செய்யும் ஒவ்வொரு செயலும் நமக்கே பயன் விளைவிக்கின்றது. நம்மையே வாழ்விக்கின்றது. சுயநலத்தைக் களைந்து பொது நலத்தை நாட வழி சமைக்கின்றது.

நமது வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களின் சிறப்பையும் அதன் ஆழமான உண்மைகளையும் எல்லோரும் அறியும் வகையில் எளிமையாக, அழுத்தமாக 'மங்கலப் பொருட்களின் மகத்துவம்' என்ற பார்வையில் சிறப்பாக விளக்கியிருக்கிறார்கள் திருமதி ஞானம் ஞானசேகர ஐயர் அவர்கள். 'இந்து மதம் என்ன சொல்கிறது' பாகம் -1 என்ற அவரது புத்தகத்தின் பாகம் - 2 என்ற அங்கமாகவே இந்த நூலும் அமைகின்றது. மக்களுக்கு தெளிவு பிறக்க வேண்டும் என்ற ஆசிரியையின் ஆதங்கம் நமக்குப் புலனாகின்றது. நீண்டகாலம் அவர்கள் ஆற்றிய ஆசிரியப் பணியும், மக்களின் மனங்களுள் புகுந்து, அவர்கள் கொள்ளும் ஐயங்களைத் தெளிவாக்கும் பணிக்கு கைகொடுத்து உதவுகின்றது.

இதுபோன்று அரிய விளக்கங்கள், தெளிவு, ஆழம் கொண்டு இன்னும் பல நூல்கள் திருமதி ஞானத்தின் கைவண்ணத்தில் உருவாகி உலா வரவேண்டும் என்பதே எமது அவா. அதனை நிறைவேற்றித் தர இறைவனின் அருளும் நிச்சயம் வழிகாட்டும்.

அன்புடன்
**வசந்தா வைத்தியநாதன்**

*23.12.2005*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நுழைவாயில் ...

இந்துசமய வாழ்க்கை சமயக் கிரியைகளுடன் தொடர்புபட்டது. இந்துக்களின் இல்லம் புனிதம் நிறைந்த இடமாகவும் தெய்வீக சந்நிதியாகவும், கலைக் கோயிலாகவும், நற்பழக்கவழங்கங்களின் பயிற்சிக்களமாகவும் அமைந்திருக்கும்.

இந்துசமயியின் குறிக்கோள் ஆன்ம ஈடேற்றம் எய்துவதாகும். இதற்கு வழிவகுப்பனவாக அமைவன ஆச்சிரம தர்மங்கள். வாழ்வியலைத் துய்த்து அதற்குரிய தர்மங்களை ஆற்றவேண்டும் என்பதனை ஆச்சிரம தர்மங்கள் வலியுறுத்துகின்றன. ஆச்சிரம தர்மத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் அவற்றுக்குரிய தர்மங்கள், கிரியைகள், சடங்குகள் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டும். இவற்றை நிறைவேற்றப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் மங்கலப் பொருட்களாகும். இவை இறைவழிபாட்டுக்கும் பயன்படுத்தப்படுகின்றமையினால் இப்பொருட்கள் தெய்வீகத் தன்மை உடையவை.

மங்கலப் பொருட்கள் யாவை, இவற்றின் தத்துவப் பின்னணி யாது, இவை எதற்கு, எப்போது, எவ்விடத்தில் பயன்படுத்தப்படுகின்றன முதலிய விளக்கங்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. கிரியைகள், சடங்குகள், அநுட்டானங்கள் ஆற்றுமிடத்து அவை தொடர்பான விளக்கங்களை அறியாமல் செய்வதால் உரிய பயனைப் பெறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமயம் தொடர்பான இவ்விடயங்களை யாவரும் எளிதாக உணரும்பொருட்டு எளிய நடையிலே இந்நூலினை எழுதியுள்ளேன்.

இந்நூலின் ஆக்கத்திற்கு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி ஊக்குவித்தவர்களான எனது தாய்மாமன் கீரிமலை தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் எனது சித்தப்பா மாவை ஆதீனம் பிரம்மஸ்ரீ. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்கள்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய மதிப்புக்குரிய வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி உரியது.

எனது ஆக்கங்களுக்கு என்றென்றும் ஆதார சுருதியாக இருப்பவர் எனது அன்புக் கணவரே.

**திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்**

*23.12.2005*

3B- 46 வது ஒழுங்கை,
கொழும்பு - 6, இலங்கை.
தொலைபேசி: 011 2586013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மஞ்சள் | 11 |
| 2. | தூபதீபம் | 14 |
| 3. | குத்துவிளக்கு | 17 |
| 4. | தீபம் | 21 |
| 5. | மணி | 26 |
| 6. | நிறைகுடம் | 28 |
| 7. | விபூதி | 29 |
| 8. | வாழை | 32 |
| 9. | வாழையிலை | 34 |
| 10. | வெற்றிலை | 35 |
| 11. | பாக்கு | 39 |
| 12. | குங்குமம் | 40 |
| 13. | சந்தனம் | 42 |
| 14. | பூ | 43 |
| 15. | நீர் | 47 |
| 16. | பன்னீர் | 51 |
| 17. | பால் | 51 |
| 18. | தேங்காய் | 56 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 19. | கற்பூர ஆரத்தி | 59 |
| 20. | வாழைப்பழம் | 61 |
| 21. | பலாப்பழம் | 62 |
| 22. | மாம்பழம் | 62 |
| 23. | எலுமிச்சம்பழம் | 64 |
| 24. | சமித்துவகை | 65 |
| 25. | நவதானியம் | 67 |
| 26. | நெற்பொரி | 70 |
| 27. | தர்ப்பை | 71 |
| 28. | அட்சதை | 73 |
| 29. | அறுகு | 76 |
| 30. | துளசி | 77 |
| 31. | மாவிலை | 80 |
| 32. | தோரணம் | 81 |
| 33. | கோலம் | 82 |
| 34. | ஆரத்தி | 86 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் ல.்.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

திருச்சிற்றம்பலம்

(திருஞானசம்பந்தர்)

# இறைவனை அடையும் வழிமுறைகள்

இந்து மதம் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட மதமாகும். வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதற்கு இந்துமத தத்துவங்கள், கிரியைகள் வழிகாட்டுகின்றன. இந்து மதம் இயற்கையோடு இயைந்த மதமாகும். அதனால் அது மனிதகுலத்திற்கு உரிய மதமாகத் திகழ்கின்றது. இந்துமதம் ஏனைய மதங்களின் வளர்ச்சியைத் தடுப்பதில்லை. மற்றைய மதத்தினரை மதமாற்றம் செய்வதற்கு எத்தனிப்பதுமில்லை.

மனிதர்கள் உருவத்தாலும் சிந்தனையாலும் செயலாலும், வெவ்வேறான இயல்புகளைக் கொண்டவர்கள். இவர்கள் யாவரையும் ஒரே சிந்தனையாலோ அல்லது இறைவன் ஒருவன்தான் என்ற கொள்கையினாலோ ஒன்றாகச் சேர்த்து வைக்க முடியாது என்பது இயற்கையின் விதியாகும். இந்த இயற்கை விதியினைத் தெளிவாகப் புரிந்து கொண்டது இந்துமதம். மனிதர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பங்களுக்கும் உணர்வுகளுக்குமமைய இறைவழிபாட்டினை ஏற்று அதன் வாயிலாக வேற்றுமையில் ஒற்றுமை காண்பது இந்துமதம் காட்டும் வழியாகும். வழிபாடு என்பது மனம், வாக்கு, காயம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டது. உணர்வுகளுக்கொப்ப இறைவனைப் பல பெயர்களிட்டு வழிபாட்டினை ஆற்றி, தமது குறிக்கோளை அடைவதற்கு வழி செய்கிறது இந்துமதம். எந்த உயிர்களிடத்தும் அன்பு செலுத்துபவன் இந்து ஆவான். சகல தரத்தினருக்கும் மனச்சாந்தியையும் மனநிறைவினையும் அளிக்க வல்லது இந்துமதம்.

இந்து மதம் ஒன்றுதான் அதிகளவு எண்ணிக்கைகளைக் கொண்ட தத்துவ நூல்களைக் கொண்டது. எத்தனை எத்தனை வகையான நூல்கள்! வேதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், பகவக்கீதை, வேதாந்த நூல்கள், தேவார திருவாசகங்கள், பிரபந்தங்கள் சைவசித்தாந்த சாத்திரங்கள், திருமந்திம் இப்படி வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். நம்முடைய அகவாழ்க்கை நிறைவானதாகவும், பலம் பொருந்தியதாகவும், உயர்ந்த மானுட இயல்புகளைக் கொண்டதாகவும் அமைய வேண்டுமாயின் நாம் இந்துமத தத்துவ நூல்களைப் படித்தல் இன்றியமையாததாகும். அதிற் கூறப்பட்டவாறு வாழ்க்கையை வாழ்வதற்கு முயற்சிக்க வேண்டும். இந்துமத தத்துவக் கருத்துக்கள் யாவும் மனிதனுடைய குறைகளைப் போக்கி அவனை நிறைவடையச் செய்வதாகும்.

இத்தகைய மகிமை பொருந்திய இந்து மதத்தில் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய வழிமுறைகளைக் கூறும் மூன்று வகையான பிரிவுகள் உள்ளன. அவையாவன:

தத்துவம் : - ஞானாம்சம்
புராணம் : - கதையம்சம்
சடங்கு :- கர்மாம்சம்

தத்துவம் என்பது மெய்யறிவான ஞானத்தின் அம்சங்களைக் கொண்டது. எல்லோராலும் இலகுவாகத் தத்துவங்களை விளங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியாது. அறிவு முதிர்ந்து மனப்பக்குவம் அடைந்த நிலையிலேதான் தத்துவங்கள் என்ன சொல்கின்றன என்பதனை எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும்.

தத்துவங்களில் கூறப்பெற்ற தர்மவிதிகளைக் கதைகள் மூலமாக கூற எழுந்தவைதான் இதிகாச புராணங்களாகும். புராணம் தத்துவங்களின் பூதக்கண்ணாடி எனலாம். ஒரு விடயத்தை இரத்தினச் சுருக்கமாகச் சொன்னால் அது இலகுவில் மனதில் பதியமாட்டாது. ஆனால் அதனைச் சுவைபட கதையம்சத்துடன் விளக்கிச் சொன்னால் மனதில் இலகுவாகப் பதிந்துவிடும். 'ஸத்தியம்வத' (உண்மை பேசு) என வேதம் சொல்கிறது. இதனை அரிச்சந்திரன் என்ற பாத்திரத்தின் வாயிலாக உண்மைபேசுதலை எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டுமென அரிச்சந்திர புராணத்தில் பல சம்பவங்களினூடாகச் சுவைபடக் கூறப்பட்டுள்ளது.

'தர்மம் சர' (அறத்தினைப் பின்பற்று) இக்கருத்தினை தர்மன், பீஷ்மர், விதுரன் ஆகிய பாத்திரங்களின் வாயிலாக மகாபாரதம் விளக்குகிறது. 'மாத்ரு தேவோபவ, பித்ரு தேவோ பவ'. அன்னை தந்தையைத் தெய்வமாகக் கொள் என்ற வேதவாக்கிற்கமைய ஸ்ரீ இராமன் வாழ்ந்தாரென இராமாயணம் எடுத்துக்காட்டுகிறது. அடக்கம், தயை, பொறுமை, நட்பு, சகிப்பு, கற்புநெறி இவை போன்ற தர்மங்களைக் கடைப்பிடி என வேதத்தில் கூறப்பட்ட வற்றையே புராணக்கதைகள் பாத்திரங்கள் வாயிலாகக் கூறுகின்றன. புராணங்களைப் படிப்பதாலும் கேட்பதாலும் இந்துமத தர்மங்களில் ஆழ்ந்த ஈடுபாடு உண்டாவதுடன் அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் ஏதுவாகிறது.

இந்து சமயி ஒவ்வொருவரினதும் முக்கிய குறிக்கோளாகத் திகழ்வது ஆன்ம ஈடேற்றமாகும். அதற்கு ஆன்மீகம் தொடர்பான பயிற்சியும், அறிவும் தேவை. ஆரம்பவகுப்பு மாணவர்கட்கு கல்வி கற்பிக்கும் போது உபகரணங்களைக் காண்பித்து அவற்றை அவர்கள் பார்த்தும் தொட்டும் செய்தும் அவற்றின் மூலம் செயற்பாடுகளைச் செய்தும் கல்வி பயில்கின்றனர். அதேபோன்று மதநெறிமுறைகளைச் சாதாரண மக்கள் பயில்வதற்கு ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள், அனுட்டானங்களாகும். ஆன்மீக வளர்ச்சிக்கு சடங்குகளும் அனுட்டானங்களும் ஆரம்பநிலை எனில், தத்துவம் இறுதிப்படியாகும்.

இந்துவாகப் பிறக்கும் ஒவ்வொருவனும் ஆன்ம ஈடேற்றம் பெறும் பொருட்டு, உடல் சார்ந்த நிலையிலும் உளம் சார்ந்த நிலையிலும் பல சடங்குகளை ஆற்ற வேண்டுமென இந்துமத தர்மசாத்திரங்கள் கூறுகின்றன. சடங்குகள் ஆற்றுமிடத்து சகல வயது மட்ட நிலையில் உள்ளவர்களும் ஒருமித்து அச்செயற்பாடுகளை ஆற்றுவதற்கு வழியேற்படுகிறது. சடங்குகள் ஒருவரின் ஆன்ம வளர்ச்சிக்கு துணைபுரிவது மட்டுமன்றி சமய அறிவினை ஏற்படுத்தி சமயவாழ்க்கை வாழவும் வழி வகுக்கும். வாழ்க்கை வேறு சமயம் வேறு அல்ல. வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்ததுதான் சமயம். சடங்குகளைக் கடைப்பிடிப்பதனால் ஒவ்வொருவரும் ஆன்மீகத்தை தழுவமுடிகிறது.

இந்து சமயியின் சடங்குகளும் சம்பிரதாயங்களும் தாயின் வயிற்றில் ஒருவன் கருவாக இருக்கும் நிலையில் ஆரம்பிக்கப்பட்டு அவனது இறுதிக் காலம்வரை தொடர்ந்து நடைபெறுகின்றன. அவன் ஆன்ம ஈடேற்றம் பெறும் வரையிலும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் கடைப் பிடிக்கப்படுகின்றன.

ஷடங்கம் என்பதே சடங்கு என்றாகிறது. வேதங்களின் அங்கங்கள் ஆறு. அவை மூலம் செய்யப்படும் கிரியைகளே சடங்குஆகும். அவையாவன:

சிட்சை - மூக்கு, வியாகரணம் - வாய், நிருத்தம் - காது, சோதிடம் - கண், கல்பம் - கை, சந்தஸ் - கால். இந்த உறுப்புக்களின் மூலம் மந்திரங்களுடன் செய்யப்பெறுவது சடங்குகளும் கிரியைகளும் ஆகும்.

நாம் அணிகின்ற அணிகலன்கள் செய்வதற்குரிய தங்கம் சுரங்கத்திலிருந்து எடுக்கப்படுகிறது. தங்கச் சுரங்கத்தில் எடுக்கப்பட்ட கலந்த மண் தங்கம் பலவகையான படிநிலைகளில் சுத்தம் செய்யப்பட்ட பின்னரே அணிகலன்கள் செய்வதற்குத் தயாராகின்றது. அதே போன்று இந்துவானவன் தன்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவப்படுத்துவதற்குப் பல்வேறு வகையான சடங்குகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென இந்து சமய சாத்திரங்கள் கூறுகின்றன. சடங்குகள் மனங்களிலுள்ள ஆசைகளைப் படிப்படியாகக் களைந்து மனிதனை இறை சிந்தனைக்கு இட்டுச் செல்கின்றது.

வேதங்களில் கூறப்பெற்ற சடங்குகளை யெல்லாம் மனு என்னும் ரிஷி சிறப்பான முறையில் எமக்கு வகுத்துத் தந்துள்ளார். மனுதர்ம சாத்திரங்களில் இந்து சமயத்தவரின் சடங்குகள் யாவும் கூறப்பெற்றுள்ளன. தர்மநீதிகளுக்கும், செயல்களுக்கும் மனு கூறியதே அளவுகோலாகும். மனுவின் உபதேசங்கள் இந்தியாவில் மட்டுமன்றி தென் ஆசியாவின் பலநாடுகளிலும் பின்பற்றப்படுகின்றன. மனுவை மனித குலத்தின் தந்தை எனக்கூறுவர். மனு என்ற வார்த்தையிலிருந்துதான் 'மனிதன்', "Man" ஆகியவார்த்தைகள் தோன்றின.

மனுநீதி சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளவை:

1. உலகின் தோற்றம்
2. உயிர்களின் தோற்றம்
3. யுகம்தோறும் மாறுபடும் தருமங்கள்
4. திருமணமும், இல்லறவாழ்வும், இல்லறத்தில் செய்ய வேண்டிய ஐந்து வேள்விகள் (நல்ல நூல்களை ஓதுதல், மூதாதையரைப் பேணுதல், கடவுளைப் போற்றுதல், விருந்தினரை உபசரித்தல், ஏனைய உயிர்களைப் போற்றுதல்.
5. பொருள் சம்பாதித்தலின் நெறிமுறைகள்
6. தனிமனிதனின் கடமைகளும், பழக்க வழக்கங்களும்
7. பெண்களின் கடமைகள், செய்யப்பட வேண்டிய தர்மங்கள்
8. சடங்குகள் - ஒவ்வொரு படிநிலையிலும் ஆற்றப்பட வேண்டியவை.
9. தூய்மையான உணவு
10. அரசரது கடமைகள், நெறிமுறைகள்
11. எசமானுக்கும் ஊழியனுக்குமுள்ள தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பாவங்களும் பிராயச்சித்தங்களும்

13. அறநெறிகள்

14. ஆன்மஞானம்

இந்துசமய ஞானிகள் மனிதனுக்கு எது நிம்மதியை அளிக்கும் என்பதனை ஆராய்ச்சி செய்தபின் ஓர் உண்மையைக் கண்டறிந்தனர். மனிதன் உலக இன்பங்களைத் துறக்காதவரையில் அவன் ஆன்ம ஈடேற்றம் பெறமுடியாது என்பதே அவர்கள் கண்ட உண்மையாகும். அந்த உண்மையின் அடிப்படையில் ஞானியர் வகுத்த வாழ்க்கை நெறிகளே ஆச்சிரம தர்மங்களாகும். பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகியவை நான்கு ஆச்சிரமங்களாகும். இந்நான்கு நிலைகளையும் ஒரு மரத்தின் அரும்பு, மலர், காய், கனி ஆகியவற்றிற்கு ஒப்பிட்டு இந்நிலைகளில் இருக்குமிடத்து வகுக்கப்பட்ட சடங்கு, சம்பிரதா யங்களைத் தவறாது கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என நெறிப் படுத்துகிறது இந்துசமயம். தர்மத்திற்கான அறத்தைத் காத்து அறவழியில் பொருள் பெற்று, அதன் மூலம் இன்பத்தை அனுபவித்து வாழ்ந்தபின் சந்நியாசப் படிநிலையில் வீடு பேற்றினை அடைய ஆன்மீக முயற்சியை மேற்கொண்டு ஆன்மஈடேற்றம் பெற வேண்டுமென இந்து சமயம் கூறுகின்றது.

இந்துமதம் ஒன்றிலேதான் அக்கினி காரியத்தின் மூலம் கிரியைகள் சடங்குகள் நடாத்தப்படுகின்றன. கிரியைகள், சடங்குகள் ஆற்றுமிடத்து மனம், மொழி, காயம் ஆகிய மூன்றும் ஒருமித்துச் செயற்படுகின்றன.

இந்து ஒருவன் பிறந்தது முதல் இறுதிவரை அவனது வாழ்க்கையில் மொத்தம் 40 சடங்குகள் செய்ய வேண்டுமென வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவற்றில் முக்கியமான சடங்குகள் கீழ்வருமாறு: கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், பூச்சூடல், ஜாதக கர்மம், நாமகரணம், நிஷகிரமணம் (ஒளியூட்டுதல்), அன்னப்பிராசனம், சூடாகரணம் (முடி அகற்றுதல்), ஆயுஷோமம், வித்யாரம்பம், உபநயனம், சமாவர்த்தனம், திருமணம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் உபநயனம், சமாவர்த்தனம் போன்றவை அந்தணர்க்குரிய சடங்குகளாகும். இன்றைய காலகட்டத்தில் ஒரு சில சடங்குகளே மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன.

சடங்குகள் அனுட்டானங்களை ஆற்றும்போது பயன்படுத்தப் படுகின்ற பொருட்கள் யாவும் மங்கலப் பொருட்களாகும். ஆலயத்தில் இறைவனின் பூசை ஆராதனைகளுக்கு உபயோகிக்கப் படும் பொருட்களில் அனேகமானவை இல்லறச் சடங்குகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்துக்களுக்கு சித்தரை முதல் பங்குனி வரை பன்னிரண்டு மாதங்களிலும் விழாக்களும் பண்டிகைகளும் தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கும். இத்தகைய விழாக்கள் பண்டிகைகள் மக்களின் உள்ளத்தை ஆட்டிப் படைக்கின்ற நான், எனது என்ற ஆணவம், அகங்காரம்,ஆகியவற்றை நீங்கவகைசெய்வதோடு சாந்தமான சத்துவக்குணம் மேலோங்கவும் வழி செய்கிறது. அத்துடன் சமூக இசைவாக்கத்திற்கும் இவை உறுதுணையாக விளங்கு கின்றன.

சடங்குகளில் உன்னதமானது திருமணச் சடங்காகும். இது ஒரு சமுதாய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. திருமண வைப வத்தின் பின்புதான் உறவுகள் விரிவு பெற்று ஒருவன் சமூக உறுப்பினனாகி சமுதாயத்துடன் இணைந்து கொள்கின்றான். கணவன், மனைவி. அண்ணன், தம்பி, தாய், மகள், தந்தை, மகன், மாமியார், மாமனார், மூத்தோர் இளையோரெனப் புதிய உறவுமுறைகள் கிடைக்கப் பெறுகின்றான். எந்தச் சடங்குகளை ஆற்றுமிடத்தும் அக்கினி பகவானைச் சாட்சியாக வைத்தே ஆற்றப்படும். கிரியைகள் இந்து சமயத்தில் மட்டுமே தனித்துவமாகவுள்ளது. எந்தச் சடங்கு சம்பிரதாயங்களிலும் ஆண்களுக்கு மட்டுமன்றி பெண்களும் சமபங்கினைக் கொடுத்து பெண்களுக்குப் பெருமை அளிக்கிறது இந்துமதம்.

திருமணச் சடங்கு என்பது வாழ்க்கைக்குரிய ஒப்பந்தம் மட்டுமன்றி புனிதமானதொரு இணக்கமுமாகும். திருமணச் சடங்கு சமுதாயத்திற்குரிய வாழ்க்கைக் கோட்பாடுகளின் ஆழமான தத்துவங்களைக் கொண்டது. உடல் இரண்டு எனினும் இயல்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று என்பது திருமணச் சடங்கின் தத்துவமாகும். உயிர்கள் ஆணும் பெண்ணுமாகப் பிறக்கின்றன. உலக போகங்களை அனுபவிக்கவும் இல்லற நிலையில் உரிய கடமைகளைச் செய்யவும் இருவராகப் பிரிந்து நின்று பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. இக்கடமைகளை ஆற்ற இவ்வுலகத்தில் இருவராகப் பிறக்க நேர்ந்தது.

குடும்ப அங்கத்தவர்களின் கருத்துக்களில், மனப்பான்மைகளில், அறிவுமட்டத்தில், வேற்றுமை காணப்பட்டாலும் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென இந்துமதம் காட்டுகிறது. வேற்றுமையில் ஒற்றுமைகண்டு வாழ்க்கையைச் செப்பமுற வளம்பெறச் செய்யலாம் என்பதனை இறைவனே முன்மாதிரியாக எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்பு, பரிவு, பாசம், தாயன்பு இவைகளைக் கொண்டவளான சக்தி, ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாக முருகப் பெருமான், ஞானத்தை அளிக்கும் ஓங்கார அறிவின் சொரூபமாக விநாயகப் பெருமான், எல்லா உயிர்களுக்கும் தலைவராகவும் யாவற்றையும் கடந்தவருமாகிய சிவபெருமான்.

சிவபிரானின் வாகனம் இடபம் (காளை), முருகப் பெருமானின் வாகனம் மயில், பெருச்சாளி விநாயகப் பெருமானின் வாகனம். சக்தியின் வாகனம் சிங்கம். சிவபிரான் கழுத்திலும், மயிலின் காலிலும் பாம்புகள். இத்தகைய முரண்பட்ட குண இயல்புகளைக் கொண்ட உயிர்களுடன் சிவபெருமான் எமக்கெல்லாம் கயிலங்கிரியில் வீற்றிருந்து அருள்புரிகின்றார். பகுத்தறிவற்ற சிங்கம் காளைகளையும், மயில் பாம்பினையும், பாம்பு பெருச்சாளியையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாக்கலாம். ஆனால் சிவபிரானின் அருகில் கருத்து முரண்பாடுகளோ, மோதல்களோ ஏற்படுவதில்லை. இறைபக்தியும் அன்பும்தான் உலகைச் சாந்தியும் அமைதியும் பெறச் செய்யும். சிவஞானம் இறைபக்தி பெற்றவர்க்கு எந்த உயிரும் தன்னுயிரே என்பதனைச் சிவபெருமானின் சிவகுடும்பம் எடுத்துக்காட்டுகிறது. எமது வாழ்வு இங்ஙனமாக இருக்க வேண்டுமென முன்மாதிரியாக எடுத்துக்காட்டியுள்ள பெருமை இந்து மதத்தில் மட்டுமே உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணுக்குப் பெண் எப்பொழுதும் எந்நிலையிலும் தாழ்ந்த வளல்லள் என்பதனை உலகத்துக்கு எடுத்துக்காட்ட எம்பெருமான் கொண்ட திருக்கோலம் அர்த்தநாரீசுவரர் வடிவமாகும். இது வலப்பகுதி ஆணாகவும், இடப்பகுதி பெண்ணாகவும் இருக்கும் திருக்கோலமாகும். சிவபிரான் வலது கண் சூரியனாகவும் இடது கண் சந்திரனாகவும் கொண்டுள்ளார். ஆண்மகன் சூரியனின் ஒளிபோன்று குடும்பத்திற்கு ஒளியூட்டுபவனாகவும் தலைவனாகவும் உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பவனாகவும் இருக்க வேண்டும். பெண் சந்திரனின் தண்மையான ஒளியுடன் தயை, பரிவு, முதலிய பண்புகளுடன் அறியாமை என்ற அஞ்ஞான இருளை நீக்குபவளாக இருக்க வேண்டும் என்பதை இவ்வடிவம் உணர்த்துகிறது.

எனவே இந்துமதம் ஒவ்வொருவரும் எங்ஙனம் வாழவேண்டு மென்பதை இயற்கைவாத முறையுடன் எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

சுபகாரியங்கள் அதாவது மங்கல நிகழ்வுகளுக்காகப் பயன் படுத்தப்படுகின்ற பொருட்கள் மங்கலப் பொருட்கள் எனப்படும். எந்த மங்கல காரியங்கள் நிகழுமிடத்தும் மங்கலப் பொருட்களைக் காட்சியாக வைத்து நடத்துமிடத்து அச்சூழல் ஒரு புனித இடமாகக் காட்சிதரும். இத்தகைய சடங்குகள் மூலம் இல்லமே ஓர் ஆலயமாக மாறுகின்றதெனலாம். மங்கலப் பொருட்களுடன் சடங்குகள் ஆற்றுமிடத்து அவ்வப் பொருட்களுக்கான தெய்வீகத் தன்மையினை பாமரமக்கள் கூட அறிகின்றனர். இதனால் அவர்களிடம் சமய அறிவுடன் சமய உணர்வு பொருந்திய ஆன்மீகம் துளிர்த்தெழுகிறது. சடங்குகள் ஆற்றுமிடத்து குடும்ப அங்கத்தவர், இனத்தவர், மற்றும் நண்பர்கள் யாபேரும் கலந்து கொள்கின்றமையால் உறவுகள் நெருக்க மடைகின்றன.

இந்நூலின் நோக்கமானது இந்து மதத்தவர் சுபகாரியங்களில், அனுட்டானங்களில் சம்பிரதாயங்களில் உபயோகப்படுத்துகின்ற மங்கலப் பொருட்கள் யாவை? அவற்றின் தாற்பரியம் யாது? எச்சடங்குகளுக்காக எவையெவை பயன்படுத்தப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய விளக்கங்களை முன்வைப்பதாகும். பின்வருபவை மங்கலப் பொருட்களாகும். மஞ்சள், நவதானியம்,தூபதீபம், குத்துவிளக்கு, தீபம், நிறைகுடம், நீர், குங்குமம், தர்ப்பை, நெற்பொரி, வெற்றிலை, தேங்காய், வாழை, வாழையிலை, வாழைப்பழம், பாக்கு, பால்,கோமயம், அட்சதை, மணி, மாவிலை, தோரணம், விபூதி, சந்தனம், பூ, அறுகு, துளசி, பன்னீர், கோலம், ஆரத்தி. இவற்றுள் சில பொருட்கள் கிரியைகளுக் குரியவையாகவும், சில பூசைக்குரியவையாகவும், சில அலங்காரத்துக் குரியவையாகவும், சில நிவேதனப் பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலார் கூப்புவர்தம் கை.

திருச்சிற்றம்பலம்

- கபில தேவநாயனார் -

## 01. மஞ்சள்



மஞ்சள் தெய்வீகத்தன்மை பொருந்திய மங்கலப்பொருளாகும். எல்லாச் சுபகாரியங்களும் பிள்ளையார் வழிபாட்டுடன்தான் ஆரம்பிக்கப்படல் வேண்டும். பிள்ளையாரின் உருவினை மஞ்சள் மாவில் பிடித்து, உச்சியில் அறுகம்புல் சாத்தி வழிபாடு செய்த பின்னரே ஏனைய காரியங்கள் நிகழ்த்தப்படுதல் வேண்டும். இந்து சமயிகளின் சுபகாரியங்களுக்கான திரவியங்கள், கிரியை களுக்கான பொருட்கள் எழுதப்படும்போது மஞ்சளையே முதலில் சிட்டையில் எழுதுவர். மங்கலப் பொருட்களுக்கான பட்டியல் ' சிட்டை' எனப்படும்.

மஞ்சளின் தெய்வீகத்தன்மை காரணமாக அதனைத் திருமணத்தின் போது திருமாங்கல்யமாக அணிவார்கள். 'மாங்கல்யம் தந்துனானே' என்ற மந்திரத்தில் 'தந்து' என்பது மஞ்சள் கயிறாகும். திருமாங்கல்யம் மஞ்சள் கயிற்றினாலேதான் கட்டப்பட வேண்டும். தாலிக்கொடி தங்கத்தினால் அணிந்தாலும் மஞ்சள் கயிற்றில் கட்டப்படும் திருமாங்கல்யம் தெய்வீகத்தன்மை பொருந்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிமாதம் முடிந்து பங்குனி மாதப்பிறப்பன்று திருமணமான சுமங்கலிப் பெண்களால் அநுட்டிக்கப்படுவது 'காரடை' நோன்பாகும். இந்த நோன்பு அநுட்டிப்பவர்கள் விரதம் இருந்து தமது பழைய திருமாங்கல்யக் கயிற்றினை மாற்றி புதிய மஞ்சள் கயிற்றில் திருமாங்கல்யத்தைக் கோத்து அணிந்து கொள்வர்.

இல்லங்களில் சுமங்கலிப்பூசை நடாத்தப் படுவதுண்டு. வீட்டுக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள் குங்குமம், பூ, சுவர்ணபுஷ்பம் (காசு) வெற்றிலை, பாக்கு வஸ்திரம் இவற்றைக் கொடுத்தால் மாங்கல்ய பலம் கிடைக்கும். சுமங்கலிப் பூசை செய்யும் பொழுது சுமங்கலிப் பெண்களின் கால்களை மஞ்சள் நீரினால் கழுவி வழிபாடு செய்தல் வேண்டும்.

இல்லங்களில் காலை மாலை மஞ்சள் நீர் தெளித்துவர மகாலட்சுமி கடாட்சம் உண்டாகும். சுமங்கலிப் பெண்கள் மஞ்சள் பூசிக் குளித்து வந்தால் முகம் வசீகரமாவதுடன் இலட்சுமி கடாட்சமும் ஏற்படும்.மஞ்சள் ஒரு கிருமிநாசினியுமாகும். பெண்கள் முகத்தில் உடம்பில் மஞ்சள் பூசிக் குளித்தால் சரும நோய் அணுகாது, முகத்தில் பருக்கள், தேமல் வராது, உரோமம் வளராது. தலைக்குத் தண்ணீர் விடும் முன்பு, சிறிது மஞ்சளை முகத்தில் பூசியதன் பிற்பாடுதான் தலைக்குத் தண்ணீர் விடுதல் வேண்டும். மஞ்சள் நீர் தெளிக்கப்பட்ட வீடு தெய்வீகக்களையுடன் பொலிவுற்றுக் காணப்படும்.

மார்கழி மாதம் பிறந்ததும் வீட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகி, கோலம் இடுதல் வேண்டும். கோலத்தின் மத்தியில் சாணம் அல்லது மஞ்சள் மாவினால் பிள்ளையார் பிடித்துவைத்து வழிபாடு செய்வது இந்துசமய வழக்காகும். இது மார்கழிப் பிள்ளையார் வழிபாடாகும். மார்கழி முடிந்ததும் வழிபட்ட பிள்ளையாரை புனித நீர்நிலைகளில் விடுதல் வேண்டும். தைமாதம் பிறந்ததும் தமது வாழ்க்கை வளத்துடன் அமையவேண்டுமென பெண்கள் வருட இறுதி மாதமான மார்கழியில் பிள்ளையாரை வழிபடுவர்.

தைத்திருநாளன்று மஞ்சள், இஞ்சி, கரும்பு, நெல் யாவும் வளமாக அறுவடை செய்யப்பட்டிருக்கும். பொங்கல் பொங்குமிடத்து சாணத்தினால் மெழுகி, மஞ்சள் நீர்தெளித்து, கோலம் போட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்சி, மஞ்சள், கரும்பு, வாழை இவற்றால் அலங்காரம் செய்வர். சூரியபகவானுக்குப் படைக்கப்படும் பொங்கலுடன் மஞ்சள், இஞ்சி, கரும்பு ஆகியவற்றை நிவேதனமாகப் படைப்பர்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் நிகழ்த்தப்படுவது பட்டிப் பொங்கலாகும். இதனைக் 'கோபூசை' எனவும் கூறுவர். பசுவின் உடலின் பின்புறத்தில் மகாலட்சுமியும் அதன் உடம்பெங்கும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வீற்றிருக்கின்றனர் என வேதத்தில் கூறப்பட்டுள்ளது. கோபூசையின் பொழுது பசுவையும் கன்றையும் குளிப்பாட்டி பசுவின் முகத்தில் மஞ்சள் பூசி குங்குமம் இட்டு, கழுத்தில் மாலை வஸ்திரம் ஆகியன சாத்தி, அதன் பின்புறத்திலும் மஞ்சள் பூசி குங்குமம் சாத்துதல் வேண்டும். பின்பு தூபதீபம் காட்டி மந்திரங்களால் அர்ச்சித்து கற்பூர தீபாராதனை செய்தல் வேண்டும். வெள்ளிக்கிழமை, அமாவாசை தினங்களில் கோபூசை செய்தால் இலட்சுமி கடாட்சம் கிடைக்கும். கோபூசை வழிபாட்டிற்கு மஞ்சள் முக்கியமானது.

வீடு, ஆலயம் போன்ற கட்டட நிர்மாணத்தின் பொழுது செங்கட்டி, கற்கள் முதலியவற்றை அத்திபாரத்திற்கு இடும்போது அவற்றிற்கு மஞ்சள்மாவைக் குழைத்துப்பூசி குங்குமப்பொட்டு இட்டு அதன் பின்னரே பூசிக்கப்பட்ட அத்திபாரக்கல்லை இடுதல்வேண்டும்.

சின்னம்மை, பெரியம்மை நோய் ஏற்பட்டால் நோயின் குணம் குறைந்தவுடன் நோயாளியை மஞ்சள் பூசிக் குளிப்பாட்டுவார்கள். நோயினால் ஏற்பட்ட தழும்புகளை ஆற்றிவிடும் தன்மை மஞ்சளுக்கு உண்டு. இல்லங்களை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் மஞ்சள் நீரினால் துடைத்து வந்தால் தூய்மையாக இருப்பதுடன் நோய்க்கிருமிகள் அற்றுப் போகும். மஞ்சள் ஒரு கிருமிநாசினிக்குரிய பண்பினைக் கொண்டதென விஞ்ஞானரீதியாக விளக்கியுள்ளனர். இங்கே மஞ்சள் மருத்துவ மூலிகையாகப் பயன்படுகிறது.

பெண்கள் ருதுவானவுடன் மஞ்சள் நீரினாலேயே குளிப் பாட்டுவார்கள். பிரசவித்த தாய்மார், கர்ப்பிணிப் பெண்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்க்கிருமிகள் தொற்றாமல் இருப்பதற்காக மஞ்சள் பூசிக் குளிப்பதுண்டு. பிரசவித்த தாய்மாரின் உடற் புண்ணையும், உடல் வலியையும் மஞ்சள் போக்கவல்லது.

கிராமப்புறங்களில் விழாக்கள், பண்டிகைகள் முடிவடைந்தவுடன் அவ்வூர் மக்கள் ஒன்று சேர்ந்து 'மஞ்சள் நீராட்டுவிழா' என்ற வைபவத்தினைக் கொண்டாடுவர். மஞ்சள் நீரை ஒருவருக்கு ஒருவர் தெளித்தும் எற்றியும் குதூகலம் கொள்வர்.

திரவியங்களால் திருவுருவங்களுக்கு அபிடேகம் செய்யுமிடத்து மஞ்சளினால் காப்புச் சாத்தி அபிடேகம் செய்யப்பெறும். மஞ்சள் காப்புச் சாத்துவதன் மூலம் கிடைக்கப்பெறும் அருள் இராஜ வசியமாகும். அபிடேகத்தின் பொழுது முதலில் நல்லெண்ணெய் திருவுருவத்திற்குச் சாத்துவார்கள். அதன் பிற்பாடு மஞ்சள் சாத்தப்பெறும். தெய்வீகச் சூழல், புனிதத் தன்மை இவற்றினை மேம்படுத்துவதற்காக மஞ்சள் நீர்தெளிப்பர். அம்பாளுக்கு அபிடேகம் இடம் பெறுமிடத்து மஞ்சள் நீரினால்தான் அபிடேகம் செய்யப்பெறும்.

எனவே மங்கலப் பொருட்களுள் மஞ்சள் தெய்வீகத் தன்மை பொருந்தியதாகவும், மருத்துவ ரீதியிலும், அழகு சாதனப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

✦✦✦

## 02. தூபதீபம்



மங்கல காரியங்கள் வீடுகளில் நடைபெறும் பொழுது முதலில் இடம் பெறுவது தூபதீபம் காட்டுதல் ஆகும். தூபதீபம் என்பது தூபத் தட்டில் நெருப்புத் தணல் எடுத்து அதில் சாம்பிராணி அல்லது தசாங்கம் தூவி அதனால் எழுப்பப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுமணப்புகையை, இறையருள் பெற வேண்டிக் காட்டுவதாகும். தூபதீபம் காட்டப்படும் பொழுது இதனால் எல்லோர் உள்ளங்களிலும் புத்துணர்வும் ஆன்மீகச் சூழலும் ஏற்பட்டு இறைசிந்தனை ஏற்படுகின்றது. இறைவனின் ஞான விளக்கினை எண்ணுதல் வேண்டுமென்பதே தூபதீபம் காட்டப்படுவதன் தத்துவவிளக்கமாகும். நாம் எங்கு சென்றாலும், எவ்விடத்தில் இருந்தாலும் மற்றவர்கட்கு நறுமணம் வீசுபவர்களாகத் திகழ வேண்டும் என்பதனை தூபதீபத்தின் நறுமணப்புகை எமக்கு எடுத்தி யம்புகிறது. மங்கல காரியங்கள் நிகழப் போகின்றது என்பதனை எடுத்துக்காட்டுவது தூபதீபத்தின் நறுமணப் புகையாகும்.

முதலில் தூபதீபத்தை வீட்டில் உள்ள சுவாமி படங்களுக்கு 'ஓம்' என்ற பிரணவ வடிவில் மூன்று தடவை காட்டி ஆராதித்தல் வேண்டும். அதன்பின்னர் வீட்டு வாயிலிலும், வீட்டிற்குள்ளேயும் தூபதீபம் காட்டி வழிபாடு செய்தல் வேண்டும். இதனால் இலட்சுமி கடாட்சம் உண்டாகும். செவ்வாய், வெள்ளி நாட்களிலும், விசேட தினங்களிலும் தூபதீபம் காட்டுதல் வழக்கமாகும்.

வீட்டின் முற்றத்தில் துளசிமாடம் அமைத்து அதற்குத் தூப தீபம் காட்டி வழிபாடு செய்துவந்தால் மாங்கல்ய பாக்கியம் வளமாகும்.

தொழில் நிலையங்களிலும், ஏனைய நிறுவனங்களிலும் தினந்தோறும் காலையில் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மஞ்சள் நீர் தெளித்து, நிலையம் முழுவதும் தூபதீபம் காட்டுதல் வேண்டும். சுவாமி படங்கள், தொழில்புரியும் தளபாடங்கள், பணப்பெட்டி, வியாபாரப் பொருட்கள் இவற்றுக்கெல்லாம் தூபதீபம் காட்டி வழிபாடு செய்தல் வேண்டும். இது ஆண்டாண்டு காலமாகக் கடைப்பிடித்து வரப்படும் வழிபாடாகும். இதனால் தனலாபம் பெருகும் என்பதனை எம்முன்னோர் நடைமுறையில் கண்டுள்ளனர். வாகனங்களுக்கும் வெள்ளி, செவ்வாய் மற்றும் விசேட தினங்களில் தூபதீபம் காட்டி வழிபாடு செய்வர். தினமும் காலையில் வெளியே கிளம்புமுன் வாகனத்திற்கு ஊதுபத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிவைத்து வழிபட்டதன் பின்புதான் வாகனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

வீட்டில் கிரியைகள் நிகழுமிடத்து மணிநாதத்துடன், 'தூபதீபம் சமர்ப்பயாமி' என்று சொல்லி தூபதீபம் காட்ட வேண்டும்.

குழந்தைகளைக் குளிப்பாட்டிய பின்னர் சாம்பிராணித் தூபம் காட்டுவார்கள். இதனால் குழந்தைகளுக்கு சளி நெஞ்சில் ஏற்படமாட்டாது. அதேபோன்று பிரசவம் நிகழ்ந்த தாய்மாரைத் தலைகுளிப்பாட்டிய பின்னர் சாம்பிராணிப் புகை காட்டினால் தலையில் நீர் கோக்கமாட்டாது. இவ்விடத்தில் சாம்பிராணிப் புகை ஒரு மருத்துவப் பொருளாகிறது. குழந்தைகளுக்கு கண்திருஷ்டி ஏற்படாதிருக்க சாம்பிராணித் தூபத்தினால் குழந்தையைச் சுற்றிக் காட்டி அதனை வீட்டு வாயிலில் கொட்டுவார்கள். அதேபோன்று செவ்வாய் வெள்ளி தினங்களில் வீட்டைச் சுற்றிச் சாம்பிராணித் தூபம் காட்டி வெளியில் கொட்டுவதனால், அதனைப் போவோர் வருவோர் கண்களால் பார்ப்பதனால் ஏற்பட்ட கண்திருஷ்டி அகன்று விடும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

நெருப்புத் தணலில் சாம்பிராணி, தசாங்கம் முதலியவற்றை இட்டு தூபதீபம் காட்டுவதனால் கிடைக்கும் பலனை ஊதுபத்தியை ஏற்றி வைப்பதனாலும் பெறலாம். ஊதுபத்தியை எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தூபம், ஊதுபத்தி ஆகியவை தம்மை அளித்து மற்றவர்களுக்கு நறுமணத்தைத் தருகின்றன. தியாக சிந்தனையுடையவர்களாக நாம் வாழவேண்டும் என்பதனை இது எடுத்துக்காட்டுகிறது.

ஆலயங்களிலும் பூசை வழிபாட்டின் போதும் கிரியைகள் ஆரம்பிப்பதற்கு முன்பும் முதலில் காட்டப்படுவது தூபதீப ஆராதனையாகும். இதனால் நறுமணப் புகை எங்கும் பரவுகிறது. இந்தப் புகை மண்டலத்தில் தீபாராதனை நிகழுமிடத்து பக்தர்கள் ஆன்மீக நிலைக்கு உட்படுவர். இதனால் பக்தர்களது உள்ளங்களில் புத்துணர்வு ஏற்படும். ஆலயங்களில் அனைவரும் ஒன்றாகக் குழுமும்பொழுது ஒருவர் விடும் சுவாசக்காற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் சுவாசிக்க நேரிடும். அதனால் நோய்த்தொற்று ஏற்படலாம். சாம்பிராணிப்புகை தொற்று ஏற்படாமல் தடுக்கிறது. மங்கலப் பொருட்களில் தூபதீபம் காட்டுதல் ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய வழிபாட்டில் முக்கிய பங்களிப்பினை நல்கிறதெனலாம்.'

✦✦✦

## 03. குத்துவிளக்கு



குத்துவிளக்கின் அடிப்பாகம் படைத்தல் தொழிலை ஆற்றுபவரான பிரமாவையும் (பிரமாவின் சக்தி சரஸ்வதி) தண்டுப்பகுதி காத்தல் தொழிலைப் புரிபவரான மகாவிஷ்ணுவையும் (விஷ்ணுவின் சக்தி மகாலட்சுமி) தீச்சுடர் அழித்தல் தொழிலைப் புரிபவரான உருத்திரனையும் (சக்தி - உமை) தகழியின் மேலேயுள்ள தண்டுப்பகுதி மறைத்தல் தொழிலை ஆற்றுபவரான மகேசுவரனையும் (சக்தி - மகேசுவரி) நுனிப்பாகம் அருளல் தொழிலைப் புரிபவரான சதாசிவனையும் (சக்தி - மனோன்மணி) குறிக்கும். குத்துவிளக்கேற்றி எக்காரியமும் ஆற்றுமிடத்து ஐவகைச் சக்திகளும் எம்மில் இணைந்து செய்யுங்காரியம் சிறக்க திருவருள் கூடுகின்றது. (எண்ணெய், நாதம், திரி - விந்து, சுடர் - திருமகள், பிழம்பு - கலைமகள், தீ - சக்தி) ஆகும்.

மாலைப்பொழுதானதும் வீட்டில் உள்ள பெண் குத்து விளக்கேற்றி இறைவழிபாடு செய்வாள். வீட்டில் உள்ளோர் யாவரும் பலநாட்கள் வெளியே பயணம் செல்ல வேண்டியிருந்தால் வீட்டிலே விளக்கேற்றுவதற்குச் சுற்றத்தவர் அயலார் ஆகிய யாரேனும் ஒருவரை ஒழுங்கு செய்ய வேண்டும்.

எல்லாச் சுபகாரியங்களுக்கும் முதலில் வைக்கப்படும் மங்கலப் பொருள் குத்துவிளக்காகும். நிறைகுடத்திற்கு இரு மருங்கிலும் இரு குத்துவிளக்குகளை வைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கிரியைகள் சடங்குகள் ஆரம்பமாவதற்கு முன்னரும் முதலில் இடம்பெறும் வழிபாடு குத்துவிளக்கிற்கு உரியதாகும். குத்துவிளக்கிற்கு சந்தனம் பூசி குங்குமப் பொட்டிட்டு அதன் நுனியில் பூ சாத்துதல் வேண்டும். பின்பு தகழியில் எண்ணெய் அல்லது நெய் விட்டு இரண்டு திரியினை இட்டு ஒரு திரியினைத் தீபமாக ஏற்றுதல் வேண்டும். வேண்டுமானால் எல்லாத் திரி களையும் ஏற்றலாம். குத்துவிளக்கிற்கு பூசை ஆராதனைகள் இடம்பெற்றதன் பிற்பாடுதான் உரிய சுபகாரியம் நிகழ்த்தப் படும். சுபகாரியமோ வைபவமோ இடம்பெறுமிடத்து முதலில் இடம்பெறுவது 'மங்கல விளக்கேற்றல்' ஆகும். இருளை அகற்றி ஒளியைத் தருவது விளக்கு. இருள் அறியாமையைக் குறிப்பது. எம்முடைய உள்ளத்தில் படிந்திருக்கும் அஞ்ஞானம் என்ற அறியாமை இருளை அகற்றி ஞானதீபத்தை ஏற்றுவதுதான் குத்துவிளக்கு ஏற்றுவதன் தத்துவமாகும்.

பௌர்ணமித் தினத்தில் சுமங்கலிப் பெண்கள் திருவிளக்குப் பூசை செய்யும் வழக்கமுண்டு. இத்தினம் அம்பாளுக்குரிய விசேட தினமாகும். சுடர்களில் அம்பாள் சந்திரனுக்குரியவர். இதனால் அம்பாள் தண்மை ஒளியினைக் கொண்டவள்.

குத்துவிளக்கு உலோகத்தினால் ஆனது. எவர்சில்வர் விளக்கில் தீபம் ஏற்றக்கூடாது. எவர்சில்வர் இரும்பினால் ஆனது. இரும்பில் தீபம் ஏற்றினால் வீட்டில் தரித்திரம் ஏற்படும். வெள்ளி அல்லது பித்தளை விளக்குகளே தீபம் ஏற்றுவதற்கு உகந்தன. உலோகங்களின் விடேசத்துவம் யாதெனில் நாம் பாராயணம் செய்யும் மந்திரங்களை, வேண்டுதல்களை அவை உள்வாங்கும். இதனால் எமக்குக் கிடைக்கும் பூஜா பலனும் அதிகம். குத்துவிளக்கின் ஐந்து தீபங்களை ஏற்றி வழிபடுதல் மரபாகும். இது எமக்கு ஐவகை சத்திகளையும் அளிப்பதுடன் பஞ்ச பூதங்களின்றும் ஏற்படும் துன்பங்களையும் அகற்றுகிறது. குத்து விளக்கினைச் சுத்தமாகத் தேய்த்து மஞ்சள் நீரினால் கழுவித் துடைத்து, ஒரு தட்டில் வைத்தல் வேண்டும். பின்பு சந்தனம்பூசி, குங்குமப் பொட்டிட்டு நெய் ஊற்றி நுனியில் பூ சாத்தி அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபாகத்திலும் பூவைச் சாத்துதல் வேண்டும். பின்பு தியானம் செய்து அம்பாளை ஆவாஹனம் (குத்துவிளக்கில் அம்பாளை எழுந்தருளச் செய்தல்) செய்து அம்பாளின் மந்திரங்களைச் சொல்லி குங்குமம், மலர்கள் ஆகியவற்றால் அர்ச்சித்தல் வேண்டும். வெற்றிலை, சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியமாக நிவேதித்தல் வேண்டும். நைவேத்தியம் குத்துவிளக்கிற்கு சமர்ப்பித்தவுடன் மணிநாதத்துடன் 'நைவேத்தியம் சமர்ப்பயாமி' எனப் பூவும் நீரும் கொண்டு தெளித்தல் வேண்டும். திருவிளக்குப்பூசை செய்வதனால் மாங்கல்ய பலன், புத்திரபாக்கியம், குடும்பத்தில் அமைதி, லட்சுமி கடாட்சம் போன்ற அருட் செல்வங்கள் கிடைக்கும்.

நெய் ஊற்றி தீபம் ஏற்றினால் சுகமும் சந்தோஷமும் இல்லத்தில் நிறைந்திருக்கும். நல்லெண்ணெய் எனப்படும் எள்ளெண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றிவந்தால் குடும்பத்தை ஆட்டிப்படைக்கும் எல்லாப் பீடைகளும் தொலைந்து போகும். விளக்கெண்ணெய் ஊற்றித் தீபம் ஏற்றுபவர்களுக்கு புகழ் அபிவிருத்தியாகும். கடலை எண்ணெய்யினால் தீபம் ஏற்றினால் கடன்கள் அதிகமாகும். இலுப்பெண்ணெய்யில் தீபம் ஏற்றினால் வீட்டில் செல்வம் பெருகும்.

இல்லங்களில் கிழக்குத் திசையில் குத்துவிளக்கின் தீபம் ஏற்றி வந்தால் துன்பம் அகலும், கிரகங்களின் சோதனை விலகும். மேற்குத் திசையில் தீபம் ஏற்றி வழிபாடு ஆற்றினால் கடன்தொல்லை, சனிபீடை கிரகதோஷம், பங்காளி பகை ஆகியவை நீங்கும். வடக்குதிசையில் தீபம் ஏற்றிட திருமணத்தடை, கல்வித்தடை ஆகியவை நீங்கி, சர்வமங்களம் உண்டாகும். தெற்குத் திசையினை நோக்கி தீபம் ஏற்றுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். அது யமனுக்குரிய திசையாகும்.

இல்லங்களில் ஏற்றும் தீபத்தை அடிக்கடி இடமாற்றம் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். இதனால் மகாலட்சுமி சஞ்சலமான நிலையினைப் பெறுவாள். வீட்டிலுள்ளவர்களின் செல்வங்களை ஏற்றத்தாழ்வுக்கு இடமாக்குவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் சுபகாரியங்கள் இடம்பெற்று முடிந்தவுடன் சுமங்கலிப் பெண் குத்துவிளக்கினை எடுத்து சுவாமி அறையினுள் வைப்பாள். அன்றையதினம் தொடர்ந்து அந்த குத்துவிளக்கின் தீபம் அணையாது இருத்தல் வேண்டும். திருமண வைபவத்தின் பிற்பாடு மணமகள் தனது புகுந்த வீட்டிற்கு வந்தவுடன் நேராகச் சுவாமி அறைக்குச் சென்று குத்தவிளக்கேற்றுவது மரபாகும். பெண் என்பவள் குத்துவிளக்கில் ஏற்றப்படும் தீபத்தின் ஒளிக்கு இணையானவள். மங்கலகாரியங்கள் யாவற்றிலும் முதலில் கொண்டு செல்லப்படம் மங்கலப் பொருள் குத்துவிளக்காகும். பெண்களுக்குத் திருமணச்சீர் வழங்குமிடத்து குத்துவிளக்கினை முக்கியமாக வழங்குவர்.

குத்துவிளக்கின் தீபச் சுடர் - திருமகள். பெண் என்பவள் லட்சுமி கடாட்சம் உள்ளவளாகவும், தீபத்தின் பிழம்பு கலைமகள் - அறிவால் எக்காரியத்தையும் ஆற்றுபவளாகவும், தீ - சக்தி குடும்பத்தை வளமாக நடாத்தும் ஆற்றல் கொண்டவளாகவும் திகழவேண்டும் என்பதை இது குறிக்கும்.

குத்துவிளக்கின் தீபத்தினை கைகளினாலோ அன்றி வாயினால் ஊதியோ அணைப்பதைத் தவிர்த்தல் வேண்டும். தீபம் ஒளியினைப் பரப்பியமையால் அதற்கு கற்பூர ஆரத்தி அல்லது ஊதுபத்தியைக் காட்டி பூவினால் அணைத்தல் வேண்டும். எண்ணெய் இல்லாமல் தீபம் கூடுபற்றி எரியாது பார்த்தல் அவசியமாகும்.

ஆலயங்களில் விடேசதினங்களில் வரிசையாகக் குத்து விளக்கேற்றி அலங்கரிப்பர்.

இறை சந்நிதானத்தில், தன்னையே எரித்துக் கொண்டு ஒளிபரப்பும் எண்ணெய் விளக்கானது ஆயுள் உள்ளவரை ஆண்டவனுக்கு சேவை செய்யும் அருங்குணம் தேவை என்பதனை எமக்கு உணர்த்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளக்குப் பூசைக்குரிய பாடல்

'செல்வத் திருமகளே! சீராள தேவியே!
செல்வக் கனியமுதே! சிங்கார வல்லியே!
செல்வத் தருவே! சிற்பரத் தாளே!
செல்வத் திருமணியே! செந்தா மரையே!
செல்வத் திருமாங் கல்யம் தந்தருளும்
சீர்பெற் றவளே! பதினாறு செல்வத்தின்
அதிபதி யேபாக்ய லட்சுமித் தாயே!'
சரணம் சரணம் சரணம்!

✦✦✦

## 04. தீபம்



இறைவனைச் சோதிவடிவில் வழிபடுதற்குரிய சாதனம் தீபவழி பாடாகும். ஆலயங்களில் பூசை ஆராதனைகளின் பொழுதும், இல்லங்களில் இடம்பெறும் கிரியை களின் பொழுதும் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்வது மரபாகும். இது **ஒளியூட்டுதல்** எனப் பொருள்படும்.

கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் பௌர்ணமி தினத்தில் திருக்கார்த்திகை விளக்கீடு இந்துக்களின் இல்லங்களில் கோலாகலமாகக் கொண்டாடப்படும். சுமங்கலிப் பெண்கள் புத்தாடை அணிந்து தீபங்களை நீர்நிலைகளில் விடுவர். இதனைக் கார்த்திகைத் தீபம் என அழைப்பர். இத்தினத்தன்று நெற்பொரியினை சர்க்கரைப் பாகில் இட்டு நைவேத்தியம் செய்து வழிபாடு செய்வர். 'சூரியன், சந்திரன், அக்கினி இவற்றில் உள்ள சோதியாகவும் என்றுமுடைய சோதிகளுக்கெல்லாம் சோதி நானே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் அருளிச் செய்துள்ளார். ஆலயங்களிலும் வீட்டிலும் நடைபெறும் கிரியை சடங்குகளில் தீபத்தைக் காட்டுமிடத்து 'தீபம் சமர்ப்பயாமி' எனக் கூறி மணி நாதத்துடன் தீபம் காட்டுதல் வேண்டும்.

சிவராத்திரி தினத்தில் பிரமா விஷ்ணுவிற்குத் தமது சோதி வடிவினை இறைவன் காட்டிய பொழுது அதன் அடியையும், முடியையும் அவர்களால் காணமுடியவில்லை. இறைவனிடம் மீண்டும் சோதி வடிவினைத் தமக்குக் காட்டியருள் வேண்டுமென அவர்கள் வேண்டினர். அதற்கு இறைவன் 'திருக்கார்த்திகை நாளில் மீண்டும் சோதி வடிவினைக் காட்டுவோம்' என்றார். இறைவன் திருக்கார்த்திகை பௌர்ணமி தினத்தன்று திருவண்ணாமலை மீது சோதி வடிவினை பிரமா விஷ்ணுவிற்குக் காட்டி அருளினார். அச்சோதிவடிவினைக் குறிப்பதாகவே இந்நாளில் எங்கும் திருவண்ணாமலைத் தீபத் திருவிழாவாக தீபமேற்றப்படுகிறது. பஞ்ச பூதங்களில் அக்கினிக்குரிய (தீ) தலம் திருவண்ணாமலை ஆகும். திருக்கார்த்திகை அன்று திருவண்ணாமலை அருணாசல மலையின் உச்சியிலே பெருந்தீபம் ஏற்றப்படுகிறது. தூர இடங்களிலுள்ள பக்தர்கள், அடியார்கள் இறைவனின் சோதிவடிவத்தினைத் தரிசிப்பதற்காகவே மலையின் மேல் இத்தீபம் ஏற்றப்படுகிறது. இதனைக் 'குன்றின் மேலிட்ட தீபம்' என்றும், 'மலை விளக்கு' எனவும் அழைப்பர்.

சமணகாப்பியமான சீவகசிந்தாமணியிலும் '.....குன்றிற் கார்த்திகை விளக்கிட்டினை.....' என்று விளக்கீடு பற்றிய வர்ணனை வருகிறது. பௌத்தர்கள் வைகாசி விசாகமாகிய 'வெசாக்', நாளில் தீபோற்சவம் கொண்டாடுகிறார்கள். இந்து சமயத்தவர் தமது கிரகதோஷம் நீங்க எள்ளெண்ணெய்த் தீபம் ஏற்றுதல் போன்று பௌத்தர்கள் விகாரையில் எண்ணெய்த் தீபம் ஏற்றுவர்.

திருமணம் ஆகாத பெண்கள் தமக்கு திருமணம் நடக்க வேண்டும் என்பதற்காகத் துர்க்கை அம்பாளுக்கு எலுமிச்சம் பழத்தின் பாதியை வெளிப்பக்கமாகத் திருப்பி அதில் நெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றி தீபம் ஏற்றி வழிபாடு செய்வது வழக்கம். தொடர்ச்சியாக ஐந்துவாரம் செவ்வாய்க்கிழமைகளில் இவ்வழிபாட்டினைச் செய்வர். பௌத்தர்களிடமும் இவ்வழக்கம் உளது.

திருக்கார்த்திகைத் தினத்தில் ஆலயங்கள் தோறும் சொக்கப்பானை கொளுத்தப்படும். 'சுட்கப் பனை' என்னும் சொற்றொடர்தான் திரிந்து சொக்கப்பானை என வழங்குகிறது. சுட்கம் என்பதன் பொருள் வரட்சி ஆகும். உலர்ந்த தென்னை, பனை, கமுகு, வாழை இவற்றின் தண்டினைத் தீப தண்டமாக ஆலய சந்நிதானத்தில் முற்பக்கத்தில் நடுவார்கள். பின்பு உலர்ந்த தென்னோலையினால் விமானம் போல உயரமாக மூடிக்கட்டிய சொக்கப்பானையில் அக்கினி மூட்டுவர். அது சுவாலித்து எரியும்போது சோதி சொரூபமாகவும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவித்துப் பக்தர் வழிபடுவர். சொக்கப்பானையில் நடுவே வாழைக் குற்றியொன்றை நாட்டி அதிலும் தீபம் ஒன்றை வைத்து எரிப்பர். முருகன் ஆலயங்களில் திருக்கார்த்திகை அன்று மாவிளக்குப் பூசை செய்து முருகனை வழிபடுவர். செந்தினை மாவுடன் (கிடைக்காவிட்டால் அரிசி மாவில்) தேனையும் நன்கு கனிந்த வாழைப்பழத்தையும் சர்க்கரையையும் சேர்த்துப் பிசைந்து அம்மாவில் ஒன்று, மூன்று, ஐந்து என ஒற்றைப்பட அகல்விளக்குச் செய்து நெய் விட்டுத் தீபமாக ஏற்றுவர். இதுவே **மாவிளக்கு** எனப்படும்.

இறைவன் திரிபுரத்தையும் சங்காரம் செய்ததினம் திருக்கார்த்திகை ஆகும். இறைவனின் புன்னகையே அக்கினி வடிவமாகத் தோன்றித் திரிபுரங்களை எரித்த பாவனையைக் காட்டவே தீப உற்சவம் நடத்தப்படுகிறது. வாழை மரத்தை தீபதம்பத்தின் பொருட்டு 9 முதல் 25 முழம் உயரமுள்ளதாக எடுத்துப் பூமியினுள் எட்டிலொரு பங்கு புதைத்து அதைச்சுற்றி தென்னை ஓலை, கமுகு ஓலை ஆகியவற்றினால் கூடுகட்டித் தெற்கு அல்லது கிழக்குப் பக்கமாக வாசல் விட்டு அதில் தீபம் வைத்துக் கொளுத்த வேண்டும். இம்முறைப்படிதான் இலங்கை ஆலயங்களில் சொக்கப்பானை எரிக்கப்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லங்களில் வண்ணக் கோலங்களையும் மாக்கோலங்களையும் போட்டு, அவற்றின் மீது தீபங்களை வரிசையாக ஏற்றி வைப்பர். தடியில் சிறு சிறு பந்தங்களைக் கட்டி தேங்காயெண்ணெய்யில் தோய்த்து வயல், தோட்டம், வீட்டு வெளிப்புறம் ஆகிய இடங்களில் நாட்டி எரிய விடுவர். வீட்டின் முற்றத்தில் வாழைத் தண்டினை நாட்டி அதன் மேல் முக்கண்ணுள்ள தேங்காய்ப் பாதியை வைத்து, அதனுள் திரியினை இட்டு எண்ணெய் விட்டு நீண்ட நேரம் எரியச் செய்வர். சுமங்கலிப் பெண்கள் இத்தினத்தில் புத்தாடை அணிவது வழக்கமாகும். பெண்கள் யாபேருக்கும் இது ஒரு பண்டிகைத் திருநாளாகும்.

ஐப்பசி மாதத்தில் கிருஷ்ணபட்சத்து சதுர்த்தசி தினத்தில் வரிசையாகத் தீபங்களை ஏற்றிக் கொண்டாடும் வைபவம் தீபாவளி எனப்படும். நரகாசுரன் என்ற அசுரன், தான் தான் இறைவனைவிடப் பெரியவன் என்ற அகம்பாவத்தினால் எல்லோருக்கும் துன்பங்களை அளித்தான். ஆலயங்கள் யாவும் பூசை விழாக்கள் எதுவும் நடைபெறாமல் இருளில் மூழ்கிக் கிடந்தன். மக்களின் குறையினைத் தீர்க்க கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனைச் சங்காரம் செய்தார். இறக்கும் நேரத்தில் நரகாசுரன் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம், 'என்னைச் சங்காரம் செய்த இத்தினத்திலே உன்னை வழிபடுவோருக்கு அருள் புரிதல் வேண்டும். எனக்கு நான் என்ற அகம்பாவம் நீங்கி ஞானஒளி கிடைத்தமையால் உலகத்தோர் யாபேரும் தீபங்களை ஏற்றி மகிழ்வுடன் கொண்டாட வேண்டுமென வேண்டினான். இத்தினமே தீபாவளி ஆகும். தீபங்களை ஏற்றுவதன் மூலம் ஞானமாகிய ஒளியை அடைவதுதான் தீபாவளியின் தத்துவமாகும். தீபாவளித் தினத்தில் காலையில் வீட்டுக்கு வெளியே தீபங்களை ஏற்றிவைத்தால் யமன் திருப்தி அடைவான் எனவும் தீபங்களை ஏற்றி வைப்பதனால் ஒளிபடும் இடங்களில் மகாலட்சுமி வாசம் செய்வாளெனவும் விஷ்ணு புராணம் கூறுகிறது.

இல்லங்களில் நவராத்திரி விழாவின் பொழுது கொலு அமைத்து பூசை வழிபாடு செய்வர். தீபங்களின் வரிசையில் கொலுமண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகச் சூழலை ஏற்படுத்தும், மங்களகரமாகவும் திகழும். இக்காலங்களில் இயல், இசை நடனம் கலந்த கலை விழாக்கள் இடம்பெறும். அப்பொழுது மேடைகளை அலங்கரிப்பது தீபங்களாகும். முதல் நிகழ்வாக தீபநடனத்தையே அநேகமாக மேடையேற்றும் வழக்கம் உளது. இதனைப் பூசை நடனம் எனவும் அழைப்பர்.

ஆலயங்களில் ஒவ்வொரு வாயிலிலும் சட்டவிளக்குகள் பூசை ஆராதனைகள் இடம்பெறும் பொழுது ஏற்றப்படும். இத்தீபம் ஏற்றும் தொண்டினையே கணம்புல்ல நாயனார், நமிநந்தியடிகள் ஆற்றினாரெனப் பெரியபுராணம் கூறுகின்றது.

பூசை இடம்பெறுமிடத்து முதலில் பல சுடருள்ள அடுக்குத் தீபத்தைக் காட்டுவார்கள். இறைவன் 96 தத்துவ வடிவமாய் உள்ளார் என்பதனை இது குறிக்கும். ஐந்து சுடருள்ள தீபம் காட்டப்படுவதன் தத்துவம் இறைவன் ஐம்பூதங்களிலும் நிறைந்துள்ளார் என்பதனையும், மூன்று சுடருள்ள தீபத்தினைக் காட்டுவதன் மூலம் இறைவன் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சுடர் ஒளியாகவும் பிரகாசிக்கின்றார் என்பதனையும், ஒற்றைத்தீபம் காட்டுவதன் மூலம் பல நாமங்களில், பலபல வடிவங்களில் பக்தர்கள் தாம்தாம் விரும்பியவாறு வழிபாடு செய்தாலும் இறைவன் ஒருவன்தான் என்பதனையும் எடுத்துக் காட்டுவதாகும். ஆலயங்களில் தீபாராதனை காட்டப்படும்பொழுது அங்கு ஒளி பிரவாகமாகி இறை உருவம் எம்முள் பதிந்து அருட்பிரவாகத்துடன் பக்தியுணர்வு ஏற்படுகின்றது. வாழ்க்கையில் நல்ல செயல்களை ஆற்றுவதன் மூலம் ஏனையோருக்கும் ஒளியினைக் கொடுப்பவர்களாக நாமும் வாழுதல் வேண்டும் என்பதனை இது உணர்த்துகின்றது.

பிதிரர்களின் திதியன்று சிவாலயங்களுக்குச் சென்று சிவனுக்கு அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்வதுடன் **மோட்ச தீபம்** ஏற்றுதல் வேண்டும். மோட்ச தீபம் என்பது நெய்யினால் தீபம் ஏற்றுவதாகும். இதனால் பிதிரர்கள் மனமகிழ்ந்து எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வதிப்பர். பிதிரர் தோஷம் எம்மை வந்து சேரமாட்டாது. இதனை இந்துசமயிகள் ஒவ்வொருவரும் தமது கடமையெனக் கருதி ஆற்றுதல் பரம்பரையினருக்குப் புண்ணியமாகும்.

திருச்சிற்றம்பலம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டால்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் தானே

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் - திருமறைக்காடு - அப்பர்.

✦✦✦

## 05. மணி



'ஓசை யொலியெலா மானாய் நீயே' என அப்பர் பாடுகின்றார். எல்லா ஒலிகளுக்கும் மந்திரங்களுக்கும் பிறப்பிடமானது பிரணவநாதம். இது தீமைகளைப் போக்கி மங்களத்தைத் தருகின்ற நல்லோசையாகும். இதனுடைய ஓரம்சமும் தூலமான அடையாளமுமே மணி ஆகும். மணியோசையினால் தீமைகள் அகன்று மங்களமுண்டாகும்.

ஆலயங்களில் வீடுகளில் இடம் பெறும் கிரியைகள், ஆராதனைகள் என்பவற்றை எடுத்துக் காட்டுவது மணியின் ஒலியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் பஞ்சபூதங்களிலும் நிறைந்தவர். பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய ஆகாயத்தில் இருந்து நிகழ்வது சப்தம் ஒன்றேயாகும். உலோகங்களைத் தீயினால் உருக்கி வார்க்கப் பெறுவதனால் பெறப்படும் கருவிகள் மணி, சேமக்கலம், தாளம் ஆகும். இவற்றின் மூலம் பிறப்பது நாதம் ஆகும். இறைவன் நாதவடிவானவன். எனவே மணி நாதப்பிரம்மமாகிய பிரணவத்தைக் குறிப்பதாகும். இறைவனின் திருமேனி வடிவங்களில் அருவத்திருமேனி சிவம், சக்தி, நாதம் விந்து ஆகும்.

ஆலயக்கோபுர வாயிலின் பக்கத்தில் மணிக்கூட்டு கோபுரம் அமைக்கப்பட்டிருக்கும். இங்கே இருக்கும் மணி கண்டாமணி எனப்படும். தேவர்களைப் பூசை ஆராதனைகளுக்கு கூவி அழைப்பதற்கும், அரக்கர்களை விரட்டுவதற்கும், பூசைக்கு ஆயத்தம் என்பதனைக் குறிக்கவும் கண்டாமணி அடிக்கப்படும்.

பூசை ஆராதனைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பூவினால் மணியினை வழிபாடு செய்து, அதனை வணங்கி அதன் பிற்பாடுதான் மணியினை அடிப்பர். அதேபோன்று பூசை வழிபாடு முடிந்தவுடனும் மணியினை வணங்குவர். மணியின் நாதம் உலகின் தோற்றம் ஒடுக்கம் ஆகியவற்றைக் குறிப்பது. பிரணவமான ஓம் எனும் மந்திரம் அ, உ, ம், என்ற மூன்று எழுத்துக்களைக் கொண்டது. 'அ' என்பதில் ஓசை தோற்றத்திற்கு வருகிறது. 'உ' எனுமிடத்து அந்த ஓசை நிலை பெற்றிருக்கிறது. 'ம்' எனச் சொல்லுமிடத்து அது ஒடுங்குகிறது. ஓசையின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகிய மூன்றும் சேர்ந்தது ஓம் எனும் பிரணவமாகும்.இந்தப் பிரணவப் பொருளாய் அமைந்தவரே பிள்ளையார். எந்த ஆலயமானாலும் பிள்ளையார் பூசையுடன்தான் பூசை ஆராதனைகள் ஆரம்பமாகும். 'உ' என்ற அடையாளம் குறிப்பது பிள்ளையாரைத்தான். இதில் (0) வட்டம் விந்துவையும், சிவசக்தியையும், கோடு (-) நாதம் சிவத்தையும் குறிக்கின்றன. எனவே 'உ' என்ற அடையாளம் சிவம் சக்தி இரண்டையும் அடக்கியுள்ளது. இதனை 'மூலமனு' என்றும் ' பிள்ளையார் சுழி' என்றும் வழங்குவர். இது, 'மோனமே குறியாக முதலெழுத்தருளிய' என்று கந்தபுராணத்தில் சிறப்பிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லங்களில் சுபகாரியங்களுக்குப் பயன் படுத்துவதற்கு கைமணி ஒன்றினை வைத்திருத்தல் வேண்டும். சுவாமி படங்களுக்குப் பூசை ஆராதனைகள் செய்யுமிடத்து நாதத்துடன் செய்தல் வேண்டும். ஆலயங்களில் ஆராதனைகள் இடம்பெறுமிடத்து கைமணி, கொத்துமணி, கண்டாமணி யாவும் ஒருங்கே ஒலிக்கப் படும். இந்த ஓசையானது எல்லோரது உள்ளங்களிலும் இறையுணர் வினை ஏற்படுத்தி பக்திப் பிரவாகத்தினை ஊட்டுகிறது. உற்சவ காலங்களில் மூர்த்திகள் திருவீதியுலா வருவதற்கு முன்பும் எல்லா மணிகளும் ஏகோபித்து அடிக்கப் பெறும். அதே போன்று சுவாமி திருவீதியுலா முடிந்து கோயிலுக்குள் நுழையுமிடத்தும் முக்கியமான கிரியைகள் நிகழுமிடத்தும் மணி அடிக்கப்படும்.

திருமண வைபவத்தில் திருமாங்கல்யம் அணியப்படும் பொழுது கைமணி பலமாக அடிக்கப்படும். அத்துடன் மேளம் நாதஸ்வரம் ஆகியனவும் உச்சஸ்தாயியில் வாசிக்கப்படும். முக்கியமான கிரியைகள் இடம் பெறுமிடத்து எந்தவிதமான அமங்கல ஓசைகளும் திருமணத் தம்பதிகட்கும் ஏனையோருக்கும் காதில் விழக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு நிகழ்த்தப்படுகிறது.

✦✦✦

## 06. நிறைகுடம்



இந்துக்களின் இல்லங்களில் நிறைகுடம் வைக்காமல் எந்தச் சுப காரியங்களும் நிகழமாட்டாது. கூட்டம், பொது வைபவம், மற்றும் கலை நிகழ்வுகள் இடம் பெறும் வேளைகளிலும் நிறைகுடம் வைக்கப்படும். இதனை வரவேற்பு உபசாரமாகக் கொள்வர். குடம் நிரம்ப நீர் நிரப்பி அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் ஒற்றை எண்ணிக்கையுடைய மாவிலைகளைக் காம்பு குடநீருக்குள் இருக்கும்வண்ணம் பரப்பி, குடுமியுள்ள மஞ்சள் பூசிய தேங்காயை அதன் மேல் வைத்தல் வேண்டும். தேங்காயின் முடியில் பூ வைத்து சந்தனம், குங்குமம் இடல் வேண்டும். குடத்தைச் சுற்றி வஸ்திரம் சுற்ற வேண்டும். இதுவே நிறைகுடம் ஆகும். தலைவாழையிலையில் பச்சையரிசியைப் பரப்பி அதன் மேல் நிறைகுடத்தை வைத்தல் வேண்டும். இங்கு அரிசி பதுமாசனமாகும். குடத்திலுள்ள நீர் உள்ளமாகும். மாவிலை சடையாகும். தேங்காய் தலையாகும். நாம் நீரைப் போன்று உள்ளப்பூரிப்புடன் எல்லோரையும் எமது சுபகாரியங்களுக்கு வரவேற்கின்றோம் என்பதனை இது குறிக்கிறது. நிறைகுடம் தழும்பாது என்பது பழமொழி.

நிறைகுடத்திற்கு இருமருங்கிலும் இரு குத்து விளக்குகள் வைக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டிருக்கும் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் எலுமிச்சம்பழம் வைக்கப்பட்டிருக்கும். இவையாவும் வரவேற்பு உபசாரமாகும்.

நிறைகுடத்திற்கும் ஆலயக் கிரியைகளில் வைக்கப்படும் கும்பத்திற்கும் வேறுபாடுகள் உள. ஆலயத்தில் வைக்கப்படும் கும்பம் கிரியைகள், பூசை ஆராதனைகளுக்கு உட்படுத்தப்படும். இறைவனைத் திருவுருவமாக, சோதியாக வழிபடுவது போல கும்பத்திலும் வழிபடலாம்.

✦✦✦

## 07. விபூதி

சிவபெருமானின் பிரசாதமாக அளிக்கப் படுவது விபூதி ஆகும். 'நீறில்லா நெற்றி பாழ்' என்கிறது எமது சமயம். விபூதி என்பது சகல







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமான உடல் உள வியாதிகளைத் தீர்க்கும் வல்லமையுள்ளது எனப் பொருள்படும். இது எல்லா இல்லங்களிலும் இருக்க வேண்டிய மங்கலப் பொருள். 'மந்திரம் ஆவது நீறு, வேதத்தில் உள்ளது நீறு, பத்தி தருவது நீறு, சத்தியமாவது நீறு, சித்தி தருவது நீறு' என விபூதியை சம்பந்தர் போற்றுகின்றார்.

இந்த உலகமும் எல்லாப் பொருள்களும் நாமும் ஒரு காலத்தில் அழிந்து சாம்பராவோம் என்னும் தத்துவத்தைத் திருநீறு குறிக்கிறது. திருநீற்றினை அணிவதனால் எமது உள்ளும் புறமும் தூய்மை பெறுகின்றது. இறை சிந்தனையைத் தூண்டுகிறது. இதனைத் தரிப்பதனால் எமக்கு ஆன்மீக ஒளி கிடைக்கின்றமையால் ' பசிதம்' எனவும், ஆன்மாக்களை இரட்சிப்பதால் 'இரட்சை' எனவும், பாசங்களை நீக்குவதனால் 'சாரா' எனவும், திருநீறு பல பெயர்களை கொண்டழைக்கப்படுகின்றது.

விஷ்ணு பக்தர்களுக்குரிய சின்னம் நெற்றியில் திருமண்ணினால் நாமம் போடுதல் ஆகும். இறைவனது திருவடியினைத் தலையில் தாங்குகிறேன் என்பதையே நாமம் குறிக்கிறது. எல்லாம் முடிவில் மண்ணாகிவிடும் என்ற உலகின் நிலையாமையைத் திருமண் உணர்த்துகிறது.

பசுவின் (சீவாத்மா) சாணத்தை (மும்மலங்கள்) சுட்டுப் பெறப்படுவது திருநீறு. மும்மலங்கள் ஞானத்தீயினால் நீறாகிறது என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. சாணம் கோமயம் என்று அழைக்கப்பெறும். இது அசுத்தங்களையும் நோய்க்கிருமிகளையும் அகற்றவல்லது. சாணத்திலிருந்து தயாரிக்கப் படும் திருநீறு தலையிலுள்ள நீர்த்தோஷம், தலைவலி, உடம்பிலுள்ள கிருமிகள் முதலியவற்றை அகற்றவல்லது. காலை மாலை நேரங்களிலும் குளித்தவுடனும் பூசை வழிபாடுகளுக்கு முன்னும் சாப்பாட்டிற்கு முன்னும் நெற்றியில் விபூதி தரித்தல் வேண்டும். வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று பூமியில் சிந்தாத வண்ணம் விபூதியை எடுத்து அண்ணாந்து 'சிவ சிவ' என்று சொல்லி நெற்றியில் தரித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் வீதிகளில் விளையாடி விட்டு வீட்டுக்கு வந்ததும் கைகால் சுத்தம் செய்து விபூதி அணிந்துவிட்டுத்தான் உணவருந்தவோ, வேறு எந்த வேலையையும் செய்யவோ வேண்டும் என்ற ஒழுங்கினை மேற்கொண்டால் தொற்றுகின்ற கிருமிகள் அழிந்துபோகும்.

நெற்றியில் விபூதியைப் பூசுவதனால் ஞாபக சக்தி கூடுகிறது. மாணவர்களாயினும் பெரியவர்களாயினும் ஏதாவது காரியம் மறந்து விடும்பொழுது அதனை நினைவுக்குக் கொண்டு வருவதற்குக் கண்களை ஏறெடுத்துப் பார்ப்பதையும், கண் புருவங்களை உயர்த்தி நெற்றியினைச் சுழிப்பதையும், பென்சிலையோ பேனாவையோ அல்லது விரலையோ கொண்டு நெற்றியில் மெதுவாகத்தட்டி ஞாபகப்படுத்திக் கொள்வதையும் நாம் அறிவோம். ஒலி அல்லது ஒளிப்பதிவுக் கருவி அல்லது கமரா போன்ற நவீன கருவிகள் மூலம் முன்னர் பேசியவற்றை அல்லது முன்பு பார்த்து இரசித்தவற்றை மீண்டும் கேட்கவும், காட்சியினைப் பார்த்துக் கொள்ளவும் முடிகின்றது. ஆனால் எவ்விதமான செலவுமின்றி கேட்ட மாத்திரத்தில் பின்னால் தேவைப்படும் பொழுது நினைவுக்குக் கொண்டுவருவதற்கரிய வாய்ப்பினை நெற்றியின் பின் பாகத்தில் இறைவன் இயற்கையாகவே எமக்கு அமைத்துள்ளார். அதனால் முன்னர் எமக்கு ஏற்பட்டவற்றை நினைவுக்கு கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே ஒவ்வொருவரும் ஞாபக சக்தியினை நல்ல முறையில் செயற்படுத்த வேண்டுமாயின் நெற்றியைப் பாதுகாத்தல் முக்கியமானதாகும்.

நெற்றியில் விபூதி பூசிய முனிவர்களும், பெரியவர்களும் ஞாபக சக்தியால் நல்ல சிந்தனையாளர்களாக இருந்தனர். இல்லத்தை வெள்ளை நிறம் அடித்து சுத்தமாக வைத்திருப்பது போன்று அறிவு குடியிருக்கும் நமது நெற்றியையும் வெண்ணீறு அணிந்து புனிதமாக வைத்திருத்தல் வேண்டும்.

உலகில் உள்ள எல்லாப் பொருள்களுமே தீயினால் அழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டதும் சாம்பராக மாறும். அதே போன்று நமது உடம்பு என்றாவது ஒரு நாள் அழிந்து ஒரு பிடி சாம்பராகிவிடும் அல்லது மண்ணோடு மண்ணாகக் கலந்துவிடும். விபூதி எமக்கெல்லாம் உணர்த்தும் தத்துவமானது ஒன்றுமே நிலைத்து இருக்காது என்னபதாகும். நாமும் ஒன்றுமே நிலையில்லாதவை என்பதனை உணர்ந்து ஞானம் பெற்று நல்ல செயல்களையே கடைக் கொள்ளல் வேண்டும்.

எமது சமயச் சின்னமாகப் போற்றப் பெறும் திருநீற்றினைப் பரிசுத்தமாகப் பூசி அதன் மகிமையினைப் போற்றுவோமாக.

## திருநீற்றுப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

✦✦✦

## 08. வாழை



இந்து சமயத்தவரின் சுப காரியங்களோ அல்லது ஆலய விழாக்களோ வாழைமரம் இல்லாமல் நிகழ மாட்டாது. அத்தகையதோர் முக்கியவத்தினை இது பெறுகின்றது.

திருமண வைபவங்களிற் பழுத்த வாழைக் குலையினை வாயிலில் கட்டுவார்கள். திருமண வாழ்க்கை என்பது வாழ்க்கையில் ஒரு முறைதான் நிகழ வேண்டும் என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டுவதற்காகவே இது கட்டப்படுகிறது. வாழை குலை போட்டதும் மரத்தை அழித்து விடுகின்றோம். ஆனால் ஒரு சிறிய கிழங்கின் மூலம் புதிய வாழைக்கன்று மீண்டும் தழைக்கத் தொடங்கும். அதேபோன்ற திருமணமும் வாழ்விலே ஒரு முறைதான். அத்துடன் கிழங்கினின்றும் புதிய கன்றுகள் தோன்றுவது போல் எமது பரம்பரையும் தழைத்துக் கொண்டிருக்கும். இங்கே 'வாழைக் குலை' என்பதில் இந்துசமயியின் முக்கிய சடங்கான திருமணத்தின் தத்துவம் அடக்கப்பட்டுள்ளது.

வீட்டின் வாசலில் வாழைமரம் கட்டியிருந்தால் அங்கு சுபகாரியம் நிகழுகின்றது என்பதை வெளித்தோற்றத்திலேயே கண்டு கொள்ளலாம். ஆலய உற்சவங்களில் சுவாமி ஊர்வலம் இடம்பெறுமிடத்து அநேகமான இல்லங்களின் முன்புறத்தில் வாழைமரத்தை நாட்டி அலங்காரம் செய்வார்கள்.

வாழைமரத்தின் ஒவ்வொரு பகுதியும் கிரியைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. கார்த்திகை விளக்கீட்டின்பொழுது வாழைத்தண்டினை வீட்டின் முன்புறத்தில் நாட்டி அதில் தேங்காய்ப் பாதியை வைத்துத் தீபம் ஏற்றுவர். ஆலய விழாக்களின் பொழுது வாழை மடலை வரிசையாக வைத்து அதன் மீது கற்பூரம் கொளுத்தி ஆராதனை செய்வர்.

நவராத்திரி விழாவின் இறுதிநாளான விஜயதசமி விழாவின் பொழுது பன்னீர்வாழை வெட்டுவிழா ஆலயங்களில் நடாத்தப்படும். அம்பாள் மகுடாசுரன் என்ற அசுரனை சம்காரம் செய்த நாள் 'விஜயதசமி' ஆகும். ஆலய வாயிலில் வாழை மரத்தை நாட்டி அதன் மீது வன்னி இலைகளைச் சொருகி வைப்பர். இதில் வாழைமரம் மகுடாசுரனாகக் கொள்ளப்படுகிறது. சிவாலயங்களில் வாழைமரத்தை நாட்டி வேட்டைத் திருவிழா நடாத்தப்படும்.

வாழையில் இருந்து பெறப்படும் நார் பூமாலை தொடுப்பதற்கு உதவுகிறது. வாழைப்பூ, தண்டு ஆகியவற்றைச் சமையில் செய்து உட்கொள்வதால் சிறுநீரக நோய்கள் தீர்வதாக மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. வாழையிலை



இந்து சமயத்தவரின் வழிபாட்டிற்கும் சுபகாரியங்களுக்கும் வாழையிலை முக்கியமானது. கிரியைக்குரிய பொருட்கள் யாவும் வாழையிலையிலே தான் வைக்கப்படும். நிறைகுடம் வைக்கும் பொழுது தலைவாழை இலையினை வைத்து அதன்மேல் அரிசியைப் பரப்பி நிறைகுடம் வைக்கப்படும்.

விரதகாலங்களிலும் சடங்குகளின்போதும், மற்றும் ஆலயங்களில் இடம்பெறும் அன்னதானம் போன்ற நிகழ்வுகளிலும் உணவினை வாழையிலையிலேதான் பரிமாற வேண்டும். புதுமணத் தம்பதிகள் மாதா, பிதா, குரு, மற்றும் பெரியோர் இவர்களுக்கு உணவு பரிமாறவேண்டும். பிதிரர்களுக்குப் பரிமாறும்போதும் தலைவாழையிலையிலேயே பரிமாற வேண்டும்.

வாழையிலையில் உணவு உண்பதால் உடம்பில் உள்ள உஷ்ணம் குறைவடையும், தேக ஆரோக்கியம் ஏற்படும். உணவு சாப்பிட்டு முடிந்ததும் இலையை மடிக்கும் போது உட்புறமாக உணவு அருந்துபவர் தம்மை நோக்கி மடித்தல் வேண்டும். சாப்பிட்டு முடிந்த பின் ஒரு சிலர் வாழையிலையைச் சுருட்டி எடுப்பர். மகாவிஷ்ணு பொருந்திய உணவைச் சாப்பிட்டுவிட்டு இலையைச் சுருட்டக் கூடாது.

உணவு பரிமாறப்படும்பொழுது வாழையிலையில் மூலைப் பகுதியில் உப்பு, ஊறுகாய் போன்றவைகளை வைத்தல் வேண்டும். இவை ருசிக்காகத் தொட்டுச் சாப்பிடும் பதார்த்தங்களாகும்.

ஆலயக்கிரியைகளின் பொழுது நிவேதனம் யாவும் வாழையிலையில் வைக்கப்பட்டு வாழையிலையினால் மூடிவைக்கப் பட வேண்டும். விரத காலங்களில் காகத்திற்கு உணவினை வாழையிலையில் வைத்தல் முக்கியமானது. காகம் சனி பகவானுக்குரிய வாகனம். எச்சில் படுத்தப்பட்ட பாத்திரவகைகளில் வைத்தால் சனிதோஷம் தொடரும். வீட்டுக் கிரியைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும் வாழையிலையிலேதான் சுவாமிபடத்திற்கு நிவேதனம் வைத்தல் வேண்டும்.

முழு வாழை இலையினை அப்படியே வீட்டிற்குள் கொண்டுவரக்கூடாது. இலைகளைத் துண்டாடித்தான் வீட்டிற்குள் கொண்டு வருதல் வேண்டும்.

✦✦✦

## 10. வெற்றிலை



சுபகாரியங்கள் கிரியைகள் யாவற்றிற்கும் உரிய பூசைப் பொருட்களுள் முக்கியமானது வெற்றிலையாகும். (வெற்றி + இலை) வெற்றிலை என்றால் ஜெயம் எனப் பொருள்படும். இறைவனுக்கு அர்ப்பணிக்கப் படும். நிவேதனத்தில் முதலிடம் பெறுவது வெற்றிலைதான். எமக்கு எல்லா வெற்றிகளும் கிடைக்க இறைவன் அருள் பாலித்திட வேண்டும் என்பதற்காகவே, எந்தக் கருமங்கள் ஆற்றுமிடத்தும் வெற்றிலை வைப்பது மரபாகும்.

வில்வம், துளசி, திருநீற்றுப்பச்சை, அறுகு போன்ற இலைகள் யாவும் புனிதத்தன்மை பெற்றிருந்தாலும் அவையாவும் மலர் களைப் போல் பூசை செய்வதற்கு மட்டுந்தான் எடுக்கப்படுகிறது. இலைகளில் நிவேதனமாக இறைவனுக்குப் படைக்கப்படும் மகத்துவம் வெற்றிலைக்கு மட்டுந்தான் உண்டு. இது வெற்றிலை யின் சிறப்பு ஆகும்.

பூசையின் பொழுது பயன்படுத்தப்படும் பஞ்ச பத்திரம் (ஐந்து முக்கிய இலைகளாவன) : துளசி, அறுகு, வேம்பு, வன்னி, வில்வம். இவை சிறந்த மருத்துவக்குணம் வாய்ந்த ஐந்துவகை மூலிகைகளாகும். இவற்றில் முதன்மையானது துளசி. இவ்வைந்தும் தெய்வீகமானவை. இவைகளை அர்ப்பணித்துத் தீர்த்தமிடும் பாத்திரம் 'பஞ்சபத்திர பாத்திரம்'. இது நாளடைவில் பஞ்சபாத்திரம் என திரிபடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை ஒரு புனிதப் பொருளாதலால் அதனை ஏற்றத் தாழ்வின்றி எவரிடமும் வாங்கலாம்.

இறைவனுக்கு நிவேதனமாக வைக்கப்படும். வெற்றிலை அழுகியதாக வாடிப்போனதாக இருத்தல் ஆகாது. எல்லா இலைகளையும் விட இயற்கையாகவே இதன் உருவ அமைப்பு வித்தியாசமானது. வெற்றிலையின் வளைவு வலது பக்கம் அதிகமாக இருப்பின் அது ஆண்வெற்றிலை எனவும், இடது பக்கம் வளைவு அதிகமாயின் பெண்வெற்றிலை எனவும். கொள்வர். இரண்டு பக்கமும் சமவளைவு கொண்ட வெற்றிலையைத்தான் இறைவனுக்கு படைப்பது விசேடமாகும். அதுதான் சிவமும் சக்தியும் இணைந்த வெற்றிலை ஆகும். இறைவனுக்கு அர்ச்சனை செய்யும் பொருட்களில் வெற்றிலை முக்கியமான தொன்றாகும்.

இறைவனுக்கு வெற்றிலை பாக்கு இரண்டையும் கிரியைகள் ஆற்றுமிடத்து 'தாம்பூலம் சமர்ப்பியாமி' என்று சொல்லிச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வெற்றிலையின் பச்சைநிறம் சக்தியைக் குறிப்பது. தாம்பூலமாகத் தரிக்குமிடத்து வெற்றிலை சிவப்பாக மாறுகின்றது. அது சிவம் ஆகும். வெற்றிலையின் பின் பக்கத்திலுள்ள நரம்புகளுக்கு உடலிலுள்ள வெண் அணுக்களைக் குறைத்துவிடும் சக்தியுளது. அதனால் அந்த நரம்பை எடுத்துவிட்டுதான் தாம்பூலம் தரித்தல் வேண்டும். வெற்றிலையின் நுனியிற் பாபமும் காம்பின் வியாதியும், நரம்பில் புத்திக்குறைவும் உள்ளதால் இவற்றை நீக்கி விட்டுத்தான் தாம்பூலம் தரித்தல் வேண்டும்.

சீதாபிராட்டியார் அசோகவனத்தில் இராவணனால் சிறை வைக்கப் பெற்றிருந்தாள். அவளை இராம தூதுவனான அநுமான் கண்டவுடன் இராமனால் அளிக்கப்பட்ட கணையாழியை அவளிடம் கொடுத்தான். அப்பொழுது சீதாபிராட்டியார் தனது திருமாங்கல்ய பலத்தைத் தெரியப்படுத்தியமைக்காகக் களிப்படைந்து, அநுமனுக்கு நன்றிக்கடன் அளிக்கும் முகமாக தன்னைச் சுற்றி சூழ்ந்திருந்த வெற்றிலைச் செடியிலிருந்து வெற்றிலையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொய்து அடுக்கி அவனிடம் அளித்தாள். இதிலிருந்து சுமங்கலிப் பெண்கள் திருமாங்கல்ய பலத்திற்காக ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை அணிவித்து பூசை ஆராதனைகள் செய்யும் வழக்கம் ஏற்பட்டது. தொழில் நிறுவனங்களில் ஆஞ்சநேயர்படம் வைத்து அதற்கு வெற்றிலை மாலை சூடுவர். பிள்ளையார் போன்று ஆஞ்சநேயரும் துன்பங்களைப் போக்க வல்லவர்.

திருமண வைபவம் இடம் பெற்றவுடன் முதன்முதல் தம்பதியினருக்கு வழங்கப்படுவது தாம்பூலம் ஆகும். மணமகள் தாம்பூலத்தை மடித்து மணமகனுக்கும், மணமகன் மணமகளுக்கும் அளிப்பர். வீட்டிற்கு வருபவர்கள் தாம்பூலம் தரிக்காவிட்டாலும் முதலில் அவர்களுக்கு வழங்கப்படுவது வெற்றிலைத் தட்டைத்தான். வெற்றிலைக்கு உணவைச் சமிபாடடையச் செய்யும் தன்மை உண்டு. மங்கல காரியங்களின் பொழுது 'வெற்றிலை பாக்கு வாங்கியாச்சா? தாம்பூலம் தரித்தீர்களா?' என ஒருவரையொருவர் பார்த்துக் கேட்பதில் இருந்து இதன் முக்கியத்துவம் விளங்கும்.

வீட்டிற்கு வரும் சுமங்கலிப்பெண்களுக்கு வெற்றிலையின் மேல் மஞ்சள், குங்குமம், பூ வைத்து வழங்குதல் வழக்கமாகும். ஓமக்கிரியைகள் இடம்பெற்றபின் தர்ப்பையை அக்கினியில் சுட்டு நெய் சேர்த்துக் குழைத்து பெற்ற யாகரட்சையை வெற்றிலையில் வைத்தே பிரசாதமாக வழங்குவர். இது இறைவன் திருவருளின் அடையாளமாகும். இதன் மகத்துவம் தெரியாமையினால் மக்கள் 'கரிப்பொட்டு' என இதனைக் கூறுகிறார்கள். எந்தச் சுபகருமங்கள் நிகழ்த்தப்படுமிடத்தும் முதலில் வெற்றிலை பாக்கு பழம் நிவேதனமாக வைக்கப்பெறும்.

வெற்றிலையைத் தட்டில் வைக்கும் பொழுது காம்புப் பகுதி உட்பக்கமாகவும் நுனிப்பகுதி வெளியே நோக்கியும் இருத்தல் வேண்டும். மற்றவர்கட்கு வெற்றிலையை அளித்து வரவேற்குமிடத்து காம்புப் பகுதி நமது பக்கமும் நுனிப்பகுதி எடுத்துக்கொள்பவர் பக்கமும் இருக்க வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும். தாம்பூலம் தரிக்குமிடத்து வெற்றிலையின் காம்புப்பகுதியும் நுனிப்பகுதியும் தவிர்க்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர்களும் வெற்றிலைக்கு முக்கியத்துவம் கொடுப்பர். பெண்பார்க்கும் படலம் பௌத்தர்களிடமும் உண்டு. பெண்ணிற்கு பையனை மனதிற்குப் பிடித்துவிட்டால் அவனுக்கு வெற்றிலையை அளித்துத் தனது சம்மதத்தை தெரிவிப்பாள். பௌத்தர் வீட்டிற்கும் யார் சென்றாலும் வெற்றிலையை அளித்து வரவேற்பர். விழாக்களில் அதிதிகளுக்கு வெற்றிலை அளித்து வரவேற்கும் வழக்கமும் பௌத்தர்களிடம் உண்டு.

புது வருடப்பிறப்பு அன்று பெரியவர்களிடம் கைவிசேடம் வாங்கும் மரபு உள்ளது. வெற்றிலையில் கைவிசேடமாகப் பணத்தை வைத்து வழங்குவர். எந்தப் பொருள் இல்லாது விட்டாலும் வெற்றிலை இல்லாமல் எந்தச் சுபகருமத்தையோ, கிரியைகளையோ ஆற்ற முடியாதெனலாம் வெற்றிலைக்கு மந்திரங்களை உள்வாங்கும் சக்தியுள்ளது' சிந்தனைகளையும் சக்தி அலைகளையும் கடத்தும் மகிமை கொண்டது.

## ஆஞ்சநேயர்

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாக ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்(டு) அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்.

-கம்பராமாயணம் -

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. பாக்கு



அறுசுவைகளான இனிப்பு, கசப்பு, உறைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு ஆகியவற்றில் உவர்ப்புச் சுவையினை அளிப்பது பாக்கு ஆகும். எமது வாழ்க்கையில் எல்லாச் சுவைகளும் இருக்க வேண்டும் என்பதற்காகவே தாம்பூலம் தரிக்குமிடத்து பாக்கு சேர்க்கப் படுகின்றது. சுவைகளை அளவிற்கு அதிகமாகச் சுகிக்கக் கூடாதென்ற தத்துவத்தினை பாக்கின் உவர்ப்புச் சுவை எடுத்துக் காட்டுகிறது.

ஆலயக் கிரியைகளின் பொழுது கும்பத்திற்கு முன்னால் நிவேதனமாக வைக்கப்படுவது வெற்றிலை, பாக்கு, பழம் ஆகும். இறைவனுக்கு அபிடேகத்தின் போது செய்யப்படும் பூசை ஆராதனைகளில் தாம்பூலம் வழங்குதல் ஒன்றாகும். அர்ச்சனைப் பொருட்களுள் பாக்கும் முக்கிய கிரியைப் பொருளாகிறது.

கமுக மரத்திலிருந்து பாக்கு கிடைக்கிறது. விசேடதினங்களில், ஆலய உற்சவ காலங்களில் கமுகம்பாளை கட்டும் வழக்கமுண்டு. பௌத்தர்கள் தமது விசேட வைபவங்களில் தென்னம் பாளையினை மங்கலப் பொருளாகக் கட்டுவர்.

பாளை யுடைக்கமு கோங்கிப்பன
மாடம் நெருங்கி யெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயற் றில்லை தன்னுள்
ஆள வுடைக்கழற் சிற்றம்
பலத்தரன் ஆடல்கண்டாற்
பீளை யுடைக்கண்க ளாற் பின்னைப்
பேய்த்தொண்டர் காண்பதென்னே.

திருவிருத்தம் - அப்பர்

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. குங்குமம்



குங்குமத்தை அன்னை பராசக்தியின் அருட்பிரசாதமாகப் பெற்று நெற்றியில் அணிந்து கொள்கிறோம்.

குங்குமம் இல்லாது எந்தச் சுபகாரியங் களும் இடம்பெறமாட்டாது. முக்கியமாக கன்னிப் பெண்களும் சுமங்கலிகளும் குங்குமத்தை அணிதல் வேண்டும். இது மங்கலத்தின் சின்னமாகும். இறைவியை நினைந்து குங்குமத்தை நெற்றிப் பொட்டில் அணிவோருக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்.

எல்லா உயிர்களுக்கும் தாயானவள் அன்னை பராசக்தி ஆவாள். உயிர்கள் அனைத்திலும் பரவியிருக்கும் இரத்தம் சிவப்பு நிறம் என்பதனை எமக்கு நினைவூட்டி அனைத்து உயிரையும் உன்னைப் போல் நேசி என்பதனை அன்னையின் சிவந்த குங்குமம் உணர்த்துகிறது.

திருமணமான சுமங்கலிப் பெண்கள் உச்சிவகிட்டிலும் திருமாங்கல்யத்திலும் குங்குமம் இடுதல் வேண்டும். உச்சிவகிட்டில் திருமணமான சுமங்கலிகள் அணிவதன் தத்துவம் பெரியோர்களால் ஆசிர்வாதம் பெறப்பட்டவள் என்பதாகும்.

திருமாங்கல்யதாரணத்திற்கு முன்னர் அதற்கு மஞ்சள், குங்குமம் இட்டு சபையோரிடம் ஆசீர்வாதம் பெறப்பட்டே மணமகன் திருமாங்கல்யத்தை மணமகளுக்குக் அணிவான். திருமாங்கல்யம் அணியப்பட்டதும் மணமகன் மணமகளுக்கு நெற்றியிலும் திருமாங்கல்யத்திலும் குங்குமம் இடுவான். திருமாங்கல்யம் அணியப்பட்டதும் சுமங்கலிப் பெண் சபையில் உள்ள பெண்களுக்கு குங்குமத்தை வழங்குவாள்.

உடம்பின் நாடி நரம்புகள் சந்திக்கும் நெற்றிப் பொட்டில் குங்குமம் அணிவதனால் குங்குமத்தில் உள்ள சக்தி உடம்பில் ஊடுருவி தீய பாதிப்புகள் ஏற்பட்டிருப்பின் அவற்றை நீக்குகிறது. மற்றவர்களின் பார்வைத் தோஷம் நெற்றிப் பொட்டு வழியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பைப் பாதிக்கிறது. நெற்றிப் பொட்டில் குங்குமம் அணிவதனால் கண்திருஷ்டி தோஷம் நீங்குகிறது.

அன்னை பராசக்தியின் குங்குமம் ராசத குணத்தின் நிறமாகும். பெண்கள் சக்தி படைத்தவர்களாக மாறவேண்டுமென்பதை குங்குமத்தின் மூலம் பராசக்தி எடுத்துக்காட்டியுள்ளார். பெண்கள் எதற்கும் அஞ்சாது வீரமுடையவர்களாகத் திகழவேண்டும். அன்னை பராசக்தி வீரம், செல்வம், கல்வி யாவற்றுக்கும் ஊற்றுக் கண்ணாகத் திகழ்பவள். பெண்கள் எல்லாச் சிறப்புகளையும் பெறவேண்டுமென்பதே குங்குமம் அணிவதன் நோக்கமாகும்.

அன்னைக்குப் பூசை இடம் பெறுமிடத்து குங்குமத்தினால் அர்ச்சிக்கப்படும். ஆடிமாதம் அம்பாளின் விசேட மாதமாகும். ஆடிமாத பூர நட்சத்திரத்தில் அம்பாளுக்கு பெருவிழாவெடுத்து குங்குமத்தினால் அர்ச்சனை செய்வர். அம்பாளுக்கு செவ்வாய் - வெள்ளி தினங்களில் குங்குமத்தினால் பூசை வழிபாடு செய்தால் திருமாங்கல்யபலன் கிடைக்கப்பெறும். அம்பாள் ஆலயங்களில் பிரசாதமாக குங்குமம் வழங்கப்படும்.

வீட்டிற்கு சுமங்கலிப் பெண்கள் வரும்போது அவர்களுக்குக் குங்குமம் கொடுத்தல் வழக்கமாகும். பெரியவர்களாயின் அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்று குங்குமத்தை நெற்றியிலும் திருமாங்கல்யத்திலும் இடும்படி செய்தல் வேண்டும். சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம் அளிப்பதனால் மாங்கல்ய பலன் அதிகரிக்கும்.

மஞ்சள் எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்துப் பின்னர் காயவைத்து நன்றாகப் பொடியாக்கி சிறிது சுண்ணாம்புடன் சேர்த்தால் குங்குமமாகும்.

இரண்டு ஊனக் கண்களுக்கு இடையில் புருவமத்தியில் உள்ளபகுதி ஞானக்கண் உள்ள இடம். தியானத்திலும் புருவமத்திதான் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

நெற்றியில் பொட்டு வைக்கும் பொழுதெல்லாம் 'வெறும் ஊனக்கண்களால் உலகைப் பார்க்கிறோம், அறியாமையை நீக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமென்னும் மூன்றாவது கண்ணினால் உலகை, இறைவனைப் பார்க்க வேண்டும்' என்பதனையே பொட்டு வைத்தல் குறிக்கின்றது. இந்துக்கள் பகுத்தறிவுக் கண் உள்ளவர்களாகத் திகழ வேண்டும் என்பதாகும்.

தனம் தரும்' கல்வி தரும்' ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும்' தெய்வவடிவம் தரும் ' நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும்' நல்லன எல்லாம் தரும்' அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

- அபிராமி பட்டர். அபிராமி அந்தாதி.

✦✦✦

## 13. சந்தனம்



இறைவிக்கு குங்குமம் மங்கலப் பொருளாவதுபோல இறைவனுக்குச் சந்தனம் முக்கியமாகிறது. இறைவனின் மணவாளக்கோலத்தை இது குறிக்கும்.

மங்கல காரியம் இடம் பெறுகின்றது என்பதனை ஆண்களின் நெற்றியில் அணியப்பெற்றிருக்கும் சந்தனப் பொட்டு எடுத்து காட்டும். மங்கலகாரியங்கள் இடம்பெறும் இடத்து வாயிலில் நின்று ஆண்களுக்கு சந்தனத்தையும் குங்குமத்தைப் பெண்களுக்கும் அளிப்பது மரபாகும்.

சந்தனம் குளிர்ச்சியும், மணமும் உடையது. இதனை அணிவதனால் உடல் வெப்பம் நீங்கப் பெற்று உள்ளத்திலிருந்து உற்சாகத்தை அளிக்கிறது. புருவமத்தியில் குளிர் சந்தனத்தை அணிவதால் உடலுக்கு நன்மை ஏற்படுகின்றது. எமது சுவாசத்திற்கு நறுமணத்தை அளிக்கிறது. நோயினால் பீடிக்கப்பட்டோர் தொடர்ந்து துன்ப சோதனைகட்கு ஆளாகியிருப்போர் தத்தமது குலதெய்வங்களுக்கு சந்தனக்காப்பு சார்த்துவதாக நேர்த்தி வைத்து அதனை நிறைவேற்றும் வழக்கமுளது. ஆலயங்களில் எல்லா விதமான திரவியங்களிலும் திருவுருவத்திற்கு அபிடேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைச் சாந்தப்படுத்த சந்தனக் காப்புச் சாத்தும் வழக்கமுண்டு. சந்தனத்தினால் அபிடேகம் செய்யப்படுவதனால் கிடைக்கப் பெறுவது சாயுச்சிய முத்திப் பேறாகும். இது யோக நெறியுடையோருக்குரிய முத்தியாகும்.

மார்கழி மாதத்தில், கிருஷ்ணனே தமது கணவனாக வரவேண்டுமென கோபியர் 'காத்யாயனி' விரதம் நோற்பர். மார்கழி மாதம் முப்பது நாட்களிலும் காத்யாயனி விரதம் இருந்து கோபியப் பெண்கள் கிருஷ்ணனைக் கணவனாக அடைந்தார்கள். அவர்கள் அப்பொழுது தரித்த சந்தனம் கோபிசந்தனம் எனப்படும்.

இறைவனுக்குச் செய்யப்படும் உபசாரங்களில் 'கந்தம் சமர்ப்பயாமி' எனப்படுவது அரைத்த சந்தனத்தை திருவுருவின் மார்பிலும் சிரசிலும் சமர்ப்பித்தல் ஆகும்.

திருச்சிற்றம்பலம்

தோலுந் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய் கோத்தும்பி


திருச்சிற்றம்பலம்

திருக்கோத்தும்பி - மாணிக்கவாசகர் -

✦✦✦

## 14. பூ

'சலம் பூவொடு தூபம் மறந் தறியேன்' என்ற தேவார அடியி லிருந்து மங்கலப் பொருள்களில் பூ பிரதானமானது என்பது புலப்படுகிறது. பூசை ஆராதனைகட்கு ஏனைய பொருட்கள் கிடைக்காவிட்டாலும் பூவினால் மட்டும் பூசை வழிபாடு செய்ய லாம். சுபகாரியங்களில் கிரியைகள் செய்யுமிடத்து இறைவனின் அருட்செயல்கள் பொருந்திய நாமங்களை உச்சரித்து பூ வினால் அர்ச்சிப்பர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவுருவங்களுக்கு அபிடேகம் முடிந்தவுடன் வஸ்திரம் சாத்தி முதலில் அணியப்படுவது பூமாலையாகும். பூவினால் தொடுக்கப்பட்ட பலவகையான மாலைகளை இறைவனுக்குச் சாத்துதல் 'சாத்துப்படி' எனப்படும். உற்சவ காலத்தில் சுவாமி திருவீதியுலா வரும்பொழுது பக்தர்கள் இறைவனுக்கு பூவினைச் சொரிந்து வழிபாடு செய்வர். பூவுலகில் சிறப்பான நிகழ்வுகள் இடம்பெறும்போது தேவர்கள் பூமழை பொழிந்தனர் எனப் புராணங்களில் கூறப்படுகின்றது. பாமாலை பாடி இறைவனை மகிழ்விப்பதுபோல் பக்தர்கள் பூமாலை சூடி மனநிறைவினைப் பெறுவர். பெரியாழ்வார் தினமும் திருமாலுக்குப் பூமாலை சூடி, பாமாலை பாடி இறைவனை மகிழ்வித்தார். ஆண்டாள் சூடிய பூமாலையை ஸ்ரீமத் நாராயணன் ஏற்றுக் கொண்டமையால் ஆண்டாளை சூடிக்கொடுத்த நாச்சியாரென வழங்குவர். பூவின் சிறப்பினைப் பின்வரும் தேவார அடிகள் விளக்குகின்றன.

'பூவார்மலர் கொண்டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்....!'
'பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்த பாடி'
'கைப்போது மலர்தூவித் காதலித்து வானோர்கள்'
'ஓதி மாமலர்கள தூவி.'

இறைவன் பூக்களிலெல்லாம் நறுமணமாகவுள்ளான் என்பதனை 'வாசமல ரெலாமானாய் நீயே' என்ற தேவார அடி காட்டுகிறது.

காரியங்கள் நிறைவேற்றுவதற்காக நேர்த்தி வைத்து மக்கள் இறைவனுக்குப் பூமாலை சாத்தி வழிபடும் வழக்கம் உண்டு. நவக்கிரகங்களுக்கு உரிய பூவினால் பூமாலை சாத்தி வழிபடுமிடத்து கிரகதோஷம் நீங்கும். இறைவனின் பிரசாதமாக விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றுடன் பூசையின் பொழுது அர்ச்சிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் வழங்கப் பெறும். ஆண்கள் அதனைக் காதிலும், பெண்கள் தலையிலும் சூடிக்கொள்வர். இறைவனுக்குரிய உபசாரங்களில் மலர் சாத்துதலும் ஒன்றாகும்.

நவராத்திரி காலத்தில் தினமும் விதம்விதமான பூக்களால் அம்பாளை அர்ச்சிக்கவேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. மல்லிகை, முல்லை, சம்பங்கி ஆகியவை முதல் மூன்று நாட்களிலும், ஜாதிமல்லிகை, செம்பருத்தி ஆகியபூக்கள் அடுத்துவரும் மூன்று நாட்களிலும், தாழம்பூ, ரோஜா, தாமரை, இறுதி மூன்று நாட்களிலும் அம்பாளை அர்ச்சிப்பதற்குரிய பூக்களாகும். ஐஸ்வரியம் அளிக்கின்ற மகாலட்சுமி செந்தாமரைப் பூவிலும் கலைமகளான சரஸ்வதி வெண்டாமரையிலும் அமர்ந்திருந்து அருள் பாலிக்கின்றனர். அஷ்டலட்சுமிகளான தனலட்சுமி, விஜயலட்சுமி ஐஸ்வரியலட்சுமி, சந்தானலட்சுமி, ஆதிலட்சுமி, கஜலட்சுமி, வீரலட்சுமி, தானியலட்சுமி, தாமரைப் பூவில் வீற்றிருப்பர்.

சிவராத்திரி தினத்தன்று நான்கு சாமப்பூசைகள் சிவாலங்களில் இடம்பெறும். முதலாம் சாமத்திற்கு தாமரை, இரண்டாம் சாமத்திற்கு சண்பகம், மூன்றாம் சாமத்திற்கு பிச்சி, செங்கழுநீர் நான்காம் சாமத்திற்கு நந்தியாவர்த்தம் ஆகிய பூக்களினால் சிவபெருமானுக்கு அர்ச்சனை இடம்பெறும்.

இறைவன் இயற்கை வளங்களுடன் உறைந்துள்ளான் என்பதனைக் குறிப்பது ஆலய உற்சவத்தின் இறுதிநாளில் இடம்பெறும் பூங்காவனத் திருவிழா ஆகும். அநேகமான ஆலயங்களில் நந்தவனம் அமைந்திருக்கும். அங்கு இறைவனை அலங்காரங்களுடன் எழுந்தருளப்பண்ணி, ஆராதனைகள் இடம்பெற்றதும் கலை நிகழ்ச்சிகளை நடத்துவர். மனிதனுக்குப் பயன்தரக்கூடிய காய்கனிவர்க்கங்களைத் தரும் மரங்களின் பூக்கள் இறைவனின் பூசைக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. கருணைக் கடலான இறைவன் அவற்றை ஏற்பதில்லை. இறைவனுக்கு தீபங்கள், சோட சோபசாரங்கள் காட்டுமிடத்து அவற்றைப் பூவினால் அர்ச்சித்த பின்னரே காட்டுவர். ஆலயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளின் பொழுது கும்பங்களை அலங்காரம் செய்வதும் பூமாலையால்தான். பூமாலை சாத்தப்பட்டதும் மங்களகரமான சூழ்நிலை உருவாகும்.

மங்கல காரியங்கள் நிகழுமிடத்து பூ அலங்காரப் பொருளாகவும் திகழ்கிறது. திருமணச் சடங்குகளில் முக்கியமானது மணமகன், மணமகள் மாலை மாற்றுதல் ஆகும். திருமணத்திற்கான மணவறையும் பூவினால் கட்டப்படுவதுண்டு. கணவன் வீட்டுக்குத் திரும்பும் பொழுது மனைவிக்காகப் பூச்சரம் வாங்கிச் செல்லும் வழக்கமுண்டு. தலைக்குத் தினமும் பூ சூடுவதற்காக இல்லங்களில் மல்லிகை, முல்லைச்செடிகள் வளர்ப்பதுண்டு. வீடுகளிலும் தினமும் சுவாமி படங்களுக்குப் பூமாலை சாத்தி வழிபாடு செய்வர். ஆலயங்களில் இறைவனின் திருக்கல்யாண உற்சவத்தின் பொழுது பூவினால் செய்யப்பட்ட தண்டிகையில் சுவாமியின் திருவீதியுலா இடம்பெறும். அனேகமான ஆலய வாயில்களில் பூக்கடைகள் காணப்படும். அடியார்களில் சிலர் நந்தவனம் அமைத்து சரியைத் தொண்டினை ஆற்றியுள்ளனர். இவர்களில் அப்பர், சங்கிலியார், பரவையார் குறிப்பிடத்தக்கவர்கள்.

வியாபார நிறுவனங்களில் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டிருக்கும் சுவாமிபடங்களுக்கு பூமாலை சாத்தி வழிபாடு செய்த பிற்பாடுதான் தமது வழக்கமான நடைமுறைகளைக் கைக்கொள்வர்.

தெய்வங்களுக்கு ஆகாத மலர்கள், பத்திரங்கள்:

| | |
|---|---|
| கணபதி | : துளசி |
| விஷ்ணு | : ஊமத்தம்பூ, எருக்கம்பூ |
| துர்க்கை | : அறுகு |
| சூரியன் | : வில்வம் |
| இலக்குமி | : தும்பை |
| சிவன் | : தாழம்பூ |
| வைரவர் | : மல்லிகை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

நறை கொண்ட மலர் தூவி
விரையளிப்ப நாடோறும்
முறை கொண்டு நின்றடியார்
முட்டாமெ பணிசெய்யச்
சிறைகொண்ட வண்ட றையுஞ்
செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான்
கணபதிச் சரத்தானே.

திருச்சிற்றம்பலம்

- திருஞான சம்பந்தர்.

✦✦✦

## 15. நீர்

நீர் உயிர்வாழ்வதற்கும், உளம், உடல் தூய்மைக்கும் இன்றிய மையாதது. இந்து சமயத்தவரின் சடங்குகள், கிரியைகள், ஆராதனைகள் யாவும் நீர் இல்லாமல் நடப்பதில்லை. நீர் பஞ்ச பூதங்களில் ஒன்றாகும்.

**உடலிலுள்ள பஞ்சபூத ஸ்தானங்களாவன:**

| | | |
|---|---|---|
| பாதம் முதல் முழங்கால்வரை | - | நிலம் |
| முழங்கால் முதல் இடுப்புவரை | - | நீர் |
| இடுப்பு முதல் தொப்பூழ்வரை | - | அக்கினி |
| கொப்பூழ் முதல் நாசிவரை | - | வாயு |
| நாசி முதல் தலைவரை | - | ஆகாயம் |

ஆலயங்களில் பிரசாதமாக வழங்கப்படும் நீர் தீர்த்தமாகும்.

இந்து சமயத்தின் தொன்மையும் அதன் கலாசாரப் பண்பாடும் தோன்றி வளர்ந்தமை நதிப் பள்ளத்தாக்குகளிலேதான். இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான் என்ற தத்துவத்தினாலேதான் மலைகள், குன்றுகள், ஆறுகள், கடல்கள் யாவும் பரிசுத்தமடைந்து வழிபாட்டுக்குரிய இடங்களாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முக்கிய தீர்த்தமாகத் திகழ்பவை கங்கையும் காவிரியும் யமுனையுமாகும். கங்கைத் தீர்த்தம் இமயத்தினின்றும் உற்பத்தியாவதால் புண்ணியநதி எனப் போற்றப்படுகிறது. கங்கைக் கரையோ ரத்திலுள்ள காசி புனிதத் தலமாகும். இந்துக்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது காசிக்குச் சென்று புனிதநீராட வேண்டு மென்ற கொள்கையுடன் வாழ்வர். திருப்பாற்கடலில் ஸ்ரீ மகாவிஷ்ணு உலகைக் காத்து அருளுதற் பொருட்டு திருப்பள்ளி கொண்டுள்ளார்.

மூர்த்தி. தலம், தீர்த்தம், விருட்சம் என்ற நான்கினை விசேட அம்சங்களாகக் கொண்டவை திருத்தலங்கள் ஆகும். தீர்த்தக்கரை இல்லாத ஆலயங்களில் திருக்குளம் அமைப்பர். உற்சவகாலத்தில் இடம்பெறும் தீர்த்த உற்சவம் இதில் நிகழும். நீர் முக்கியமானதென்பதை எடுத்துக்காட்டுவதற்கு இறைவன் கங்கா நதியினைத் தன் சடையிலே சூடியுள்ளார். சில ஆலயங்களில் தெப்பத் திருவிழா என்ற உற்சவத்தினைக் கடலிலேதான் நடத்துவர்.

அபிடேகத்தின் பொழுது திரவியங்களால் அபிடேகம் செய்துமுடிந்த பின், நீரினால்தான் அபிடேகம் நிகழும். தினமும் இடம்பெறும் கிரியைகளில் திருவுருவங்களுக்கு எண்ணெய் சாத்திய பின்னர் நீரினால் அபிடேகம் இடம்பெறும்.

ஆலயத்தின் உள்ளே செல்வதற்கு முன்பு கை, கால்களைக் கழுவிவிட்டுத்தான் செல்ல வேண்டும். ஆலயமும் தினமும் கழுவப்பட்டு மஞ்சள் நீர் தெளிக்கப்பெறும். பூசைப் பொருட்கள் யாவும் நீரினால் கழுவப்பட்டே கிரியைகளுக்கு எடுக்கப்படும். அபிடேகம் செய்யப்படும் கும்பநீரானது மந்திரங்கள் கிரியைகள் ஆகியவற்றால் இறைசக்தியைப் பெறுகிறது. அந்த நீரினால் திருவுருவிற்கு அபிடேகம் செய்யப்படும் பொழுது திருவுருவம் அருட்சக்தி பெறுகிறது. நீருக்கு மந்திரசக்தியை உள்வாங்கும் தன்மையுள்ளது. இது நீரின் மகத்துவமாகும். அபிடேகம் செய்யப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் கோமுகை வழியாக வெளிவரும்போது பக்தர்கள் அதனை அருந்தியும் உடம்பில் பூசியும் இறையருளைப் பெறுவர்.

முன்னையக்காலத்தில் குழந்தைகளுக்கு கண்ணேறு ஏற்பட்டால் பூசகரிடம் சென்று தண்ணீர் மந்திரித்து அதனைக் குழந்தைகளுக்குப் பருக்குவார்கள். தீயசக்திகளை அகற்ற மந்திரசக்தி ஏற்பட்ட நீரை வேப்பிலையினால் தெளிக்கும் வழக்கமுண்டு. இறைவனுக்குப் படைக்கப்படும் நிவேதனப் பொருட்களுக்கு நீரினால்தான் பூசகர் நைவேத்தியம் பண்ணுவர். நீரினால் 'நைவேத்தியம் சமர்ப்பியாமி' என்ற கிரியை இடம்பெற்றதும் அது பிரசாதமாகிறது. இறைவனுக்குப் பூசிக்கப்படும் பூக்கள் நீரில் போட்டு அதன்பிற்பாடுதான் அர்ச்சிக்கப்படும். அர்ச்சிக்கப்பட்ட பூ பிரசாதப் பொருளாகும். திருமணக் கிரியையின் பொழுது பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்குமிடத்து பெண்ணின் கையில் தாம்பூலம், பொன் ஆகியவற்றை வைத்து மந்திரங்களுடன் நீரினால் தாரை வார்த்துத் தத்தம் பண்ணுவார்கள்.

இல்லங்கள் சுபகாரியங்கள், விரத அனுட்டானங்கள் இவை களைக் கடைப்பிடிக்குமிடத்து வீட்டை நீரினால் கழுவி மஞ்சள் நீர் தெளிப்பார்கள். வெளியே சென்று வீட்டிற்கு வந்தால் நீரினால் கை கால் கழுவிய பின்புதான் உள்ளே செல்வர். இவ்வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. அபரக் கிரியைகளில் கலந்து விட்டு வந்தால் தலைக்கு நீர் வார்த்து விட்டுத்தான் வீட்டுக்குள் நுழைவர்.

பிதிரர்களுக்குரிய கிரியைகள் தீர்த்தக் கரைகளிலேதான் இடம்பெறும். ஆன்ம ஈடேற்றம் பெற்ற அஸ்தியை கடலில்தான் கரைப்பர். வசதிபடைத்தோர் காசிக்குச் சென்று கரைப்பதுண்டு. ஆடி அமாவாசை பிதிரர்களுக்குரிய கடமைகளைச் செய்யும் தினமாகும். விரத அனுட்டானம் முடிக்கும் பொழுது தீர்த்தமாக நீரை அருந்திய பிற்பாடுதான் உணவினை உட்கொள்வர். விரதத்தை முடிக்குமிடத்து ஆலயத்திற்கு சென்று இறைவனின் திருவருளான தீர்த்தத்தை அருந்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நீரானது மந்திரசக்தியை உள்வாங்கும் தன்மையுடையதாகவும், இறைவனின் அருளான தீர்த்தமாகவும், உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்தும் மங்கலப் பொருட்களுள் முதன்மையானதாகவும் திகழ்கிறது.

தீர்த்தத்துறையில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதமில்லை. யாபேரும் சமமாக நீராடுவர். இறைவனுக்கு எல்லா உயிர்களும் சமம்.

மருத்துநீர் என்பது தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால்,கோசலம்,கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளைச் சுத்தமான நீரிலிட்டு காய்ச்சிப் பெறுவதாகும்.

இது புதுவருடப்பிறப்பன்று ஆலயங்களில் தயாரித்து வழங்கப்படும்.

விஷு புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து, மருத்துநீர் தலையில் தேய்த்து, சிரசில் கடம்ப இலையும், காலில் வேப்பிலையும் வைத்து ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து இறைவழிபாடு செய்வர்.

திருச்சிற்றம்பலம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலிகொண்டுழல்வாய்
உடலுள்ளூறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசர்

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. பன்னீர்



வீட்டில் சுபகாரியங்கள் இடம்பெறுமிடத்து வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் நிறைகுடத்துடன் பன்னீர் கும்பாவும் வைக்கப்பட்டிருக்கும். வருபவர்களை வரவேற்று சந்தனம், குங்குமம் அளித்து பின்பு இனிப்புச் சுவைக்கு கற்கண்டினையும் வழங்கி அவர்கள் மீது பன்னீரையும் தெளித்து வரவேற்பது மரபாகும். பன்னீர் தெளிப்பது மங்கல காரியத்திற்கு அறிகுறியாகும். இனிய மணத்துடன் மங்கள சூழலுக்குள் செல்லவேண்டுமென்பதே இதன் தத்துவமாகும். சுபகாரியத்திற்கான சூழலினை பன்னீரின் நறுமணம் எடுத்துக் காட்டும்.

ஆலயங்களில் திருவுருங்களுக்கு அபிடேகம் செய்யும் பொழுது பன்னீர் அபிடேகத் திரவியமாகிறது. பன்னீரால் அபிடேகம் செய்யப்படுவதனால் இறைவனின் திருவருள் எம்மில் பதிகிறது. பன்னீர் அபிடேக திரவியமாகிறது. இதனால் அபிடேகம் செய்யப்பெறுமிடத்து கிடைக்கும் பலன் சாலோக்கிய முத்திப் பேறாகும். இது சரியை நெறியினைக் கடைப்பிடித்தோர்க்கு கிடைக்கும் பேறாகும். உற்சவகாலங்களில் திருவுருவங்களை சாத்துப்படி சாத்தி அலங்காரத்துடன் சுவாமி எழுந்தருளுமிடத்து பன்னீர் தெளித்த பின்னர்தான் திருமூர்த்தி தூக்கப்பெறும்.

திருவுருங்களுக்குச் சந்தனக்காப்பு சாத்தப்படும் பொழுது சந்தனத்தில் பன்னீர்விட்டுக் குழைத்து அதன் பின்னரே சாத்தப்படும். நெற்றியில் இடும் சந்தனத்தின் நறுமணத்துக்காகவும் அதனைப் பன்னீரில் கலப்பது வழக்கம்.

✦✦✦

## 17. பால்

மங்கலப் பொருட்களுள் பால் பிரதான மானது. பால் இன்றி எந்த இந்துசமயக் கிரியைகளோ, சடங்கு சம்பிரதாயங்களோ இடம் பெறமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பால் சகலவிதமான ஐசுவரியங் களையும் தன்னகத்தே கொண்டுள்ள மையால் கிருஷ்ணபகவான் ஆயர்பாடியில் பசுக்களைத் தன் வேணுகானத்தினால் மகிழ்வித்தார். கிருஷ்ண பகவானுக்கு மிகவும் பிடித்தமானது வெண்ணெய். அதனால் கையில் வெண்ணெய்யைத் தாங்கியுள்ளார். பாலைக் காய்ச்சி அதற்குள் உறைமோர் விட்டுத் தயிரானதும், அதனைக் கடைந்து எடுக்கின்ற வெண்ணெய்யைத் தனது தோழர்களுடன் சென்று திருடி உண்பாராம். (நவ- புதிதாக, நீதம் - எடுக்கப்பட்டது) எம்முடைய உள்ளம் பால் போன்று வெண்மையாக தூயதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மேகவர்ணமுடைய கண்ணன் எம் அருகில் வருவான். மேகம் கருமை நிறமாக இருந்தாலும் அதிலிருந்து பொழிகின்ற மழை நீரானது கறுப்பாக இருப்பதில்லை. அதேபோன்று கிருஷ்ணனின் அருளைப் பெற வேண்டுமேயானால் கபடு, சூது, போன்ற மாசுகளை உள்ளத்திலிருந்து அகற்றி பாலின் நிறமான வெண்மை போன்று வைத்திருக்க வேண்டும்.

பசுவானது நாம் கொடுக்கும் கழிவுப் பொருட்களை உண்டு, வெண்மை நிறப் பாலாக அளிக்கின்றது. இது தியாக உணர்வுடன் நாம் வாழ வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுகிறது. குழந்தைக்கு தாய்ப்பால் கிடைக்காத பொழுது தாய்க்கு நிகராகத் தன் பாலைக் கொடுத்து குழந்தையை வளர்ப்பது பசு. இதனால் பசுவினைக் கோமாதா என அழைப்பர். பால் ஒரு நிறைவுணவென மருத்துவர்கள் சிபார்சு செய்கின்றனர்.

பசு என்ற அரும்பெரும் செல்வத்திலிருந்து பல செல்வங்கள் கிடைக்கப்பெறுகின்றன. பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய்,கோமயம், கோசலம் என்பன பஞ்சகௌவியம் எனப்படும். இதனைச் சம்பந்தர் 'நறு நெய்யொடு பால் தயிர்' எனப்பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் இறைவனின் அபிடேகத்திற்காகவும் நிவேதனத் திற்காகவும் பசுக்களை வளர்க்கும் வழக்கமுளது. சில ஆலயங்களில் உற்சவகாலங்களில் சுவாமி திருவீதியுலாக வருமிடத்து காளை மாடு சுவாமியை இழுத்துச் செல்வது வழக்கம். பசுவிடமிருந்து பெறப்படும் கோரோசனை அபிடேகத்திரவியமாகிறது. இதனால் திருவுருவத்திற்கு அபிடேகம் செய்யப்படுவதனால் கிடைக்கப் பெறும் பலன் தீர்காயுள் ஆகும். குழந்தைகளுக்கு இது மருந்தா கவும் பயன்படுகிறது.

இறைவனுக்கு செய்யும் உபசாரங்களில் 'மதுபர்க்கம்' ஒன்றாகும். தயிர், பால். நெய், தேன் இவைகளைச் சமமாகக் கலந்து இது பெறப்படும். இதை இறைவனின் முகத்திற்கு நேராகக் காட்டவேண்டும். இறைவனுக்கு அபிடேகம் செய்யப்படுவதற்குப் பஞ்சாமிர்தம் முக்கியமானது. பஞ்சாமிர்தத்தில் அபிடேகம் செய்வதால் யாவற்றிலும் வெற்றி கிடைப்பது மட்டுமன்றி எல்லா வகையான செல்வமும் கிடைக்கப்பெறும். தேன், நெய், சர்க்கரை, பால், தயிர் இவை ஐந்தும் சேர்ந்ததுதான் பஞ்சாமிர்தம். இதில் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகிய முக்கனி வர்க்கத்தையும் சேர்க்கலாம். அபிடேகம் செய்ததன் பின் பக்தர்கட்கு பஞ்சாமிர்தம் பிரசாதமாக வழங்கப்படும்.

இறைவனின் விபூதிப் பிரசாதம் பசுவின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. விநாயகர் வழிபாட்டிற்கு சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைக்கப்படுகிறது. பாலினால் அபிடேகம் செய்வதனால் ஆயுள் விருத்திப் பலனும், தயிரினால் அபிடேகம் செய்வதனால் வம்சவிருத்தியும் ஏற்படும். பிரசாதம் வைக்காத நேரத்தில் இறைவனுக்குப் பால் நிவேதனமாகிறது. ஆலயங்களில் முதல் பூசையான உஷாக்காலப் பூசைக்கு பால்தான் நிவேதன மாகிறது. கிரியைகள் இடம் பெறுமிடத்து அக்கினி காரியங்களில் சமர்ப்பிக்கப்படுவது நெய் ஆகும். அக்கினி கிரியைகளின் முடிவில் பூரணாகுதி இடம்பெறும். நெய்யைச் சிருக்கில் விட்டுச் சிருவத்தாலே மூடி அதன் நுனியில் பூ வைத்து எழுந்து நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்யைத் தாரையாக ஓம குண்டத்தில் விடப்படும். அப்பொழுது தேங்காய், பால், பழம், வெற்றிலை, சுவர்ணபுஷ்பம் ஆகிய மங்கலப் பொருட்களும் ஓம குண்டத்தில் இடப்படும். பசுவின் கோசலம் (சிறுநீர்) மருத்துவத் தன்மை கொண்டது. குத்துவிளக்கில் நெய் ஊற்றி திருவிளக்குப் பூசை செயவர். ஆலயங்களில் மாவிளக்குப் பூசை செய்யுமிடத்து மாவிளக்கில் நெய்விட்டு ஏற்றுவர்.

முற்காலத்தில் ஆலயம், வீடு ஆகியவற்றின் நிலத்தை சாணத்தினால் மெழுகுவர். இதனை அப்பர், 'புலவர்தன் முன் அலகிட்டு மெழுகுமிட்டு' எனப்பாடுகின்றார். நிவேதனமாக வைக்கப்படும் பால் காய்ச்சப்பட்டதாக இருக்க வேண்டும். கிரியை சடங்குகளுக்கு காய்ச்சப்படாத பால் பயன்படுத்தப்படும்.

பெண்ணின் புனித நீராட்டு விழாவின் பொழுது முதலில் பால்தான் தலையில் வைப்பார்கள். அதற்குப் பின்தான் புனித நீராட்டு வைபவம் இடம்பெறும். திருமணத்தன்றும் மணப்பெண்ணின் தலையில் பால், அறுகு இரண்டும் வைக்கப்பட்டதன் பின்னரே தலைக்குத் தண்ணீர் வார்ப்பார்கள். இது ஒரு சடங்காகவே செய்யப்படும். வாழ்க்கை தூய்மையானதாக, அறுகு போல் வேரூன்ற வேண்டுமென்பதே இதன் தத்துவமாகும். திருமண வைபவம் முடிந்தவுடன் முதலில் மணமக்கள் பசு தரிசனத்தையே பெறுவர். பின்பு பிரசாதமாகப் பாலும் பழமும் அருந்துவர். ஆலயத்தில் விஷேட கிரியைகள் இடம்பெறும் பொழுது பசுவினை ஆலயத்திற்கு கொண்டு சென்று கோபூசை செய்வர்.

புதுமனை குடிபுகுதலின் போது புதுப்பானையில் பால் காய்ச்சி அதற்குள் கற்கண்டு சேர்த்து எல்லோருக்கும் வழங்குவர். இதனைப் பால் காய்ச்சுதல் என்றே வழங்குவர். வீட்டில் துடக்கு ஏற்பட்டால் அதற்கான புண்ணியாகக் கிரியை செய்துவிட்டு நீரில் பால் கலந்த புண்ணியாகநீரை மாவிலையினால் வீடு, வெளிப்புறம் ஆகியவற்றில் தெளிப்பதோடு எல்லோரது உடம்பிலும் தெளிக்கப்படும். இங்கே பால் ஒரு புனிதப் பொருளாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு பால் பருக்குதல், அன்னப்பிரசானத்தின் (சோறு ஊட்டுதல்) பொழுது சோற்றுடன் பாலையும் சேர்த்து அளிப்பது வழக்கம். பௌத்தர்கள் எல்லாச் சுபகாரியங்களிலும் பாற்சோறு வைக்கும் வழக்கமுண்டு. இந்துக்களும் தைத்திருநாளன்று புதுப்பானையில் பொங்கல் வைக்குமிடத்து பாலினைக் கலந்தே பொங்கல் வைப்பர். புதுப்பானையில் பால் பொங்கி வழிவதனைப் பார்த்து குதூகலித்து மகிழ்வர். நாட்டில் கடுமையான வரட்சி ஏற்பட்டால் இறைவனைக் குளிரவைக்குமுகமாக குடம் குடமாக பாலினால் அபிடேகம் செய்வர். அம்பாளின் உளம் குளிர்ந்தால் மழை பெய்யுமென்பது ஐதீகம்.

எல்லாச் செல்வங்களையும் கொண்ட பசுவினை அடியார்கள் பாடல்கள் வாயிலாகப் போற்றியுள்ளனர்.

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்!' என சம்பந்தரும்
'யாவர்க்குமாம் பசுவுக்கு கொரு வாயுறை' எனத் திருமூலரும் போற்றியுள்ளனர்.

உமாதேவியார் காஞ்சித் தலத்திலிருந்து வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய முப்பத்திரண்டு அறங்களை வளர்த்தார் என்று புராணம் கூறுகிறது. அவற்றுள் பசுவுக்கு (பசுமாட்டிற்கு பசும் புல்லாகிய உணவு கொடுத்தும்) விலை கொடுத்து கொலை செய்யப்படவிருக்கும் பசுக்களை மீட்டல் ஆகியவை முக்கிய அறச் செயல்களாகும். ஆலயக்கிரியைகள் நடாத்துமிடத்து ஆச்சாரியார் புலித்தோலை ஆசனமாகக் கொள்வர். ஆமை வடிவிலான பலகையும் ஆசனமாகும். மானிடமிருந்து பெறப்படும் கஸ்தூரி அபிடேக திரவியமாகும். இதனால் அபிடேகம் செய்யப்பெறும் பொழுது கிடைக்கும் பலன் சகல காரியங்களிலும் வெற்றி கிடைப்பதாகும்.

தொன்மைக்காலத்தில் சந்திக்குச் சந்தி பசுக்கள் உடலை உரோஞ்சுவதற்காக 'ஆ உரோஞ்சுக்கல்' அமைத்திருந்தனர். இன்று கூட சில கிராமங்களில் ஆவுரோஞ்சுக்கல்லைக் காணலாம். கிணற்றுக்கு அருகாமையில் தொட்டி அமைத்து பிராணிகள், மிருகங்கள் குடிப்பதற்காக நீர் இறைத்து விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் மங்கலப் பொருள்களுள் முக்கியமானதாகவும், கிரியை, பூசைக்குரிய பொருளாகவும், உணவுப் பொருளாகவும் கொள்ளப்படுகிறதெனலாம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

-திருஞானசம்பந்தர்

✦✦✦

## 18. தேங்காய்

எந்தக் கருமத்தைத் தொடங்கும் போதும் அந்தக் கருமம் விக்கினமின்றி வெற்றியுடன் முடிய வேண்டுமெனப் பிள்ளையாரை நினைத்துத் தேங்காய் உடைத்து வழிபாடு செய்கின்றோம்.

சுபகாரியங்கள் ஆரம்பமாவதற்கு முதல் வழிபாடு பிள்ளையார் பூசை ஆகும். யாவும் சுபமாக முடிய வேண்டுமென 'வக்ர துண்ட மகாகாயம் கோடி சூரிய சமர்ப்பயாமி' என்ற மந்திரத்தைச் சொல்லி தேங்காயை உடைப்பர். சடங்குகளாயின் உறவு முறையினர்க்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்கள்தான் தேங்காயை உடைப்பார்கள்.

திருமண வைபவங்களில் பெண்ணை மாப்பிள்ளைக்கு கன்னியாதானம் பண்ணிக் கொடுக்கும் பொழுதும் திருமாங்கல்யம் கட்டும் பொழுதும் தேங்காய் உடைக்கப்படும். வீட்டிலிருந்து சுபகாரியங்கள் நிகழ்த்துவதற்குப் புறப்படும்பொழுது வாசலில் சிதறு தேங்காய் உடைத்து விட்டுத்தான் புறப்படுவர். எந்தச் சுபகாரியங்களோ அன்றி சடங்குகள், கிரியைகளோ எல்லாவற்றுக்கும் தேங்காய் பிரதானமானது. கிரியைகளுக்கு குடுமியுடன்தான் தேங்காய் பாவிக்கப்படல் வேண்டும்.

ஆலயங்களில் அர்ச்சனை செய்யச் சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் ஆலயவாயிலில் தேங்காய் உடைத்து வழிபாட்டினைச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்குச் செல்லும் பொழுது அர்ச்சனைக்காகவோ அன்றி வழிபாட்டிற்காகவே தேங்காயைக் குடுமியுடன் எடுத்துச் செல்கின்றோம். தேங்காய் எமது தலையைக் குறிக்கின்றது. குடுமியிலுள்ள தும்புகள் எப்பொழுதும் எம்மைப் பற்றியிருக்கும் வாழ்வுச் சிக்கல்களைக் குறிக்கின்றன. இறைசன்னிதானத்தை அடைந்து பூசை ஆராதனைகள் நடாத்துமிடத்து தேங்காய் உடைக்கப் படுகிறது.

இறைவனின் அருள் எம்மிற் பதிந்து மனம் சாந்தி அடைகின்றது. இதனைக் குறிக்கும் முகமாக உடைக்கப்பட்ட தேங்காயின் குடுமி அகற்றப்படுகின்றது. மூன்று கண்ணுள்ள தேங்காய்ப்பாதி பிரசாதமாக எமக்கு அளிக்கப்படுகிறது. இறைவன் முக்கண்களாலும் எமக்கு அருள் பாலித்துள்ளார் என்பதனையும் எம்முள் ஞானமாகிய கண் திறக்கப்பட்டது என்பதனையும், எமது அறியாமை என்ற திரை அகற்றப்பட்டுவிட்டது என்பதனையும் இது குறிப்பதாகும். முக்கண் உடையபாதி பிரசாதமாகக் கிடைத்தவுடனே எம்மிடம் ஆத்மபலம் கூடுகின்றது. உளப்பூரிப்புடன் ஆலயத்திலிருந்து திரும்பு கிறோம்.

தேங்காய் உரிக்காத நிலையில் தேங்காயின் மேலேயுள்ள பச்சைமட்டை மாயாமலம். அதாவது பலவித வர்ண வித்தைகளைக் கொண்டுள்ள உலகம். உரித்து எடுக்கின்ற நார் கன்மமலம் (நாம் செய்கின்ற நல்ல செயல், தீய செயல்) இந்த அழகான உலகத்தில் நாம் உரிய செயல்களைச் செய்யுமிடத்து நல்ல பலனே கிடைக்கம். அதேபோன்று முழுத்தேங்காயின் பச்சை மட்டையை உரித்து உள்ளே உள்ள தும்பு நார் பகுதிகளைக் கவனமாக எடுக்க வேண்டும். உள்ளே தேங்காயின் ஓடு ஆணவமலம். ஆவணமலம்தான் எல்லாச் செயல்களையும் செய்யத் தூண்டுகிறது. சரியான முறையில் ஓடு உடைக்கப் பட்டால்தான் தேங்காய் எமது தேவையைப் பூர்த்தி செய்யும். எனவே எம்மிடமுள்ள இந்த மூன்று ஆசைகளும் நீங்கப் பெற்றால் 'சித்தி சுத்தி' கிடைக்கும் என்பதனைத் தேங்காயை உடைத்தபின் கிடைக்கும் வெண்மையான பருப்பு எமக்கு எடுத்துக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை மூன்றும் பீடித்து எம்மை ஆட்டிப்படைகின்றன. இம்மலங்களை அகற்றி இறையருள் பெறுவதையே தேங்காய் உடைக்கும் கிரியை உணர்த்துகிறது.

பிள்ளையாருக்கு மோதகம் போன்று தேங்காயும் முக்கிய நிவேதனப் பொருளாகும். தேங்காய் உடைத்தல் என்பது உளவுணர்வுடன் தொடர்புபட்டது. சரியான முறையில் தேங்காய் பாதியாகிவிட்டால் உள்ளத்தில் பூரிப்பு ஏற்படுகிறது.

ஆலயத்தில் வழிபடும் பக்தர்களில் பெரும்பாலோனோர் தேங்காயின் மேல் கற்பூரத்தைக் கொளுத்தி வைத்து வீதி வலம் வந்து அதனைச் சிதறு தேங்காயாக உடைப்பர். பூசைப் பொருட்கள் யாவற்றையும் ஆலயப் பூசைக்காக கொண்டு செல்லாவிட்டாலும் தேங்காயை எடுத்துச் செல்வதற்கு எவரும் மறக்கமாட்டார்.

சுபகாரியங்களில் பயன்படுத்தப்படும் தேங்காயில் மஞ்சள் பூசி வைக்கப்படும். நிறைகுடத்திற்கு மேல் வைக்கப்படும் தேங்காய்க்கு மஞ்சள் பூசி சந்தனம், குங்குமம் இட்டு உச்சியில் பூவும் வைக்கப்படும். கிரியைகளின் பொழுது வைக்கப்படும் கும்பங்களுக்கும் தேங்காய் முக்கியமானது.

இளநீர் அபிடேக திரவியங்களில் ஒன்றாகும். இதனால் அபிடேகம் செய்யப்படுவதனால் கிடைக்கப்பெறும் பலன் நன்மக்கட்பேறாகும். முதன்முதலாகப் பிறந்த குழந்தையை ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பொழுது தென்னங்கன்றினை ஆலயத்திற்கு அளிக்கும் மரபு இன்றும் எம்மிடையே உளது.

பக்தர்கள் தமது காரியங்கள் தடையின்றி நிறைவேற்றுவதற்காக குலதெய்வங்களுக்கு நேர்த்தி வைத்து சிதறு தேங்காய் அடிக்கும் வழக்கமும் உண்டு. புத்தாண்டு தினத்தன்று பிரதேச வழக்கமாக போர்த் தேங்காய் அடிக்கும் வைபவம் இன்றும் சிலகிராமங்களில் நடைபெற்று வருவதைக் காணலாம். ஆலய உற்சவங்களில் தேர்த்திருவிழாவன்று தேரை இழுப்பதற்குமுன் சிதறு தேங்காய் அடிக்கப்படும். முக்கியமாக நிறுவனங்களின் முன்னர் தேர் வருமிடத்து சிதறுதேங்காய் அடிப்பார்கள். சிதறு தேங்காயாக அடிக்குமிடத்து குடுமியினை அகற்றுதல் கூடாது. குடுமியுடன் தான் அடிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லில் மோதி உடைப்போர்க்குச் சிதறுதேங்காய் நிவேதனமாவதுபோல நாமும் எவர்க்கும் நன்மை செய்தல் வேண்டும் என்பது இதன் தாற்பரியமாகும்.

திருமணத்தை நிச்சயப்படுத்தியவுடன் தாம்பூலம் மாற்றுதல் இடம்பெறும். அதில் தேங்காய் மஞ்சள் பூசியபடி வைத்தல் முக்கியம்.

ஆசியநாட்டு மக்களின் உணவு வகைகளுக்கு ருசியினை ஊட்டும் பொருளாகவும் தேங்காய் பயன்படுகிறது.

✦✦✦

## 19. கற்பூர ஆரத்தி

கற்பூரத்தின் நிறம் வெண்மையானது. இது எம்மிடம் பேணப்பட வேண்டிய தூய்மையான குணமான சத்துவக் குணத்தினைக் குறிப்பதாகும். எமது உள்ளத்தை மூன்று இயல்புகளையுடைய குணங்கள் மாறி மாறி ஆட்சி புரிகின்றன. ஒன்று சாந்தமான சத்துவக் குணம். இது பௌர்ணமி போன்றது. அடுத்தது அமாவாசை இருளைப் போன்ற இராசத குணம். இந்தக் குணம் உள்ளவர்களை இலகுவில் கணிப்பிட முடியாது, அவர்களது செயற்பாடுகள், நடத்தைகள் கொண்டுதான் அறியலாம். தாமதகுணமுடையவர்கள் எது நடந்தாலும் நடக்கட்டும் என்ற சோம்பற் குணமுடையவர்கள்.

சத்துவ குணமான கற்பூரத்தில் அக்கினி பற்றியதும் அது தன்நிறத்தை, இயல்பை இழந்து அக்கினியின் மயமாகிவிடுகிறது. அதுபோலவே ஆன்மாவில் ஞானமாகிய அக்கினி சேருமிடத்து உயிர் என்ற நிலை நீங்கி இறைமயமாகிவிடும். கற்பூரம் அக்கினியில் பெரிதாக எரிந்து சிறிது சிறிதாகத் தன்னுருவம் தேய்ந்து இறுதியில் பரந்து வெளியுடன் இரண்டறக் கலந்துவிடும். இது ஆன்ம ஈடேற்றம் பெற்றவுடன் ஆன்மா இரண்டறக்கலந்து நிற்கும் நிலையினைக் காட்டுகிறது.

கற்பூரம் தீப்பற்றியதும் பெருஞ்சுவாலையுடன் எரிகின்றது. இது எம்மிடத்தில் உள்ள தேவையற்ற ஆசைகள் எவ்வாறு எரிக்கப்பட வேண்டும் என்பதனை உணர்த்துகிறது. முக்கியமாக அகம்பாவமான நான் - எனது என்ற செருக்குகள் யாவும் எரிக்கப்படுகின்றன. கிரியைகள் சடங்குகள், வீட்டில் செய்யப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடுகளில் எல்லாம் கற்பூரம் பயன் படுத்தப்படுகிறது. வீட்டில் உள்ள சுவாமி படங்களுக்குத் தூபதீபம் காட்டி, தீபம் காட்டி, பாராயணம் செய்து, பூசை முடிவில் கற்பூர ஆரத்தி காட்டப்படல் வேண்டும். அத்துடன் அதனை வீட்டு வாயிலுக்கும் காட்டி எல்லோரும் கண்ணில் ஒற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

ஆலயங்களிலும் கிரியைகளின் இறுதியில் கற்பூர ஆரத்தி காட்டப்படுவது வழக்கமாகும்.

ஆலயங்களில் பூசை வழிபாடு செய்ய வசதியில்லாதவர்கள் கற்பூரத்தினை எரித்து தமது ஆத்ம திருப்தியினைப் பெறுவர்.

சிலர் தமக்குக் கடுமையான சுகயீனம் ஏற்பட்டால் அல்லது ஏதாவது காரியம் நடைபெற வேண்டுமென விரும்பினால் நேர்த்திக்கடன் வைத்து கற்பூரச்சட்டி எடுப்பது வழக்கம். ஆலய உற்சவங்களின் பொழுது பொதுவாகப் பெண்கள் இந்த வழிபாட்டினை ஆற்றுவர். தலையில் வேப்பிலையை வைத்து அதன் மேல் கற்பூரச் சட்டியை எரியவிடுவார்கள்.

புராணபடனம் நடக்குமிடத்து படனம் முடியும்வரை கற்பூரச்சட்டியில் சிறிது சிறிதாக கற்பூரத்தை இட்டு எரிய விட்டுக் கொண்டெ இருப்பர். மங்கலப் பொருளான கற்பூரம் ஒவ்வொரு வீட்டிலும் இருத்தல் அவசியமாகும்.

தாம் சொல்வது உண்மை என்பதனை நிலைநாட்ட கற்பூரம் கொளுத்தி அதன் மேல் தொட்டுச் சத்தியம் செய்யும் வழக்கமுண்டு. இன்றும் கிராமப்புறங்களில் இது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

மங்கலப் பொருட்களில் பழவகைகள் :

பண்ணினார் பாடலாகிப் பழத்தினி லிரதமாகிக்
கண்ணினார் பார்வையாகிக் கருத்தொடு கற்பமாகி
எண்ணினா ரெண்ணமாகி யேழுல கனைத்துமாகி
நண்ணினார் வினைக டீர்ப்பார் நனிபள்ளியடிகளாரே.

இந்துக்கள் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் மாமரம், பலாமரம், வாழைமரம் ஆகிய மரங்களை நட்டு வளர்ப்பார்கள். இம்மரங்களின் பழங்கள் முக்கனிகளாகவும் இறைவனின் நிவேதனப் பொருளாகவும் திகழ்கின்றன.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. வாழைப்பழம்



பூசைப் பொருட்களில் வாழைப் பழம் முக்கியமானது. ஆலயக் கிரியைகளின் பொழுது முதலில் வெற்றிலை, பாக்கு, வாழைப் பழம் இவை மூன்றும்தான் நிவேதனப் பொருள்களாகச் சமர்ப்பிக்கப்படும்.

வாழைப்பழம் அபிடேகத் திரவியங்களில் ஒன்றாகும். இது பஞ்சாமிர்தமாக அபிடேகம் செய்யப்பெறும். அதனால் கிடைக்கும் பலன் பயிர்விருத்தி, வம்சவிருத்தியாகும்.

வாழைப்பழம் முக்கனிகளில் ஒன்றாகவும் இறைவனுக்குரிய நிவேதனப் பொருளாகவும் திழ்வதோடு அபிடேகத்திற்குரிய பஞ்சாமிர்தத்திற்கும் பயன்படுகிறது. மங்கல காரியங்களின் பொழுது நிறைகுடத்திற்கு முன்னால் மங்கலப் பொருளுக்குரிய தட்டு வைக்கப்பட்டிருக்கும். அதில் மஞ்சள் நிறமுள்ள வாழைப்பழச் சீப்பினை வைப்பார்கள். பழங்களின் நுனி வெளியே நோக்கியவாறு வைத்தல் வேண்டும். கறுப்பாக இருக்கும் நுனிப்பகுதியை நீக்கி விட்டுத்தான் கிரியைகளுக்கு எடுத்தல் வேண்டும்.

திருமண வைபவத்தின் பொழுது பெரியோர்களிடம் ஆசி வேண்டுமிடத்து வாழைப்பழம் வைக்கப்பட்ட தட்டில் திருமாங்கல் யத்தை வைத்து ஆசி கேட்பார்கள். திருமாங்கல்யம் கட்டப்பட்டதன் பிற்பாடு பால், தேன், சர்க்கரை, நெய், பழம் சேர்த்துக் கொள்ளப்பட்ட பதார்த்தத்தை மணப்பெண் முதலில் மணமகனுக்கும் பின்னர் மணமகன் மணப்பெண்ணுக்கும் கொடுப்பார்கள். உயர்ந்த பதார்த்தங்களின் சுவை போன்று மணமக்கள் வாழ்வு முழுவதும் நலம் நிலவ வேண்டும் என்பதற்காகவே இது வழங்கப்படுகிறது. பால் - மகாவிஷ்ணு. பழம் - இறைவனின் நிவேதனம்.


விருந்துகளின் பொழுது வாழைப்பழம் முக்கியமாகப் பரிமாறப்படும். உபவாசம் இருப்போர் ஒரு நேரம் பால் பழம் தான் சாப்பிடுவர்.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பலாப்பழம்



வாழ்க்கை என்பது சரியான நெறிமுறையின்றி வாழுமிடத்து பலாப் பழத்தின் வெளித்தோல் போன்று கரடுமுரடாகத்தான் இருக்கும். சரியான நெறிப்படி வாழ்ந்தால்தான் உரிய குறிக்கோளை அடையமுடியும் பலாப் பழத்தின் பால் பிசின் போன்று ஒட்டும் தன்மையது எனவே சுளையைப் பெறுவதற்கு வெட்டப்படும் கருவி கைகள் இவற்றுக்கு எண்ணெய் பூசுதல் வேண்டும். எண்ணெய் பூசிய கருவியினால் பலாப்பழத்தை வெட்டினால் தேனைப் போன்ற சுவையினையுடைய பலாச் சுளைகளை பெறலாம். அதேபோன்ற வாழ்க்கையை குறிக்கோளுடன் உரிய முறையில் வாழ்ந்தால் பலாச்சுளைபோன்ற இன்பத்தைத் தருகின்ற இறையருள் கிடைக்கும். எனவே ஒருவன் தானே தனக்கு நண்பனும் பகைவனும் ஆவான். பலாப்பழத்தை எவ்வித முன் ஆயத்தமுமின்றி வெட்டினால் அதில் உள்ள பால் பிசினாக எம்மை ஒட்டியவுடன் நாம் அதனை இன்னொரு இடத்திற்கு செலுத்தவோம். இப்படி அது ஒட்டிக்கொண்டே போகும். அதேபோன்று வாழ்க்கையில் தகாத செயல்களைச் செய்யும்போது இன்னல்கள் தொடர்ந்து கொண்டே போகும்.

பலாப்பழம் இறைவனுக்கு கிரியைகள் இடம்பெறும் பொழுது நிவேதனமாகவும், அபிடேகத்தின் பொழுது பஞ்சாமிர்தத்திற்குரிய பொருளாகவும் கொள்ளப்படுகிறது. இறைவனுக்குப் படைக்கப் படும் பொருட்களில் பலாப்பழம் முக்கியமானது. பலாப்பழம் அபிடேக திரவியமாகும். இதனால் கிடைக்கப்பெறும் பலன் யோகவசியமாகும்.

✦✦✦

## 22. மாம்பழம்

கிரியைகளிலும் மங்கல காரியங்களிலும் மஞ்சள் நிறத்துடன் எல்லோரது மனத்தையும் கவருகின்ற பழம் மாம்பழம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லா உயிர்களுக்கும் அம்மை அப்பன் ஆக விளங்குபவர்கள் இறைவன் இறைவி ஆவர். இதனால் அடியார்கள் 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே' எனப்போற்றியுள்ளார். ஒவ்வொருவருக்கும் தாய் தந்தைதான் முதல் தெய்வம். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஆன்றோர் வழக்காகும். இதனை இறைவன் தனது திருவிளையாடல் மூலம் எமக்குக் காட்டியுள்ளார். நாரதர் மாங்கனியொன்றினைச் சிவபெருமானிடம் அளித்தார். அவ்வேளையில் இறைவனின் இருமருங்கிலும் முருகப்பெருமானும் பிள்ளையாரும் இருந்தனர். நாரதர் சிவபெருமானிடம் மாம்பழத்தை முழுமையாகச் சாப்பிட்ட வர்களுக்கே முழுப்பலனும் கிடைக்கு மென்றார். இறைவன் சோதனை கொடுத்து அருள்புரிவர் அல்லவா. முருகப் பெருமான் பிள்ளையார் இருவரையும் சோதிக்கத் திருவுளம் கொண்டார். இருவரையும் அழைத்து யார் முதலில் இவ்வுலகினைச் சுற்றி வருகிறார்களோ அவர்கட்கே இம்மாம்பழம் உரியது எனச் சொன்னார்.

முருகப் பெருமான் மயிலின் மீது உலகினைச் சுற்றத் தொடங்கினார். ஆனால் பிள்ளையார் ஞான அறிவினைக் கொண்டு இறைவன் இறைவியை வலம்வந்து மாம்பழத்தைப் பெற்றுக் கொண்டார். இறைவன் இறைவியே சகல உயிர்களுக்கும் அம்மையும் அப்பனும் ஆவர் என்பதனை இக்கதையின் தத்துவம் எமக்கு எடுத்து இயம்புகிறது.

சூரன் பெரும் சிவபக்தன். கடுமையான தவத்தினால் பல வரங்களைப் பெற்றான். வரங்களைப் பெற்றதும் இறைவனை மறந்தான். தான் இறைவனை விடப் பெரியவன் என ஆணவம் கொண்டான். எல்லோருக்கும் துன்பத்தை அளித்தான். சிவபெரு மானின் திருவருளினால் முருகப் பெருமான் அவதாரமெடுத்து சூரனைச் சங்காரம் செய்தார். சூரன் தான் பெற்ற மாயாவித்தைகளை முருகப் பெருமான் மீது காட்டி மறைந்தான். இறுதியாக அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரமாக மாறினான். சக்தியினால் அளிக்கப்பெற்ற ஞானசக்தி வேலினால் முருகப் பெருமான் மாமரத்தை இருகூறாக்க, அவை மயிலும் சேவலுமாக மாறின. சேவல் நாதம், மயில் விந்துவாகும். மயிலைத் தனது வாகனமாக்கி சேவலைக் கொடியாக்கினார். சேவல் 'கொக்கரக்கோ' எனக் கூவும். பொழுது விடிகிறது என்பதனை அறிவிப்பது சேவல் ஆகும். கொக்கு + அர கோ - கொக்கரக்கோ. கொக்கு – மாமரம் (சூரபன்மன்) அர – அறுத்த, கோ – அரசன் (முருகன்) மாமரமாய் நின்ற சூரனை முருகன் சங்காரம் செய்தார் என்பது பொருள். இத்தகைய மகிமை பொருந்திய மாமரத்தின் பழம் நிவேதனப் பொருளாகவும் மங்கலப் பொருளாகவும், அபிடேகத்தின் பொழுது பஞ்சாமிர்தத்திற்கு உரிய பொருளாகவும் பயன்படுத்தப் படுகிறது. இதனால் அபிடேகம் செய்யப்பெறும் பொழுது கிடைக்கப் பெறுவது யாவற்றிலும் வெற்றி ஆகும். வசந்த உற்சவத்தின் பொழுது மாம்பூ முக்கியமான பூசைப் பொருளாகின்றது. அத்தோடு நிவேதனமாகவும் பிரசாதமாகவும் கொள்ளப்படுகின்றது.

பன்னிரு கரத்தாய் போற்றி, பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப் பரம்பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி,
என்னிரு கண்ணே, கண்ணுள் இருக்கு மாமணியே போற்றி

கச்சியப்பர் - கந்தபுராணம்

✦✦✦

## 23. எலுமிச்சம்பழம்



மரங்களில் வேம்பு, வேர்களில் வெள்ளெருக்கு, பழங்களில் எலுமிச்சை, மலர்களில் அரளி ஆகியவை மந்திர ஒலிகளை உள்வாங்கி வெளிப்படுத்தக் கூடிய வலிமையுடையவை. பூசை கிரியைகளில் பயன்படுத்தப்படும் பொருட்களில் மேலே குறிப்பிடப் பட்டுள்ளவையே மந்திரசக்தி கொண்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் கிரியைகளின் பொழுது எலுமிச்சம்பழம் வைக்கப்பட்டு அதற்கு மந்திர உச்சாடனம் செய்யப்படுவதுடன் தூபதீபமும் காட்டப்பெறும். கிரகதோஷமுடைய பெண்கள் எலுமிச்சம்பழப் பாதியை வெளிப்பக்கமாகப் புரட்டி அதனுள் நெய் ஊற்றி விளக்கேற்றுவர். இதனால் திருமணம், மாங்கல்யபலம், வம்சவிருத்தி யாவும் கிடைக்கப்பெறும். இவ்வழிபாட்டினை பௌத்தர் களும் கடைக்கொள்வர்.

எலுமிச்சம்பழ மாலை அம்பாளுக்குச் சாத்தப்படும் சிலர் தமது குறைகளை நிவர்த்தி செய்ய நேர்த்தி வைத்து எலுமிச்சம்பழ மாலையை அம்பாளுக்குச் சாத்துவர்.

வீட்டுக் கிரியை சடங்குகளில் கிரகதோஷத்திற்குரிய கிரியைகளின் பொழுது நவக்கிரகம் அமைந்திருக்கும். திசைகளில் தர்ப்பையை வைத்து, நவக்கிரக பாவனையில் அதன்மேல் எலுமிச்சம்பழத்தை வைத்து அதன் உச்சியில் சந்தனம், குங்குமம் சாத்தி மந்திர உச்சாடனத்துடன் பூசை ஆராதனைகள் செய்யப்பெறும். பின்பு அதனை நீர்நிலைகளில் அல்லது கடலில் போடுதல் வழக்கம்.

கண்ணேறு ஏற்பட்டால் எலுமிச்சம்பழத்தால் தலையைச் சுற்றி தெருவில் போடுவர். கண்ணேறினைத் தவிர்ப்பதற்கு வீட்டு வாயிலிலும் எலுமிச்சம்பழத்தைத் தொங்க விடுவர். புதுவாகனம் வாங்கியதும் ஆலயத்திற்குச் சென்று பூசை ஆராதனைகள் செய்து வாகனத்தின் முன்பக்கத்தில் எலுமிச்சம்பழத்தை ஒற்றைபடக் கட்டுவர். வாகனத்தின் சில் நான்கிலும் எலுமிச்சம்பழத்தை வைத்து வாகனத்தை அதன் மீது ஓட்டுவர். பக்தர்கள் காவடி தூக்குமிடத்து அதிலும் எலுமிச்சம் பழத்தினைக் கட்டுவார்கள்.

✦✦✦

## 24. சமித்துவகை

அக்கினியை ஓமகுண்டத்தில் வளர்க்குமிடத்து எல்லாவிதமான சுள்ளிகளையும் போட முடியாது. இன்ன மரத்தின் சுள்ளிகள்தான் அக்கினி வளர்த்தலுக்கு உகந்தவையென பிராம்மணங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூறப்பட்டுள்ளன. அவையாவும் தெய்வீகத்தன்மை கொண்டவை. இவை சமித்து என்று அழைக்கப் பெறும். கிரியைப் பொருட்கள் எழுதும்சிட்டையில்சமித்தும்எழுதப் படும். அவையாவன - வெள்ளெருக்கு, கருங்காலி, சந்தனம், பலா, வன்னி, அறுகு, நாயுருவி, அரசு, மா, அத்தி சீந்தில் ஆகும். ஓமகுண்டத்தில் அக்கினி வளர்க்கும் பொழுது மந்திரங்களினால் இச்சமித்து வகை இடப்பட்டு நெய் சொரியப்படும். இச்சமித்துக்களினால் வரும் புகையானது உள்ளத்தை, உடலைத் தூய்மைப் படுத்துவதுடன் தோஷங்களையும் நீங்கச் செய்து, சுற்றியுள்ள இடங்களையும் புனிதமாக்குகிறது. அக்கினிபகவான் வானுலக தூதுவனாகக் கொள்ளப்படுவன். நாம் எந்தத் தெய்வங்களுக்கு என்னென்ன பொருட்கள் சேரவேண்டு மெனப் பிரார்த்திக்கின்றோமே அந்தந்தப் பொருட்களின் சாரத்தினை அக்கினி பகவான் உரிய தெய்வத்திடம் சேர்ப்பிப்பான்.

அக்கினியுடன் ஆற்றப்படும் எல்லாக் கிரியைகளுக்கும் சமித்துவகைகள் முக்கிய பொருட்களாகின்றன. இச்சமித்து வகை ஒவ்வொன்றும் தத்துவப் பின்னணி கொண்டவை.

| | | |
|---|---|---|
| மா | - | முக்கனிகளிலொன்று |
| அரசு | - | சிவன், விஷ்ணு, பிரமா மும் மூர்த்திகளின் சொரூபம் |
| வன்னி | - | அம்பாளுக்குரியது<br>வெற்றியைக் குறிப்பது |
| அறுகு | - | விநாயருக்குரியது - வம்சவிருத்தி |
| பலா | - | முக்கனிகளிலொன்று |
| சந்தனம் | - | இறைவனுக்குரிய அபிடேகப் பொருள் |
| வெள்ளெருக்கு | - | மந்திரங்களை உள்வாங்கும் சக்தி கொண்டது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பலாசு - மந்திரங்களை உள்வாங்கும் சக்தி கொண்டது
நாயுருவி - தோஷங்களைப் போக்கவல்லது
கருங்காலி - இறைவனின் வாகனம் செய்வதற்குரியது.

அக்கினியின் சிறப்பு ஆகுதியை நேரே ஏற்பது, கிரியைகளின் பலனை உடனே கொடுக்கவல்லது.

பலாசு இலை அக்கினி காரியங்களுக்கு விசேடமாகப் பயன்படுத்தப்படும். பகவானின் மகிமைகளை ஒருமுறை தேவர்கள் எடுத்தியம்பிய பொழுது பலாசு மரம் மட்டும் அதனைச் செவிமடுத்துக் கொண்டிருந்தது. பலாசிற்கு கேட்கும் சக்தியும் புரியும் சக்தியும் அதிகம். இதனாலேதான் அந்தணச் சிறுவர்க்கு உபநயனம் செய்யும் பொழுது பலாசினைத் தண்டமாகக் கொள்வர். சிறுவன் வேதங்களை செவிவழி பெற்று புரிந்துகொள்ள வேண்டுமென்பது இதன் தாற்பரியமாகும். அக்கினி காரியங்களின் பொழுது பலாசு இலையினால் நெய்யை அக்கினியில் சொரிவதால் அதிகபலன் கிடைக்கப் பெறும்.

✦✦✦

## 25. நவதானியம்



கிரியைப் பொருட்களின் சிட்டையில் மஞ்சளுக்கு அடுத்து நவதானியம் எழுதப் பட்டிருக்கும். பூசைக் கிரியை களில், சுபகாரியங்களில் நவ தானியம் முக்கிய இடம் பெறுகிறது. நெல், உழுந்து, கொள்ளு, பயறு, துவரை, கடலை, மொச்சை, கோதுமை, எள் என்பன நவதானியங் களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரக தோஷம் நீங்குவதற்கு அடியார்கள் நவதானியம் வைத்து நவக்கிரக வழிபாடு செய்வர். நவதானியத்தை நவரத்தினத்திற்கு ஒப்பானதாகக் கூறுவர். நவக்கிரக வழிபாட்டில் ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு தானியமுண்டு.

| கிரகம் | தானியம் | வழிபாட்டுக்குரிய நாள் |
|---|---|---|
| சூரியன் | கோதுமை | ஞாயிறு |
| சந்திரன் | பச்சையரிசி | திங்கள் |
| செவ்வாய் | துவரை | செவ்வாய் |
| புதன் | பச்சைப்பயறு | புதன் |
| குரு | கடலை | வியாழன் |
| சுக்கிரன் | மொச்சை | வெள்ளி |
| சனி | எள் | சனி |
| ராகு | உழுந்து | செவ்வாய் |
| கேது | கொள்ளு | சனி |

கிரியைகள் ஆரம்பமாவதற்கு முதல் நவதானியம் முளைக்கவிடுதல் இடம்பெறும். இதனைப் 'பாலிகை இடுதல்' என்பர். மண்ணை மந்திர சகிதமாகப் பெற்று அதில் நவதானியத்தை இட்டு முளைக்கவிடுவர். இது அங்குரார்ப்பணம் எனப்படும். நவதானியம் செழித்து வளர்ந்தால் நாட்டிலே செல்வம் விருத்தியாகும். நவதானியத்தை முளைக்க வைப்பதற்கு முன் தண்ணீரில் ஊறவைத்தல் வேண்டும்.

ஆலய உற்சவங்களில் முளைவந்த பாலிகை கொண்ட சட்டிகளை உற்சவமூர்த்திகளுக்கு முன்னால் வரிசையாகப் பெண்கள் தலையில் தாங்கிச் செல்வது வழக்கம்.

வீடுகளில் திருமண வைபவம் இடம் பெறுமாயின் பந்தல் அமைப்பதற்கான மூகூர்த்தக்கால் நடுதல் முதலில் இடம்பெறும். முள் முருங்கைக் கிளையினை நாட்டி அதற்குப் பூசை வழிபாடு செய்து சுமங்கலிப் பெண்கள் பாலிகை இடுவர். திருமண நிகழ்வின்போதும் சுமங்கலிப் பெண்கள் பாலிகை இடுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் உண்டு. முளைக்கவிட்ட நவதானியத்தை திருமணக் கிரியையில் காட்சிப் பொருளாக வைப்பர். பாலிகை புனிதப் பொருள் ஆகையால் அவற்றைக் காலில் மிதிபடாவண்ணம் நீர் நிலைகளில் சேர்த்தல் வேண்டும்.

நவராத்திரி விரதம் ஆரம்பமாகும் தினத்தன்று ஆலயங்களிலும் வீடுகளிலும் கும்பம்வைத்து சட்டியில் நவதானியம் முளைக்கவிடுதல் வழக்கமாகும். விஜயதசமியன்று முளைத்த நவதானியத்தைப் பிரசாதமாக வழங்குவர். இதனை மாணவர்கள் புத்தகங்களிலும் ஏனையோர் பணப்பெட்டியிலும் வைப்பர்.

கிரியைகளில் கும்பங்கள் வைக்கும் பொழுது அவற்றின் அடியில் இந்த ஒன்பது வகையான தானியங்களும் இடம்பெறும்.

நவதானியத்தை கிரியைக்கோ அன்றி சுபகாரியங்களுக்கோ பாவிக்கும் பொழுது அவித்தல், வறுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு உள்ளாகாத நிலையில் பச்சையாகவே பாவிக்கப்படல் வேண்டும். இறைவனுக்கு நிவேதனமாக அளிக்கு மிடத்து அவை பாகம் பண்ணப்படல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்

- திருஞானசம்பந்தர்

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. நெற்பொரி



நெல் பொரியாக மலர்வது போன்று வாழ்க்கையும் வளத்துடன் மலர்ந்து இருக்க வேண்டும் என்பதனைக் குறிக்கவே கிரியைகளிலும் சடங்குகளிலும் இது பயன் படுத்தப் படுகிறது.

திருமணத்தில் திருமாங்கல்யம் கட்டப்பட்டதும் மணமக்கள் தோழன் தோழி சகிதமாக அக்கினியை மூன்று தடவை வலம் வருவர். ஒவ்வொரு முறையும் தோழன் மணமகளின் கையில் நெற்பொரியினைக் கொடுப்பான். அதில் சிறிது நெய்யும் விடப்படும். மணமகள். கணவன் நீண்டநாள் ஆரோக்கிய வாழ்வு வாழவேண்டும் என வேண்டி அக்கினியில் பொரிகளை இடுவாள்.

மகாபலி என்பவன் இறைவனுக்கு தீபம் ஏற்றும் தொண்டினை ஆற்றி வந்தான். இறைவன் மகாபலிக்கு சோதிவடிவத்தினைக் காட்டியருளினார். இச்சோதி வடிவத்தினைத் தரிசிக்கத் தேவர்களும் வந்தனர். சோதிவடிவத்தின் வெம்மை தாழாமல் நெற்பொரியும் அவலும் நிவேதனமாகப் படைத்தனர். அது முதலே திருக்கார்த்திகைத் தினத்தில் நெற்பொரியும் அவலும் நிவேதனம் செய்யும் வழக்கம் உண்டாயிற்று.

திருக்கார்த்திகை விளக்கீட்டின் பொழுது நெற்பொரியினை சர்க்கரைப் பாகில் கலந்து தேங்காய்ச் சொட்டினை சிறிய துண்டுகளாக நெய்யில் பொரித்து அதனையும் பாகினுள் இட்டு நிவேதனம் பண்ணி எல்லோருக்கும் பிரசாதமாக வழங்குவார்கள்.

அக்கினி காரியங்களில் அக்கினி பகவானுக்கு நிவேதனமாகச் சமர்ப்பிக்கப்படுவது நெய், நெற்பொரி அவி (உப்பில்லாத சாதம்) என்பனவாம். இவற்றை அக்கினியில் இடுதல் ஆகுதி எனப்படும். இதனால் எம்மால் இயற்றப்பட்ட வினைகள் தொடராமல் அக்கினி பகவானால் அகற்றப்படும்.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. தர்ப்பை



தர்ப்பை வருண பகவானைக் குறிப்பதாகும். வருண பகவான் இடது கண்ணைச் சந்திரனின் ஒளியாகவும் வலது கண்ணைச் சூரியனாகவும் கொண் டுள்ளான். பாவகாரியங்களைச் செய்யு மிடத்து அவர்களைச் சூரியனின் சுடரைப் போன்று எரித்து விடுவான். இடது கண்ணான சந்திரனின் ஒளியினால் அடியார்கட்கு அருள்புரிவான்.

'எனது வழிபாட்டின் மூலம்
வருணனை அடைவானே?'

என்று வருணனை நோக்கி வழிபடுவோனின் பக்தி நிலையினை வேத சுலோகத்தில் காணலாம்.

கிரியைகள், சடங்குகள் யாவற்றிலும் மிகவும் முக்கியமான மங்கலப் பொருட்களில் ஒன்று தர்ப்பையாகும். சுந்தரர் இறைவனைத் தோழமை உறவு கொண்டு வழிபட்டமைபோன்று இருக்கு வேதகால மக்கள் வருணனை பயம் கலந்த தோழமை உணர்வுடன் வழிபட்டனர். வருணன்தான் ஒழுக்கத்தின் தெய்வமாக, அறக்கடவுளாகப் போற்றப்படுபவன். வருணபகவான் நல்லவனுக்கு நல்லவன் ஆகவும் தீயவனுக்குத் தீயவனாகவும் உள்ளான். அவனது வெறுப்புக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகப் பக்தியுடன் வருணனை வழிபட்டனர். வருணபகவான் ரிதக்கடவுளராகப் போற்றப்படுபவர். தெய்வதிற்கு செய்ய வேண்டிய கிரியைகளை செய்யாது விடில் ஏதாவது குறை ஏற்பட்டு விடுமெனத் தவறாது உரிய கிரியைகளைச் செய்து முடித்து விடுவர். தெய்வ சமாசாரம் அதனைத் தவறாது செய்தல் வேண்டுமென்பர்.

எந்தச் சடங்கு கிரியை செய்யுமிடத்தும் கிரியை செய்பவர், தர்ப்பையை அணிந்து கொள்வர். இது பவித்திரதாரணம் அல்லது தர்ப்பை அணிதல் எனப்படும். கிரியைகளைச் செய்யும் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம், மொழி, காயம் மூன்றினாலும் குறைகள் எதுவும் நேராமல் இருப்பதற்காகத் தர்ப்பையிலான பவித்திரம் மோதிரவிரலில் அணியப்படும்.

அடுத்துக் கிரியை செய்பவர் இன்ன காலத்தில், இன்ன இடத்தில், இன்ன நோக்கத்திற்காக இக்கருமத்தைச் செய்யப் போகிறேன் என குலதெய்வத்தை. வணங்கியபின் வலது முழந்தாள் மீது இடது கையை வைத்து அதன் மேல் தர்ப்பை, அரிசி, பூ கொண்ட வலது கையை மூடி வைத்து தியானித்தல் வேண்டும். இதனை சங்கல்பம் என்று கூறுவர். தர்ப்பை காலின் அடியிலும் ஆசனமாக வைக்கப்படும். இங்கு தர்ப்பையானது சாட்சிப் பொருளாகிறது.

அக்கினி காரியங்கள் நடத்துமிடத்து தர்ப்பை ஓமகுண்டத்தின் நான்கு திசைகளிலும் வைக்கப்படும். அத்துடன் வைக்கப்படும் கும்பங்களின்மீது கூர்ச்சமாக தர்ப்பையையே சாத்துவர். கிரியைகள் ஆற்றும் ஆச்சாரியார் கூர்ச்சத்தினாலே மங்கலப் பொருள்களைத் தொட்டு மந்திர பாராயணம் செய்வர். அபிடேகத்தின் போது பூரணகும்பத்தைத் தூக்குமிடத்து ஆச்சாரியார் மந்திர பாராயணத்துடன் தர்ப்பையினால் கும்பத்தைத் தொட்டபடியே மந்திரங்களைச் சொல்வார். எந்தக் கிரியைகளின் பொழுதும் முதலில் திருவுருவத்தின் மேல் தர்ப்பையிலான கூர்ச்சந்தான் வைக்கப்பட்டு அதன் பிற்பாடு பூமாலை சாத்தி அபிடேகம் இடம்பெறும்.

தாய், தந்தையர் ஆன்ம ஈடேற்றம் பெற்றபிறகு பிள்ளைகளால் செய்யப்படுவது சிரார்த்தம், தர்ப்பணம் ஆகும். இதனை 'பிதிர் தர்ப்பணம்' என அழைப்பர். சிரார்த்த தினத்தன்று தர்ப்பையைக் குறுக்காகப்பிடித்து அதில் தர்ப்பை மூலத்திலிருந்து எள் கலந்த நீரைச் சுட்டுவிரல் மூலம் பெய்யப்படும். பின்பு தர்ப்பை எள்ளுடன் தீர்த்தத்தில் போடப்படும். எனவே மங்கல காரியங்கள், கிரியைகள் மற்றும் அபரக்கிரியைகள் ஆகியவற்றிற்குத் தர்ப்பை முக்கியமான பொருளாகிறது.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. அட்சதை



சுபகாரியங்களில் முடிவில் நிறைவாக இடம் பெறுவது வாழ்த்துதல் - ஆசிர்வதித்தல் ஆகும். இது குருவினாலும் பெரியோர் களாலும் நிகழ்த்தப் படுவது. ஆசீர்வாதம் செய்யும் போது அட்சதையிடுதல் மரபாகும்.

திருமண வைபவத்தில் பூரணாகுதியின் பின்னர் அறுகரிசியிட்டு மணமக்களை வாழ்த்துவர். மணமக்கள் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டுமென வாழ்த்தப்படுவர். இங்கு வாழ்த்துதலின் போது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் மணமக்களுக்கு இடப்படும் அறுகரிசியானது மங்கலப் பொருட் களான அறுகு, அட்சதை, மலர் இவை மூன்றும் சேர்ந்தவையாகும்.

அட்சதையானது முனை உடையாத பச்சை அரிசியுடன் மஞ்சள், நீரினைக் கலந்து பெறப் படுவதாகும்.

ஆதிகாலத்தில் நிறைவு, மகிழ்வு, வெற்றி குறித்து அறுகு மட்டும் இட்டு வாழ்த்தும் வழக்கம் இருந்து வந்தது என்பதனைப் பின்வரும் பாடல்களில் காணலாம்.

'திங்கட்குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்,
மங்கைக் கறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே'

(ஔவையார் பாரிமகளிர் திருமணத்தின் போது பாடியது)

'ஆரணங்கள் விரித்தோதி மாமறையோர் எதிர்கொண்டு
அறுகெடுப்ப வாழ்த்தெடுத்தர் அரம்பையர் களெல்லாம்'

(சேக்கிழார் சிதம்பரத்தில் பெரியபுராணம் பாடியபின் யானை மீது அமர்ந்து வீதியுலாவரும் பொழுது அவரை வாழ்த்தியதாக பெரியபுராண வரலாறு)

'அறைகழல் அரசர் அடிமிசை அறுகெடுத்திட மறையவர் முடி எடுத்தனர் மனுநெறி தலையெடுக்கவே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(குலோத்துங்கனின் திருவடியில் சிற்றரசர்கள் அறுகிட்டு வணங்கினர் என்று கலிங்கத்துப் பரணியில் வருகிறது)

இங்ஙனமாக அறுகெடுத்த வாழ்த்துதல் இடம்பெற்ற தாயினும் சிலப்பதிகாரத்தில் அறுகு, பூ, நெல் இவைகொண்டு வாழ்த்துதல் இடம்பெற்றுள்ளது.

'அறுகு சிறுபூளை நெல்லோடு தூர்ய்ச்சென்று பெறுக கணவனோடு என்றான்'

சிலப்பதிகாரம் - கனாத்திறன் 43- 44

அறுகிட்டு வாழ்த்துதல் என்ற மரபு காலப்போக்கில் நெல் இட்டு வாழ்த்துதல் ஆகியது. தற்போது நெல் அரிசியாகி அட்சதை இடுதல் என மாறியிருக்கிறது. அறுகும். மலரும், அட்சதையும் கலந்து வாழ்த்துதல் 'அட்சதையிடுதல்' என்று உலக வழக்கில் வழங்கக் காண்கின்றோம்.

வாழ்த்துதலின் பொழுது வாழ்த்தப்படுபவரின் தலைப் பகுதியிலிருந்து ஆரம்பித்து அறுகரிசி இடவேண்டும். காலிருந்து ஆரம்பிப்பது தவறானதாகும்.

பெரியோர்களிடம் ஆசீர்வாதம் பெறும் பொழுது முதலில் அவர்களை வணங்கியபின்பே ஆசிபெறவேண்டும். ஆலயங்களில் கிரியைகள், ஆராதனைகள் நிறைவின் பொழுது ஆச்சாரியார்கள் யாவரும் சேர்ந்து அட்சதை இட்டு வாழ்த்துவர். பூசையிலே குறைபாடுகள் இடம் பெற்றிருந்தால் அவை நீங்க வேண்டும் எனவும், ஆலய அறங்காவலர், பணியாளர், நாட்டுமக்கள், உலகத்தவர் யாபேரும் நல்வாழ்வு பெற வேண்டுமெனவும் வாழ்த்துவர்.

'சர்வேஜனா சுகினோ பவந்து'

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

எல்லாக் கிரியைகளின் பொழுதும் சாந்தி எனச் சொல்லும் வழக்கம் உளது.

உயிர்கள் யாபேருக்கும் மூவகையான துன்பங்கள் ஏற்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆத்யாத்மிகம் :

உடம்பின் நோய்கள் - கவலைகள்

2. ஆதிபௌதிகம் :

ஏனைய உயிர்களால் வரும் துயர்கள்.

3. ஆதிதெய்வீகம் :

பஞ்சபூதங்களால் வரும் துன்பங்கள்.

இவற்றிலிருந்து யாபேரையும் காப்பாற்றி அருள் புரிய வேண்டும் என்பதற்காகவே 'சாந்தி' சொல்லப்படுகிறது.

ஆசீர்வாதம் செய்யுமிடத்து பெரியோர் பதினாறு பேறும் பெற்று வளமுடன் வாழவேண்டு மென வாழ்த்துவர் அபிராமிபட்டார் அம்பாள் மீது பாடியுள்ள ஒரு பாடலில் பதினாறு பேறுகள் எவையெவையெனக் குறிப்பிட்டுள்ளார்.

'சகல செல்வங்களும் தரும் இமயகிரிராஜ
தனயை மாதேவி! நின்னைச்
சத்யமாய் நித்ய முள்ளத்தில் துதிக்கும் உத்
தமருக்கி ரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை, கல்வி தன தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள்
ஆகுநல்லூழ் நுகர்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும் தந்தருளி நீ
சுகானந்த வாழ்வளிப்பாய்'

மேற் கூறப்பெற்ற பதினாறு பேறுகளையும் அனுபவிக்கும் வாய்ப்பை நுகர்ச்சி என்பர். இதனை வள்ளுவரும்,

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்கின்றார்.

அத்தகைய துய்க்கும் நுகர்ச்சியை அபிராமியே நல்குவாள். அபிராமியின் சிறப்புக்களைப் பாடலின் நிறைவுப் பகுதியில் உரைக்கிறார் அபிராமிபட்டர். இப்பாடலைப் படிப்பதன் மூலம் எல்லாப் பேறுகளையும் பெறலாம்.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. அறுகு



'உயிர்கள் உடலை விட்டுப் பிரிந்ததும், தாம் ஆற்றிய வினைகளுக்கேற்ப உடலை அடையும் பொருட்டு முதலில் புல்நுனியைப் பொருந்தி பசு வயிற்றில் புகுந்து சாணத்தின் வழியாகப் பயிர்களோடு பரவி, புருஷ கல்ப்பத்தில் தங்கும்' என்பது உபநிடத வாக்கியமாகும். அதன்படி உயிர்கள் புல்நுனியில் தங்குவதே முதற்படியாதலால், இறைவன் படைப்பின் முதற் படைப்பாகிய விநாயகப் பெருமானுக்கு அறுகம்புல் அர்ச்சனைக்கு உகந்ததாகிறது.

பிள்ளையார் வழிபாடுசெய்த பின்னரே சுபகாரியங்கள், கிரியைகள், ஆலய பூசை வழிபாடுகள் இடம்பெறும். சாணத்தில் அல்லது மஞ்சளில் பிள்ளையார் பிடித்து உச்சியில் சூட்டப்படுவது அறுகம்புல்லாகும். அறுகு இல்லாமல் பிள்ளையாருக்கு எந்தக் காரியங்களும் இடம்பெறமாட்டாது. எத்தனை வகையான சுகந்தம் தரும் மலர்கள் இருந்த போதிலும் பிள்ளையார் விரும்புவது அறுகம் புல்லையே.

அகரம் எப்படி எழுத்துக்களுக்கு முதலாவதாகத் திகழ்கிறதோ, அதேபோல் உலகில் முதன் முதலில் தோன்றியது அறுகம்புல் ஆகும். ஞான ஒளியினையுடைய விநாயகருக்குத் தொன்மையாகத் தோன்றிய அறுகம்புல் உகந்ததாயிற்று.

அறுகு ஓரிடத்தில் முளைத்து ஆறு இடங்களில் வேர் ஊன்றிப் படர்ந்து கொண்டே போகும் தன்மையை உடையது. அதுபோன்று எம்முடைய பரம்பரையும் வளர்ந்து செழிக்க வேண்டுமென்பதற்காக திருமணத் தம்பதியினரை வாழ்த்துமிடத்து அட்சதையுடன் அறுகும், மலரும், சேர்த்து வாழ்த்துவர்.

பிள்ளையார் எளிமையான தோற்றத்தில் அபாரமான சக்தியைத் தம்முள் அடக்கி நம்மைக் காப்பவர். குண்டிலினி சக்திக்குரியவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும் பெருமானுக்கு அதே குணம் கொண்ட அறுகம்புல்லைச் சமர்பிப்பது சிறந்ததாகும்.

நான் எனது என்ற அகங்காரம் இல்லாமல் இருக்க வேண்டும். பக்தியிலும் ஞானத்திலும் மிகவும் முக்கியமானது அன்பும் பணிவுந்தான். இதை அடியார்களுக்கு உணர்த்தவே விநாயகப்பெருமான் எளிய அறுகம்புல்லை விரும்பி ஏற்கிறார்.

விநாயகருக்கு அர்ப்பணம் செய்யும் அறுகம்புல் ஒரே காம்பில் மூன்று முனைகளை உடையதாக இருக்க வேண்டும். அந்த மூன்று முனைகளும் ஊசி முனை போன்று இருக்கும். அடியில் ஒன்றாகச் சேர்ந்திருக்கும். வாழ்வில் வெற்றி பெற விரும்புவர்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் கூர்மைப்படுத்தி ஒருங்கிணைத்து தூய்மையான எண்ணத்தைப் பெறவேண்டும் என்ற தத்துவத்தினை அறுகம்புல் எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

அறுகம்புல்லை ஊறவைத்து அதன் நீரைக் குடித்து வந்தால் உடல் ஆரோக்கியமும் சிந்தனா சக்தியும் அதிகரிக்கும். புல் என்ற வகையில் அறுகு கிரியைகள், மங்கல காரியங்களில் முக்கியமான இடத்தினை வகிக்கின்றதெனலாம்.

✦✦✦

## 30. துளசி



துளசி விஷ்ணு பகவானுக்கு அர்ச்சிக்கப் படும் பத்திரமாகும். விஷ்ணு குளிர்ச்சி பொருந்தியவர். கையில் வெண்ணெய்யை வைத்துள்ளார். விஷ்ணு ஆலயங்களில் பிரசாதமாகத் தீர்த்தத்துடன் துளசியை வழங்குவார்கள்.

துளசி இலையின் நுனியில் பிரமனும், மத்தியில் மகாவிஷ்ணுவும், அடியில் சிவபெருமானும் மற்றும் பன்னிரெண்டு ஆதித்தியர்களும் பதினொரு உருத்திரர் களும், எட்டு வசுக்களும், இரு அசுவினித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களும் வசிப்பதாகப் பாகவதம் கூறுகிறது. துளசி கலந்த நீரினால் செய்யப்படும் அபிஷேகம் கங்கை நீருக்கு ஒப்பானது.

வீட்டு முற்றத்தில் துளசிச்செடியை துளசி மாடத்திலோ அல்லது சட்டியில் இட்டோ வளர்க்க வேண்டும். பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாக வாழத் துளசிப் பூசை முக்கியமானது. துளசி மாடம் வைத்து விளக்கேற்றி காலை மாலை துளசி மாடத்தை வலம்வந்து வணங்குதல் வேண்டும். துளசி மாடத்தில் உள்ள துளசித் தேவியை வழிபாடு செய்வதற்கு வேறு துளசிச் செடியிலிருந்துதான் இலைகளைப் பறிக்க வேண்டும். செவ்வாய், வெள்ளி, மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, துவாதசி, மாலை, இரவு, காலங்களில் துளசியைப் பறித்தலாகாது.

பிரமதேவன் சரஸ்வதிதேவிக்கு துளசிதேவி விரதத்தை உபதேசித்தார். 'இது மத்தனதுவாதசி' விரதமெனவும் வழங்கப் பெறும். மகாவிஷ்ணுவிற்கு மிகவும் பிரியமானது துளசி என்பதனால் விஷ்ணுவிற்கு துளசித்தாமன் என ஒரு நாமமுண்டு. துளசி விஷ்ணுவிற்கு மட்டும் உரித்தானது அல்ல. விநாயகரைத் தவிர எல்லாத் தெய்வங்களையும் துளசியினால் பூசிக்கலாம். ஐப்பசி மாத வளர்பிறை ஏகாதசியிலிருந்து கார்த்திகை மாத வளர்பிறை ஏகாதசி வரையிலான ஒரு மாத காலத்திற்கு இவ்விரதம் அநுட்டிக்கப்படுகிறது. விரதம் தொடங்கிய நாளாகிய ஏகாதசியிலும் விரதம் முடியும் நாளாகிய ஏகாதசியிலும் உபவாசம் இருத்தல் வேண்டும். ஏனைய நாட்களில் பகலில் அன்னம் இரவில் பால்பழம் அல்லது ஏதாவது பலகாரம் சாப்பிடலாம். இவ்விரதத்தை கன்னிப் பெண்கள், சுமங்கலிகள் அநுட்டிப்பதனால் சகல செல்வங்களையும் பெறுவர். புத்திரபாக்கியத்திற்காகவும் துளசி விரதம் நோற்பர்.

விரதம் அநுட்டித்தால் அந்தப் பாரணையை உரியகாலத்தில் செய்ய முடியாதவர்கள் சிறிது நீரில் துளசியை ஊறவைத்து இறைவனுக்கு நிவேதனம் செய்த பின்பு அருந்தினால் பாரணை செய்தபலன் கிட்டும். அத்தகைய பெருமையும் தெய்வீகமும் பொருந்தியது துளசி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதகாலத்தில் துளசி மாடத்திற்கு விளக்கேற்றி வெற்றிலை, பாக்கு, பழம், பிரசாதம் நிவேதனமாக வைத்து தூபதீப ஆராதனை செய்தல் வேண்டும். பின்பு துளசிப் பாடலைப் பாராயணம் செய்யலாம். விரத நாளின் இறுதியன்று அரிசிமாவில் சர்க்கரைப் பாகும் சேர்த்து (அதிரசம்) நிவேதனமாக வைத்து விசேஷ பூசை வழிபாடுகள் செய்ய வேண்டும். ஐந்து வருடங்கள் இந்த விரதத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் உரிய விரதபலனைப் பெறலாம்.

துளசி இருமல், சளிக்கு ஒரு மருந்தாகும். அதன் நறுமணம் புழு பூச்சிகளை விரட்டும், விஷங்களை முறிக்கும். கண்ணேறுகளை நீக்கும்.

துளசி தொடர்பான கதையொன்று பாகவதத்தில் உள்ளது.

தர்மதவஜனுடைய மனைவி மாதவி கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று வெள்ளிக்கிழமையில் மகாலட்சுமியின் அம்சத்துடன் பெண்குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். அவளுக்கு துளசி என நாமம் இட்டனர். துளசி தனக்கு ஸ்ரீமத் நாராயணனே கணவனாக வரவேண்டுமென கடுந்தவம் பூண்டாள். பெற்றோர் ஸ்ரீமத் நாராயணனுடைய அம்சமாக அவதரித்த சங்கசூடன் என்பவனுக்குத் துளசியைத் திருமணம் செய்து வைத்தனர். துளசி சங்கசூடன் திருமண வாழ்வின் குறுகிய காலத்திலேயே சங்கசூடன் ஆன்ம ஈடேற்றம் பெற்றான். இதற்குப் பிற்பாடு துளசி இல்லற நிலையிலிருந்து நீங்கி சதா நாராயணனின் நாம சங்கீர்த்தனம் செய்தாள். இதனால் ஸ்ரீமத் நாராயணின் அருள் துளசிக்குக் கிடைத்தது. துளசியின் உடல் புகழ் பெற்ற கண்டகி என்ற நதியாகவும் துளசியின் கேசம் துளசி எனப்படும் புண்ணிய செடியாகவும் மாறியது. துளசிச் செடியின் கொம்பிலிருந்து தயாரிக்கப்படும். மணிகளை மாலையாகக் கோர்த்து விஷ்ணு பக்தர்களும் ஐயப்ப பக்தர்களும் கழுத்தில் அணிவர்.

துளசிச் செடியில் பலவகை உண்டு. இவற்றுள் கருந்துளசி, வெண்துளசி என்பவை முக்கியமானவை. மகாவிஷ்ணுவிற்குரிய கருந்துளசி விஷ்ணு துளசி என்றும், சிவனுக்குரிய வெண்துளசியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிவதுளசி என்றும் சொல்வர். இதனை மகாலட்சுமி துளசியெனவும் வழங்குவர்.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா ! அமரர் ஏறே ! ஆயர்தம்
கொழுந்தே ! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே.

பிரபந்தம் - திருமங்கையாழ்வார் -

✦✦✦

## 31. மாவிலை



சுபகாரியங்கள் நிகழுமிடத்தும், விசேட தினங்களிலும் இல்லங்களின் வாசலில் மாவிலை வரிசையாகக் கட்டப் படுவது மரபாகும். இல்லங்களில் மாவிலை தொங்குவதைப் பார்த்தவுடன் ஏதோ விசேட கிரியைகள் சடங்குகள் இடம்பெறுகின்றன என்பதனைத் தெரிந்து கொள்ளலாம்.

நிறைகுடத்தை அலங்கரிப்பதும் கிரியைகளுக்கான கும்பத்தில் வைக்கப்படுவதும் மாவிலைதான். மாவிலை இறைவனின் சடையினைக் குறிப்பதாகும். அதனால் ஆலயக் கிரியைகளின் பொழுது தனித்தனியாக மாவிலைகளை வைக்காமல் மாவிலைக் கொத்தை வைப்பது வழக்கமாகும். எந்த விசேட கிரியைகளோ, சுபகருமங்களோ இடம் பெறுவதற்கு முன்பு அக்கிரியை செய்யும் இடத்தைச் சுத்திகரிக்கும் முகமாகப் புண்ணியாகம் என்ற கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இடம்பெறும். கிரியை முடிந்ததும் கும்பநீரை மாவிலையினால் எல்லா இடங்களுக்கும் தெளிப்பர். மாவிலையிலிருக்கும் காம்பில் உள்ள பால் தன்மையானது காற்றில் கலந்து நாம் சுவாசிக்கும் பொழுது ஒரு கிருமிநாசினியாகச் செயற்பட்டு தொற்றுநோய் பரவாமல் தடுக்கிறது. இல்லங்களில் துன்பகரமான நிகழ்வு ஏற்பட்டால் வீட்டைக் கழுவுதலுடன் மஞ்சள் நீரை மாவிலையினால் தெளிக்கும் வழக்கமுள்ளது.

நோய்கிருமிகளை அழித்து தூய்மையான காற்றைச் சுவாசிக்க மாவிலை உதவுகிறது. இதன் காரணமாகத்தான் ஆலய உற்சவங்களின்பொழுது பெருந்தொகையான மாவிலை தொங்கவிடப்படும். சுபகாரியங்களுக்கு மாவிலையின் உட்புறம் வெளியே தெரியும்படி ஒற்றைப்படத் தொங்கவிட வேண்டும். அபரக் கிரியைகளின் போது மாவிலையின் வெளிப்புறம் வெளியே தெரியும்படி இருத்தல் வேண்டும். இல்லங்களில் மாவிலை தொங்குவதைப் பார்த்ததும் இந்துக்களின் இல்லமென அறியமுடிகிறது.

மாவிலை, இல்லங்களின் வாசிலில் தொங்கவிடப்படுவதனால் வீட்டிற்கு வருபவர்களுக்கு தெய்வீகச் சூழலையும், ஆன்மீக உணர்வையும் ஏற்படுத்துகிறது.

✦✦✦

## 32. தோரணம்



ஆலயத்தில் நிகழும் விழாக்கள், இல்லங்களில் இடம்பெறும் மங்கல காரியங்கள் ஆகியவற்றில் மாவிலை, தோரணம் என்பன தொங்கவிடப்படல் இந்து சமய மரபாகும். மாவிலை தொங்க விடப்பட்டு இடையே குருவி அமைப்பில் தோரணங்கள் தொங்க விடப்பட்டிருக்கும், மங்கல காரியங்களுக்கான தோரணங்களின் குருவி இழைகள் பூமியை நோக்கியவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கவிடப்பட வேண்டும். பூமியில் உள்ளவர்களுக்கான சடங்குகள் சம்பிரதாயங்களான மங்கல காரியங்கள் நிகழ்கின்றதை இது குறிப்பதாகும். அமங்கலக் கிரியைகள் நிகழுமிடத்து தோரணத்தின் குருவி இழை வானத்தை நோக்கிய வண்ணமாக அமைந்திருக்கும். ஆன்ம ஈடேற்றம் பெற்றவர்களுக்கான கிரியைகள் நிகழ்கின்றன என்பதனை இது குறிக்கும். எனவே மாவிலை தோரணம் என்பவை என்னவகையான கிரியைகள், சடங்குகள் நடைபெறுகின்றன என்பதனை எடுத்துக் காட்டுவதாகும்.

தோரணத்தில் கண்ணாடித் தோரணம், குருவித் தோரணம், கொத்துத் தோரணம் எனப் பலவகையுண்டு. சிலர் அழகான கிளித்தோரணம் இழைத்துத் தொங்க விடுவர்.

தென்னையின் பாளையினையும் சுபகாரியங்களின் போது கட்டுவது வழக்கமாகும். பாளை எங்ஙனம் விரிந்து செழிப்பாகக் காணப்படுகின்றதோ அதேபோன்று எமது வாழ்வும் வளமுடன் இருக்க வேண்டும் என்பதனை இது காட்டுவதாகும்.

பௌத்தர்கள் தமது திருமண வைபவங்களில் தென்னையின் பச்சை ஓலையினால் அழகான முறையில் பந்தல் இழைத்து வீட்டு வாயிலில் கட்டுவார்கள். அதே போன்று பொது வைபவங்களிலும் தென்னை ஓலையினால் பின்னப்பட்ட அலங்காரங்களில் எழில்மிகு வடிவங்களை அமைப்பர். அது கவர்ச்சியாகவும் எழில் பொருந்தியதாகவும் காணப்படும்.

தோரணம் இழைக்கப்படும் குருத்து ஓலைகளை ஆலயத்தில் இடம்பெறும் விசேட கிரியைகள், விழாக்களின் பொழுது கட்டும் வழக்கமும் உண்டு. இவையாவும் இறைவன் இயற்கையுடன் உறைந்துள்ளான் என்பதனை எடுத்துக் காட்டுவனவாகும்.

✦✦✦

## 33. கோலம்

இந்து சமயிகள் இல்லற நிலையில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து தர்மசாத்திரங்களில் விதித்துள்ள கடமைகளைத் தவறாது செய்தல் முக்கியம். இல்லறத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேண்டிய தர்ம நெறிகளில் ஐந்து வகையான வேள்விகளை ஆற்றுதல் வேண்டும். இவை தேவ யக்ஞும் - தேவர்களைப் பூசித்தல், ரிஷியக்ஞும் - வேதங்களை, திரு முறைகளைக் கற்றல், பித்ருயக்ஞும் - பெற்றோருக்குரிய கடமைகள் செய்தல், பூதயக்ஞும் - பிற உயிரி னங்களுக்கு உணவளித்தல்,



அதிதியக்ஞும் - விருந்தோம்பல், ஆகும். இதில் பூதயக்ஞும் என்பது பசு, காகம், நாய், எறும்பு போன்ற சிற்றுயிர்களுக்கு உணவு அளிப்பதாகும். இதன் பொருட்டே இல்லங்களில் கோலம் போடப்படுகிறது.

கோலம் என்பதன் பொருள் அலங்கரித்தல் ஆகும்.

காலையில் வாயிலில் சாணம் அல்லது மஞ்சள் நீர் தெளித்து கோலம் போடவேண்டும். முதலில் வீட்டிலுள்ள சுவாமி அறையின் தீபத்தினை ஏற்றிய பின்னரே கோலம் போடுதல் வேண்டும். காலையில் சாணத்தினால் அடுப்பை மெழுகி அதில் கோலம் போட்டபின்னரே அடுப்பைப் பற்ற வைப்பர். கோலத்திற்கு உரியது அரிசி மாவாகும். வீட்டிலுள்ளோர் வெளியே செல்வதற்கு முன்பாகவே கோலம் போடுதல் வேண்டும்.

கோலம் பலவகையான யந்திர உருவ அமைப்புகளுடன் போடப்படுவதுண்டு. இது யந்திர வடிவத்தில் பல தேவ மந்திர எழுத்துக்கள் உள்ளதாய், எண்கோண அறுகோண முக்கோண வடிவில் இடப்படுவதாகும். இங்ஙனம் யந்திர வடிவத்தில் வாசலில் கோலம் போடுவதனால் வீட்டிற்குள் எவ்விதமான தீயசக்திகளும் வரமாட்டாது. அத்தோடு இவ் அமைப்பையுடைய கோலங்கள் போடப்படுவதனால் பிதிரர் அஞ்சி வீட்டிற்குள் வரமாட்டார்கள் என்பது ஐதீகம். அதனாலேதான் பிதிர் காரியங்கள் செய்யுமிடத்து வாசலில் எவ்விதமான கோலமும் போடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர்காரியங்களைச் செய்யும் பொழுது பிதிரர் வீட்டிற்கு வந்து நாம் செய்யும் கிரியை ஆராதனைகளை ஏற்று ஆசீர்வதிப்பர். தீய அசுரர்கள், தீய சக்திகள் வீட்டிற்குள் வராமல் தடுப்பதற்காகவே வீட்டு வாயிலில் கோலம் போடப்படுகிறது.

சுபகாரியங்களுக்கு இரட்டைக் கோடு கொண்ட இழைகளாலான கோலம் போடுதல் முக்கியம். புள்ளிகள் வைத்து கோலம் போடும் பொழுது நினைவாற்றல் அதிகரிக்கப்படுவதோடு கற்பனை வளமும் ஏற்படும். அத்துடன் பொறுமையைக் கடைப்பிடிக்கவும் வழிகோலுகிறது. வாசலைச் சுத்தம் செய்து கோலம் இடுதல் மூலம் மகாலட்சுமி வாசம் செய்வாள். மேலும் கோல மாவினை எறும்பு போன்ற சிற்றுயிர்கள் சாப்பிடுவதன் மூலம் நாம் உயிர்களுக்கு ஆற்றவேண்டிய தர்மமும் நிறைவேற்றப்படுகிறது.

விசேட அலங்காரத்துடன் கோலம் இடப்பட்டிருந்தால் வீட்டில் சுபகாரியங்கள் இடம் பெறுகின்றன என்பதனை எடுத்துக்காட்டும்.

கோலத்துக்குச் சிறப்பான மாதம் மார்கழி ஆகும். வீட்டு முற்றத்தில் கோலம் போட்டு அதில் சாணம் அல்லது மஞ்சளி னால் பிள்ளையார் பிடித்து பூசனிப்பூவை வைப்பர். இது அவ்வீட்டில் கல்யாணத்திற்கு பெண் உள்ளாள் என்பதனை எடுத்துக்காட்டுவதாகும். இவ்வழக்கம் இன்று இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வீட்டு வாயிலில் வெண்மையான கோலம் இட்டால் லட்சுமி வாசம் செய்வாள். அதில் காவி (செம்மண்) இட்டால் இறைவனையும் இறைவியையும் வீட்டு வாசலில் வைத்து வரவேற்பதை குறிப்பதாகும். இறைவியின் திருமேனி செந்நிறம். அவள் அணியும் பட்டுடையும் செந்நிறம், சிவன் வெண்ணீறு அணிந்த திருமேனி உடையவர். எனவே வெண்மையும் சிகப்பும் கலந்த கோலம் சிவசக்தி வடிவமாகும்.

கோலத்தில் தாமரைப் பூவை வரைவது மகாலட்சுமியை வரவேற்பதாக அமையும். இதனைக் திருமூலர் பின்வரும் பாடல் மூலம் விளக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்த தாமரையைத் தாங்குபவள் சக்தி மூலத்திடம்
தோன்றும்
பெரிய தாமரை மலர் திருவருளாற்றலாகிய அம்மை
வீற்றிருற்தருள வாய்ந்த நறுமலர்
அந்த மலரில் அடியார்கள் செய்யும் பக்திக்குத்
தக்கவாறு திருவருள் பெருகும்.
பெருகிய பின் செந்தழல் மண்டலமாகிய சிவத்தின்
திருவடியைச் சேர்ப்பிக்கும்.

*(திருமந்திரம் 1355)*

கோலம் போடுதல் ஆன்மீக உணர்வு ஏற்பட வழிகோலுகிறது. வீட்டின் முன்புறத்தில் அல்லது சுவாமி அறையில் கோலத்தை போட்டுவரலாம்.

நவராத்திரி விழாக்களில் பாடசாலைகளில் மாக்கோலம், பூக்கோலம் என வகைப்படுத்தி கோலப் போட்டிகளை நடாத்தி மாணவர்களைக் கலை ஆர்வத்தில் ஈடுபடுத்தி வருவதனைக் காணலாம். இக்காலத்தில் இடம்பெறம் வாணிவிழாக்களில் பிரமாண்டமான கோலங்களைப் போடுவார்கள். பொதுவான விழாக்கள் இடம்பெறும் போதும் கோலத்திற்கு முக்கியத்துவம் அளிப்பர்.

வீட்டின் முற்புறத்தில் கோலம் இருக்குமாயின் அது இந்து இல்லம் என அறிந்து கொள்ளலாம்.

வாரத்துக்குரிய அதிதேவதையை மகிழ்விக்கும் வகையில் இன்ன நாளுக்கு இன்ன கோலம் போடப்படவேண்டுமென கோலங்கள் உள. வாரத்தின் ஏழு நாட்களுக்கும் ஒவ்வொரு கோலங்கள் உள்ளன. தினமும் அந்த நாளுக்குரிய கோலத்தைப் போட்டுவந்தால் சகல செல்வங்களும் கிடைக்கப் பெறும். இக்கோலங்களை சுவாமி அறையில் சுவாமி படத்திற்கு முன் ஒரு சிறிய மேடையில், முற்றத்தில் அல்லது துளசி மாடத்தின் முன்பாகவும் போடலாம். வாரக்கோலங்கள் கால் மிதிபடாத இடத்தில் போடுவதுதான் நல்லது.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. ஆரத்தி



சுபகாரியங்கள் நடந்தேறியதன் பிற்பாடு யாவும் நல்ல முறையாக நடத்தி வைத்த இறைவனுக்கு நன்றி கூறி மங்களம் செய்தல் ஆரத்தி எனப்படும். சுமங்கலிப் பெண்கள் தட்டில் ஆரத்தி எடுப்பர்.

மனிதர்களுக்கு எடுக்கும் ஆரத்திக்கும் இறைவனுக்கு எடுக்கும் ஆரத்திக்கும் இடையில் வித்தியாசம் உண்டு. இறைவனுக்கு இடம்பெறும் திருகல்யாணத்தின் பிற்பாடு மங்கல ஆரத்தி எடுக்கப்படும். எம்போன்ற சாதாரண மக்கள் செய்யும் கல்யாணம் போன்றதன்று திருக்கல்யாணம் என்பதனை நாம் உணர்ந்துகொள்ளல் வேண்டும். அருள் வடிவமான இறைவி அறிவு மயமான சிவத்துடன் கலந்து, பிரபஞ்சத்தை இயங்க வைப்பதையே இது குறிப்பதாகும்.

இறைவனுக்கு மஞ்சள், குங்குமம் முதலியவற்றைத் தட்டில் கரைத்து, இரண்டு சிறிய நெய்த்தீபம் ஏற்றி வைத்து ஆரத்தி எடுத்தல் வேண்டும். ஆரத்தி நீரைத் துளசிச் செடியின் அடியில் ஊற்றவேண்டும். காலில் மிதிபட விடக்கூடாது.

மனிதர்களுக்கு ஆரத்தி எடுக்கும்போது ஒரு தட்டில் மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த தண்ணீரால் எடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இது தீயசக்திகளால் எவ்விதமான இடையூறும் நேரக்கூடாது என்பதற்காகவே செய்யப்படும் சடங்காகும். சம்பிரதாயங்களுக்கேற்ப ஆரத்தி எடுக்கும் முறை இடத்துக்கிடம் வேறுபடுகிறது.

## மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்தசக்தி மங்களம் ஸர்வசக்தி மங்களம்
சீதாராம மங்களம் ராதகிருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் மங்களம்!

✦✦✦





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முடிவுரை

சமயம் என்பது அநுபவ ஞானமாகும். தத்துவஞானி தன் அறிவுக்கு ஏற்ப கடவுளை அறிகிறான். சாதாரண மனிதன் உள்ளமுருகி பிரார்த்தனை செய்து வழிபாடு செய்வதன் மூலம் கடவுள் பற்றிய அநுபவத்தைப் பெறுகிறான். அவன் அநுபவத்துடன் கடவுளின் ஞானத்தைப் பெற்றவன். அதனால் தத்துவஞானியைவிட சாதாரண பக்தன் மேலாகிறான். எனவே கடவுளை உணர்வதற்கு தத்துவஞானம்தான் அவசியமென்பதில்லை. இறை நம்பிக்கை, இறைவன் மீது பக்திகொண்டு நினைந்து உருகுகின்ற உள்ளம் அமைந்துவிட்டால் அவன்தான் சிறந்த பக்தனும் யோகியுமாவான்.

இந்து சமயம் வாழ்க்கை வாழ்வதற்கே என்கிறது. நாம் ஒரு நேர்கோட்டை எல்லையில்லாது நீட்டிக்கொண்டே போனால் அது ஒரு வட்டமாக அமைந்துவிடும். நல்ல எண்ணங்களுடன் நல்லதையே நாடிப்போனால் எமது வாழ்க்கை வளமாக மிளிரும். இதுவே இந்துசமயம் நெறிப்படுத்தும் முழுமையாகும். அதனாலேதான் இந்துசமய வழிபாட்டில் திருக்கோயில். திருவுருவ வழிபாடு, கிரியைகள், சடங்குகள், அநுட்டானங்கள் இவையாவும் அடங்கியுள்ளன. இந்நூலில் இவற்றுடன் தொடர்பான மங்கலப் பொருட்கள் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இவை பயன்மிக்கவையாக அமையுமென நம்புகின்றேன்.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸர்வே பவந்து ஸுகின;

ஸர்வே ஸந்து நிராமயா;

ஸர்வே பத்ராணி பச்யந்து

மாகச்சித் துக்கபாக் பவேத்.


எல்லோரும் சுகமாக வாழ்க !

எல்லோரும் நோயின்றி வாழ்க !

எல்லோருக்கும் மங்களம் உண்டாக !

ஒருவரும் துன்புறாதிருக்க !

சுபம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. இந்துமத சடங்குகளும் தத்துவங்களும்
   பேராசிரியர் T. K. நாராயணன் M. Phil
2. இந்து சமயம்
   சுவாமி மதுசானந்தர்
3. சைவமத வினாவிடை
   வித்துவான் மறை திருநாவுக்கரசு
4. சித்தாந்த சைவ வினாவிடை
   கு. திருஞான சம்பந்தசாமிப்பிள்ளை
5. தர்மசாத்திரங்கள்
   எஸ். சுப்பிரமணிய ஐயர்
6. இந்து நாகரிகம்
   க.சி. குலரத்தினம்
7. இந்துமத தெய்வக் கொள்கை
   கல்யாணசுந்தரம்பிள்ளை
8. இந்துதர்மம்
   சுவாமி சிவானந்தர்
9. இந்து சமய தத்துவம்
   ரி. எம். பி. மகாதேவன்
10. தர்ம சக்கரம்
    மாத இதழ்
11. ஆன்மிகம்
    மாத இதழ்
12. தரிசனம்
    மாத இதழ்
13. ஞானவழி
    மாத இதழ்


✦✦✦




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துமதம் என்ன சொல்கிறது, பாகம் - 1
என்ற எனது நூலில்
திருக்கோயில் அமைப்பு, திருவுருவங்களின்
விளக்கங்கள், தெய்வ வழிபாட்டு முறைகள்
பற்றிய விடயங்கள் இடம் பெற்றன.

இந்து சமயிகளின் வாழ்க்கையானது
கிரியைகள், சடங்குகள், அனுட்டானங்கள்,
சம்பிரதாயங்கள் ஆகியவற்றுடன்
பின்னிப் பிணைந்துள்ளது.
இவற்றைக் கடைப்பிடிக்குமிடத்து
பயன்படுத்தப்படும் பொருட்கள்
மங்கலப் பொருட்களாகும்.
இத்தகைய மங்கலப் பொருட்கள் யாவை?
அவற்றின் தாற்பரியம் எத்தகையது?
அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?
அவற்றிற்குரிய சமய தத்துவப்
பின்னணி யாது? போன்ற விடயங்கள்,
இந்து மதம் என்ன சொல்கிறது. பாகம் - 2
என்ற இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் அடங்கிய விடயங்கள் யாவும்
இந்து சமயிகள் யாபேரும் அறிந்திருக்க
வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

- ஆசிரியர்

ஞானம்
பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org